www.gnanam.info
www.gnanam.lk


ஏப்ரல் 2023

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

275

விலை :
ரூபா 100/=



## ஞானம் கவிதைகள்
### ஆய்வு
### சிறப்பிதழ்

11 APR 2023
யாழ். மாநகர சபை
11 APR 2023
தாபனப்பகுதி

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் நாணயங்கள்... 4

ஞா.பா.

இலங்கையில் இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமையான அனுராதபுர காலத்திலே பெண்ணுருவம் தாங்கி வெளியான லக்ஷ்மி நாணயங்களை நாம் பார்த்தோம். பெண் தெய்வம் லக்ஷ்மிக்கும் செல்வத்துக்கும் புராண காலந்தொட்டு தொடர்புள்ளமை நாம் அறிந்ததே. நாணயங்களிலே **லக்ஷ்மி** என்று பொறிக்கப்பட்ட நாணயங்களும் இலங்கையிலே வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## (07) லக்ஷ்மி தங்க நாணயம் – 1/4 கஹவனு (களஞ்சு) நாணயம்

9–10ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையிலே சோழர்களின் ஆட்சிக் காலத்திலே பலவகையான தங்க நாணயங்கள் வெளியிடப்பட்டன. இராஜராஜன் வெளியிட்ட **லங்காவிபு** என்னும் நாணயத்தை நாம் இத்தொடரிலே அறிந்துகொண்டோம். இக்காலப் பகுதியிலே வெளியிடப்பட்ட 1/4 களஞ்சு பெறுமதியைக்கொண்ட (அதாவது ஏறத்தாழ 1 கிராம் நிறையுள்ள) நாணயங்களும் எமக்குக் கிடைக்கப்பெறுகின்றன. இந்த நாணயங்களிலே மற்ற நாணயங்களில் காணப்பெறாத ஒருசில சிறப்பம்சங்கள் உள.



இடது பக்கத்திலே ஒரு களஞ்சு நாணயம் வலது பக்கத்திலே கால் களஞ்சு நாணயம். நாணயங்களின் இருபுறங்களும் காட்டப்பட்டுள்ளன. ஒரு களஞ்சு நாணயத்திலே லங்காவிபு என்றும் கால் களஞ்சு நாணயத்திலே லக்ஷ்மி என்றும் தேவநாகரியில் பொறிக்கப்பெற்றுள்ளன.



கால் களஞ்சு - லக்ஷ்மி நாணயத்தின் பெரிதாக்கிய படம்


ஒரு களஞ்சு நாணயத்தினதும் கால் களஞ்சு – லக்ஷ்மி நாணயத்தினதும் நிற்கும் மனித உருவத்தை நோக்கும்போது, கால் களஞ்சு நாணய மனித உருவத்திலே ஒரு காலானது சற்று மடித்து தூக்கியவண்ணம் உள்ளதைக் காணலாம். இவ்வாறான கால் அமைப்புடன்கூடிய மனித உருவங்கள் பிற நாணயங்களிலே இல்லை என்பது கவனத்துக்குரியது. மேலும் நாணயங்களிலே பொதுவாக லங்காவிபு, ராஜராஜ, விஜயபாகு, பராக்கிரமபாகு என்று மன்னர்களின் பெயர்களிலே பொறிக்கப்படுவது வழக்கம். ஆனால், கால் களஞ்சு – லக்ஷ்மி நாணயத்திலே மன்னனின் பெயர் பொறிக்கப்படாமல் **லக்ஷ்மி** என்று பொறிக்கப்பட்டுள்ளது.

## (08) நாகபட்டிணத்தில் வெளியிடப்பட்ட இலங்கைக்குரிய நாணயங்கள்

நாக நாடு என்னும் சொற்பதம் புராண காலம் தொட்டு பயன்பாட்டில் உள்ளதைக் காணலாம். கந்தபுராணத்தின் திருநகரப் படலத்திலே கைலாய பிரதேசத்துக்கு கீழ்ப்புறத்திலே நாக நாடு (நாகலோகம்) அமைந்துள்ளதான குறிப்பு உள்ளதைக் காணலாம். மேலும் மணிமேகலை மற்றும் மகாவம்ச நூல்களிலே நாக மன்னர்களுக்கு இடையிலே ஏற்பட்ட பிணக்கை, புத்தர் சென்று தீர்த்ததான கதை உள்ளது. இவ்வாறாக நாகநாடு பற்றி பரவலான இலக்கிய ஆதாரங்கள் கிடைக்கப்பெற்ற போதும், யாழ்ப்பாணத்து வல்லிபுர ஆலயத்திலே கிடைக்கப்பெற்ற பொன்னேட்டிலே நாகதீவு பற்றிய பதிவுள்ளமை இலங்கையின் வடபாகத்துக்கும் நாக நாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதை உறுதிசெய்கிறது. தமிழ்நாட்டிலுள்ள நாகபட்டினம், நாகர்கோயில், இலங்கையிலுள்ள நயினாதீவு ஆகியவற்றின் தற்கால அமைவிடங்கள் நாகநாட்டின் தேச வரையறையானது காலத்துடன் மாறிவந்துள்ளது என்னும் எடுகோளுக்கு துணைபுரிகின்றது.

மேக நாட்டிற்கும் விஞ்சையர் நாட்டிற்கும் விண்ணோர்
மாக நாட்டிற்கும் மலரய னாட்டிற்கும் மற்றை
**நாக நாட்டிற்கும்** பாதல நாட்டிற்கும் நணுகிப்
போக நாட்டிய பொன்மதில் ஆனதப் புரிசை

கந்தபுராணம் – திருநகரப் படலம்



1ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வல்லிபுர பொன்னேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

ஞானம்
ஒளி: 23
சுடர்: 11
275

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

ஆசிரியர் குழு
ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்
நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்
ஓவியர்: கிறிஸ்டி நல்லரெத்தினம்

தொடர்புகளுக்கு

தொ. பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506
தொ. நகல் ☞ 0094-11-2362862
இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை
மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6,
Sri Lanka
வங்கி விபரம் ☞ T. Gnanasekara Iyer
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)
சந்தா விபரம் ☞ Sri Lanka
ஒரு வருடம் : ரூ 1,000/=
ஆறு வருடம் : ரூ 5,000/=
ஆயுள் சந்தா : ரூ 20,000/=

ஒரு வருடம்

| | |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |

⊙ ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
⊙ புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
⊙ பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
⊙ படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.

## இதழினுள்ளே.....



⊙ **ஆய்வு**
முனைவர் கோட்டி திருமுருகானந்தம் 03

⊙ **கவிதைகள்**
கே. சத்வித்தானந்தன்
பராக்கிரம கொடி துவக்கு /
மாவனல்லை எம். எம். மன்ஸூர் 38
மகாதேவ ஐயர் ஜெயராம சர்மா 42
யே. கிறித்துறாஜா 50
வதிரி சி. ரவீந்திரன் 59

⊙ **சிறுகதைகள்**
ஹுமைரா அல் அமீன் 39
ரஞ்ஜனி சுப்ரமணியம் 46
கே.எஸ்.சுதாகர் (குறுங்கதை) 53
கலாபூசணம் வீ.என்.சந்திரகாந்தி 55

⊙ **கட்டுரைகள்**
இரண்டாம் விசுவாமித்திரன் 43
வாகரைவாணன் 51
தமிழ்மணி மானா மக்கீன் 60
ஞா.பா.

⊙ **பத்தி**
பேராசிரியர் துரை மனோகரன் 62

⊙ **சமகால இலக்கிய நிகழ்வுகள்**
கே. பொன்னுத்துரை 64

யாழ். மாநகர சபை
11 APR 2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்

அன்பு நெஞ்சங்களே! வணக்கம்.

ஞானம் சஞ்சிகையின் 275ஆவது இதழ் உங்கள் கரங்களில் தவழ்கிறது.

ஈழத்தில் மாதந்தவறாது ஒழுங்காக வெளிவந்து 22 ஆண்டுகளை நிறைவுசெய்து வெற்றிநடைபோடும் ஒரே சஞ்சிகையென்றால் அது ஞானம் சஞ்சிகை மட்டுமே. அதே வேளையில் தரமான சஞ்சிகையாகவும் ஞானம் வெளிவந்துகொண்டிருக்கிறது என்பதற்குச் சாட்சியாக இலங்கையிலும் தமிழகத்திலும் உள்ள பல்கலைக்கழகங்களில் பல மாணவர்கள் ஞானம் இதழ்களை ஆய்வுக்கு உட்படுத்தி தமது பட்டப்படிப்பை நிறைவுசெய்து வருகிறார்கள்.

- தஞ்சைப் பல்கலைக்கழக மாணவி மா. ஷீலா ஞானம் 1-24 இதழ்களில் வெளிவந்த சிறுகதைகளை ஆய்வு செய்து M.Phil பட்டம் பெற்றுள்ளார்.
- தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த, தமிழ் கலைமாணி விசேடத்துறை B.A.(Hons) மாணவன் எச். எம். எம். மன்சூர் முதல் நான்கு ஆண்டு இதழ்களை 'ஞானம் இலக்கிய சஞ்சிகை' - ஒரு நோக்கு என்ற தலைப்பில் ஆய்வு செய்துள்ளார்.
- சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவி க.தயாழினி 2004-2005ஆம் வருட இதழ்களைத் தனது கலைமாணி விசேட கற்கை B.A.(Hons) நெறிக்காக ஆய்வு செய்துள்ளார்.
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு. க. காந்தரூபன் 'ஞானம் சஞ்சிகை ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் சிறப்புக் கலைமாணிக்கான B.A.(Hons) ஆய்வினை (2004) நிறைவு செய்துள்ளார்.
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திருமதி வித்தியாதேவி மகேந்திரன் 'ஞானம் சஞ்சிகை ஜூன் 2002 -மே 2006 இதழ்களில் வெளிவந்த சிறுகதைகள் ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் தமது முதுமாணிப் பட்டப்படிப்புப் பகுதித் தேவையை (M.A.) 2011இல் பூர்த்தி செய்துள்ளார்.
- கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திருமதி கோமகள் அருண் றோஜன் 'ஞானம் சஞ்சிகைச் சிறுகதைகள் ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் 1 முதல் 100 இதழ்களில் வெளிவந்த சிறுகதைகளை ஆய்வு செய்து தமது முதுமாணிப்பட்டப் படிப்பினை (M.A.) 2011இல் நிறைவு செய்துள்ளார்.
- தமிழக தஞ்சைப் பல்கலைக்கழக மாணவி திருமதி கு. ரேணுகாதேவி ஞானம் முதல் 50 இதழ்களை ஆய்வு மேற்கொண்டு இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஞானம் இதழின் பங்களிப்பு குறித்து முனைவர்- கலாநிதி பட்டப்படிப்பினை (PhD) நிறைவுசெய்து பட்டம் பெற்றுள்ளார்.
- ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக கலைமாணி சிங்களமொழி விசேடத்துறை மாணவி மிகிராணி ஞானம் சஞ்சிகையில் 2009 முதல் 2013 காலப்பகுதியில் வெளிவந்த கவிதைகளில் "போருக்குப்பின்னரான தமிழ்மக்களின் நிலைமை மற்றும் அவர்களது உணர்வுகள் சார்ந்த விடயங்கள் எவ்வாறு பிரதிபலித்தன" என்பது பற்றிய ஆய்வை மேற்கொண்டு தனது பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளார்.
- இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவி ம. குஷானி ஞானம் சஞ்சிகையில் 2016 முதல் 2019 டிசம்பர் வரை வெளிவந்த சிறுகதைகள் பற்றிய ஆய்வினை மேற்கொண்டு தமிழ்ச் சிறப்பு கலைமாணிப்பட்டப் படிப்பினை நிறைவு செய்துள்ளார்.

இவையெல்லாம் ஞானம் சஞ்சிகையின் இலக்கிய தரத்தின் சாட்சிகள்; அறிவுலக அங்கீகாரங்கள்.

உலகச் சிற்றிதழ்கள் வரலாற்றில் கலாநிதிப் பட்டப்படிப்புக்கு உட்படுத்தப்பட்ட ஒரே ஒரு சிற்றிதழ் ஞானம் மட்டுமே. அத்தோடு அதிகமான பல்கலைக்கழக ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்ட சிற்றிதழாகவும் ஞானம் திகழ்கிறது என்பதில் நாம் பெருமையடைகின்றோம்.

இந்த இதழில் சிங்கப்பூரைச் சேர்ந்த முனைவர் கோட்டி திருமுருகானந்தம் அவர்களது "ஞானம் - கலை இலக்கிய சஞ்சிகை கவிதைகள் ஒரு கண்ணோட்டம்" என்ற ஆய்வு நோக்கில் அமைந்த கட்டுரையை வெளியிடுவதில் நாம் மகிழ்வு கொள்கிறோம்.

○○○


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம் - கலை இலக்கியச் சஞ்சிகை கவிதைகள்
## ஒரு கண்ணோட்டம்



**முனைவர் கோட்டி திருமுருகானந்தம்**
**சிங்கப்பூர்**

கோட்டி திருமுருகானந்தம் தென்னாற்காடு மாவட்டம் (இன்றைய விழுப்புரம் மாவட்டம்) செஞ்சிக்கு அருகிலுள்ள பெருவளூர் கிராமத்தில் மே மு கோட்டி முதலியார், சொர்ணம்மாள் தம்பதியருக்கு மூன்றாம் மகனாய் பிறந்தவர். தொடக்கக் கல்வியைப் பெருவளூர் தொடக்கப் பள்ளியில் பயின்றபின் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள இந்துமத பாடசாலை என்னும் திரு. வா தி மாசிலாமணி முதலியார் உயர்நிலைப் பள்ளியில் கற்றார். அதன்பின் சென்னையிலுள்ள அரசினர் கலைக் கல்லூரியில் புகுமுக வகுப்பை முடித்ததும் இலயோலா கல்லூரில் இளங்கலை தமிழ் இலக்கியமும் பச்சையப்பன் கல்லூரியில் முதுகலை தமிழ் இலக்கியமும் பயின்றார். பிறகு சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியர் கல்லூரியில் இளங்கலை கல்வியியல் பயின்றார். சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதைகள்-ஓர் ஆய்வு என்னும் தலைப்பில் ஆய்வு செய்து பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

ஆசிரியப் பயிற்சி முடித்ததும் ஜஸ்டிஸ் பசீர் அகமது சையது நினைவு மெட்ரிக்குலேசன் ஆண்கள் மேனிலைப் பள்ளியில் முதுகலை தமிழாசிரியாக 1985ஆம் ஆண்டு முதல் 1993ஆம் ஆண்டு வரை பணியாற்றியுள்ளார். 1994ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூர்க் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் தொடக்கக் கல்லூரியில் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் கற்றுக் கொடுத்து வருகிறார்.

உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, உலகத் தமிழாசிரியர் மாநாடு, பன்னாட்டுக் கல்வியியல் மாநாடு, இணைய மாநாடு, உலக எழுத்தாளர் மாநாடு எனத் தேசிய மாநாடுகளில் உலக மாநாடுகளில் ஆய்வுக்கட்டுரை படைத்துள்ளார். மலேசியாவிலுள்ள மலாயாப் பல்கலைக் கழகம், சுல்தான் இத்திரிஸ் கல்வியியல் பல்கலைக் கழகங்களில் ஆய்வுக்கட்டுரை படைத்துள்ளார். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிங்கப்பூரில் நடக்கும் பலதரப்பட்ட போட்டிகளின் நடுவராகப் பணியாற்றி வருகிறார்.

சிங்கப்பூர், மலாயாவில் 1963ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரை வெளிவந்துள்ள தமிழ்க் கவிதை நூல்களைத் தொகுத்து சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதை வரலாறு என்னும் நூலை 2012ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். பன்முக நோக்கில் சிங்கப்பூர்க் கவிதைகள் என்னும் நூல் சிங்கப்பூர்த் தமிழ்க் கவிதைகளைப் பன்முக நோக்கில் ஆராய்ந்துள்ளது. சி கு மகுதூம் சாயபுவும் சிங்கை நேசனும்-ஓர் ஆய்வு என்னும் நூல் 1887ஆம் ஆண்டு முதல் 1890ஆம் ஆண்டு வரை சிங்கப்பூரில் வெளிவந்துள்ள சிங்கை நேசன் வார இதழைத் தொகுத்தும் பகுத்தும் ஆராய்ந்துள்ளது. 1875ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை மலாயா, சிங்கப்பூரில் வளிவந்துள்ள இதழ்களை, மலர்களைத் தொகுத்தும் பகுத்தும் சிங்கப்பூர் இதழியல் வரலாறு என்னும் நூலை 2019ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார்.

சிங்கப்பூர்த் தமிழ்க்கவிதை வரலாறு என்னும் இவருடைய முதல் நூலுக்குச் சிங்கப்பூர் அரசின் புத்தக மேம்பாட்டு நிறுவனம் வழங்கிய சிங்கப்பூர் இலக்கிய விருதினை 2014ஆம் ஆண்டு பெற்றுள்ளார். பன்முக நோக்கில் சிங்கப்பூர்க் கவிதைகள் என்ற இரண்டாவது நூலுக்குச் சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம் வழங்கிய ஆனந்தபவன் மு கு இராமச்சந்திரா நினைவுப் பரிசினை 2015ஆம் ஆண்டு பெற்றுள்ளார். சி கு மகுதூம் சாயபுவும் சிங்கை நேசனும்-ஓர் ஆய்வு என்னும் நூலுக்குச் சிங்கப்பூர் அரசின் புத்தக மேம்பாட்டு நிறுவனம் வழங்கிய சிங்கப்பூர் இலக்கிய விருதினை 2016ஆம் ஆண்டு பெற்றுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை கவிதைகள் ஒரு கண்ணோட்டம்

உலகில் ஏராளமான பத்திரிகைகள் செய்திகளையும் பலதுறை சார்ந்த தகவல்களையும் மக்களுக்கு எடுத்து இயம்புகின்றன. இந்த பத்திரிகைகளில் பல மக்கள் சார்ந்தவை. பல அரசியல் சார்ந்தவை. பல வியாபார நோக்கம் கொண்டவை. சில இலக்கிய நோக்கம் கொண்டவை எனப் பத்திரிகைகளை ஒரு வகையாகவும் நாளிதழ்கள், வார, மாத, பருவ இதழ்கள் என வேறுவகையாகவும் பகுக்கலாம். இவ்வகையில் இலங்கையில் பத்திரிகைகள், இதழ்கள் காலந்தோறும் தோன்றி மக்கள் விழிப்புடன் வாழவழிவகுக்கின்றன.

**இலங்கையின் தொடக்ககாலச் சஞ்சிகைகள்:**

ஆங்கிலேயர் வருகை, மக்களின் எழுச்சி, கிறித்தவ மதம் பரவல், அச்சு இயந்திர வருகை போன்றவற்றால் தமிழகத்தில் பத்திரிகைகள் தோற்றம் பெற்றன. இதன் தாக்கத்தால் இலங்கையிலும் தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் தோன்றின. 1841ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து வெளிவந்த உதயதாரகை என்னும் பத்திரிகையைத் தொடர்ந்து ஈழநாடு, சத்திய வேத பாதுகாவலன், இந்து சாதனம், முஸ்லிம் நேசன், உதயாதித்தன், தேசபக்தன், ஈழகேசரி, வீரகேசரி, தினகரன், தின வர்த்தமானி முதலிய பத்திரிகைகள் தோன்றின. இவை சமகால அரசியல், இந்திய அரசியல், உள்நாட்டு அரசியல் முதலான செய்திகளுடன் இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் பணியாற்றியுள்ளதை மறுக்க முடியாது.

**இலங்கை இலக்கியச் சஞ்சிகைகள்:**

ஞாயிறு, மறுமலர்ச்சி, ஈழமணி, பாரதி, புதுமை இலக்கியம், கலைச்செல்வி, மரகதம், விவேகி, வசந்தம், இளம்பிறை, மல்லிகை, எழில், நாவேந்தன், குங்குமம், கற்பகம், சிலம்பொலி, மலர், தமிழமுது, குமரன், வைகறை, பொய்கை, காவலன், களனி, கலை, அலை, தீர்த்தக்கரை, மேகம், வாகை, தாரகை, மாற்று, களம் போன்ற இலக்கிய இதழ்கள் இலங்கை இலக்கியத்தை வளர்த்துள்ளன. தேன்மொழி, நோக்கு, கவிஞன் முதலான இதழ்கள் மரபுக்கவிதையை வளர்க்கும் நோக்கில் வந்துள்ளன. அப்துல் சத்தாரின் க-வி-தை, அன்பு ஜவஹர் ஷாவின் பொறிகள், சரவணையூர் சுகந்தனின் சுவடுகள், புத்தளம் விடிவெள்ளிகளின் விடிவெள்ளிகள், இப்னு அஸூமத்தின் பூபாளம், புத்தளத்திலிருந்து வெளிவந்த பொன் மடல் போன்றன புதுக் கவிதையை வளர்த்துள்ளன. இவைகளைத் தவிர வேறு இலக்கிய இதழ்களும் வந்து உள்ளன. இவைகளைத் தொடர்ந்து "ஞானம் கலை இலக்கிய மாத இதழ்" வந்து கொண்டிருக்கிறது.

**ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை – தோற்றமும் வளர்ச்சியும்:**

இலங்கையிலிருந்து தற்போது வெளிவரும் இலக்கிய இதழ்களுள் ஞானம் கலை இலக்கிய இதழ் மாதாந்திர இதழாகும். தி. ஞானசேகரன் இதன் ஆசிரியர் ஆவார். ஞானத்தின் முதலாவது இதழ் 2000ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1/8 அளவில் 32 பக்கங்களுடன் வெளிவரத் தொடங்கி படிப்படியாகப் பக்கங்களின் எண்ணிக்கை அதிகரித்து எண்பத்து நான்காவது இதழிலிருந்து பெரிய அளவில் அதிக பக்கங்களுடன் வந்து கொண்டிருக்கிறது. ஞானம் தொடங்கியது முதல் இன்று வரை இருநூற்று எழுபத்தொரு இதழ்கள் -2022 டிசம்பர் வரை - வந்திருக்கிறது.

**ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையின் நோக்கம்:**

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் என்ற முழக்கத்தோடு ஞானம் கலை, இலக்கியச் சஞ்சிகை இலங்கையில் கடந்த பதினெட்டு ஆண்டுகளாக வெற்றி நடை போடுகிறது. இம்முழக்க வரி மனித வாழ்விற்கும் ஞானம் இதழுக்கும் பொருத்தமாய் அமைந்துள்ளது. மக்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளும்போது அவர்களின் அறிவாற்றலை உலகம் அறிகிறது, மக்களும் பயன் அடைகிறார்கள். அதைப் போல ஞானம் மாத இதழில் தங்கள் எண்ணங்களை, கருத்துகளைப் படைப்பாளர்கள் படைப்பதால் - பகிர்வதால் - வாசகர்கள் பயன் அடைகிறார்கள், இலக்கியம் வளர்ச்சி அடைகிறது, இலங்கை இலக்கியம் அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்வதற்கு வாய்ப்பாக அமைகிறது. இவ்வாறு ஒன்றிற்கு மேற்பட்ட பயன்களைப் பகிர்த்தல் என்னும் சொல் இங்குக் குறித்து நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அன்புள்ள இலக்கிய நெஞ்சங்களே, வணக்கம். தரமான இலக்கியச் சஞ்சிகை ஒன்றினைத் தொடர்ந்து வெளியிடுவது என்பது மிகவும் சிரமமான பணி இதனை நன்கு தெரிந்த பின்னரே இந்த ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையை வெளிக் கொணர்கின்றோம்.*

*நிதிப்பற்றாக் குறை, எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்களைப் பெறுவதில் உள்ள சிரமம், ஜனரஞ்சக சஞ்சிகைகளின் ஆக்கிரமிப்பு, மக்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருதல் ஆகிய காரணிகள் ஒரு தரமான இலக்கியச் சஞ்சிகையின் இருப்பினைப் பெரிதும் பாதிக்கும் காரணிகளாக அமைகின்றன. இருப்பினும், காலத்துக்குக் காலம் தரமான சஞ்சிகைகள் தோன்றிய வண்ணமே இருக்கின்றன. இலக்கியத் தாகமும் ஈடுபாடும் அர்ப்பணிப்பு உணர்வும் கொண்டவர்களால் இத்தகைய சஞ்சிகைகள் வெளிக்கொணரப் படுகின்றன. தரமான வாசகர்கள் இத்தகைய சஞ்சிகைகளைத் தேடி வாசிக்கின்றனர். இலக்கியப் பாரம்பரியங்கள், இலக்கிய உலகில் ஏற்படும் மாற்றங்கள், வளர்ச்சிப் போக்குகள், கருத்தோட்டங்கள் போன்றவற்றின் காலக் கண்ணாடியாக இச்சஞ்சிகைகள் மிளிர்கின்றன. தரமான எழுத்தாளர்கள் இச்சஞ்சிகைகள் முலமாகவே இனங்காட்டப் படுகின்றனர். ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை மூலம் இலக்கிய உலகிற்கு எம்மாலான பணியைத் தொடர விழைகின்றோம். இச்சீரிய பணிக்குத் தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் தமது பேராதரவினை நல்க வேண்டு மென அன்புடன் வேண்டுகின்றோம்.*

என முதல் தலையங்கத்தில் இதழாசிரியர் ஞானசேகரன் குறிப்பிட்டுள்ளார். இதை இன்று வரை செய்து வருகின்றார் என உறுதியாகக் கூறலாம். கவிதை, கதை, விமர்சனம், கட்டுரை, பத்தி எழுத்து, சிறப்பு மலர்கள், புலம்பெயர் இலக்கியவாதிகளை அடையாளம் காணுதல், போட்டிகள் மூலம் புதிய படைப்பாளர்களை உருவாக்குதல், தமிழர்களை ஒருங்கிணைத்தல், இலங்கை தமிழ் இலக்கியத்தைத் தமிழர்களிடம் கொண்டு சேர்த்தல் என மொழி வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி முதலியவற்றை முன்னிறுத்தி வந்து கொண்டிருக்கிறது.

ஞானம் இதழ் மாதந்தோறும் வருகிறது. இலங்கையில் இனக்கலவரம் உச்சத்தில் இருந்தபோதும் தமிழர்களுக்கு வேண்டிய தகவல்களைத் தர தயங்கவில்லை. ஞானத்தின் வளர்ச்சியைக் கவிஞர்கள் பாராட்டி உள்ளனர். இக்கவிதைகளில் ஞானத்தின் அகப், புறக் கட்டமைப்புகளையும் கூறியுள்ளனர்.

**திங்கள்வான் தோன்றத் தவறிட லாம் ஞானம்**
**திங்கள் தவறாதே தோன்றுமெலாத் – திங்களும்முன்**
**வாரத்தில் வந்தேநம் வாசற் கதவொலிக்கும்**
**சீராக வென்பேன் சரி.**

**புத்தம் புதிதாய்ப் படைப்போர்க்கும் செந்தமிழில்**
**வித்துவம் காட்ட வகைசெய்யும் – ஒத்தே**
**வளர்ந்தோர்க்கும் வாய்ப்பு வழுங்குமே ஞானம்**
**அளந்தல்ல அள்ளியே தான்.**

**புதியவரைக் கைதூக்கிப் பேர்கொள்ள வைக்கும்**
**அதியுயர்ந்த சேவைகீ டில்லை – கதியவர்க்கு**
**ஞானம் தான் வேறில்லை நற்றமிழின் பிற்காலம்**
**காணுமவர் பொற்கரத்திற் றான்.**

**வான்பிறைக ளாயிரமாய் விடியட்டும் ஞானம் தன்**
**கோன்மை குறையா தொளிரட்டும் – வான்பிறையின்**
**வண்ணத் திருக்கோலம் விண்டு வளர்வதுபோல்**
**திண்ணம் வளரும் அது.**

(ஜின்னாஹ், ஞானம் 100, செப்டம்பர் 2008, ப. 12)

எனக் கவிஞர் ஜின்னாஹ், ஞானம் இதழ் மக்களுக்கும் இலக்கியத்திற்கும் பணியாற்றும் பான்மையைப் பாராட்டியுள்ளார். மேலும் ஞானத்தின் கூறுகளையும் பாடியுள்ளார்.

**முத்தமிழின் சுவை மணக்கும் மூதறிஞர் பலர் வழுங்கும்**
**எத்தனையோ துறைசார்ந்த எண்ணங்கள் நிறைந்திருக்கும்**
**வித்தகர்கள் வீசுகின்ற விவாதங்கள் கனல்பறக்கும்**
**தத்திநடை பயிலிளவல் சகலருக்கும் களம் அமைக்கும்**
**யுத்தமெனும் பெருநெருப்பின் மத்தியிலும் இதழ் விரித்துப்**
**புத்தம் புதுமலராய்ப் பொசுங்காது பூத்து நிற்கும்**
**கத்தும் கடல்தாண்டிக் கண்டமெல்லாம் மணம் பரப்பும்**
**வித்தையினை ஞானத்தை மெச்சிமிக உவக்கின்றேன்.**

(கந்தராசா, ஞானம் 100, செப்டம்பர் 2008, ப. 11)

எனக் கந்தராசா ஞானம் இதழ் இலங்கை மக்களின் துயர்களைப் போக்க வேண்டும், தமிழ் இலக்கியத்தை வளர்க்க வேண்டும் என வாழ்த்துகிறார். இலங்கை இதழியல் வரலாற்றில் ஞானம் கலை இலக்கிய இதழுக்கென்று வாசகர் வட்டம் ஒன்று இருக்கிறது. இவர்கள் ஞானத்தின் வளர்ச்சியில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். அதைப் போலவே ஞானம் இதழும் இவர்கள் வளர ஆர்வம்காட்டி இலக்கிய வானில் ஒளிவீச உதவுகிறது. இலங்கை தமிழ் இலக்கியத்தை உலகத் தமிழர்களிடம் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கும் வண்ணம் இணைய இதழாகவும் வருகிறது எனக் கவிஞர்கள் ஞானம் இதழைப் பாராட்டுகின்றனர்.

**ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையின் வடிவமும் உள்ளடக்கம்:**

உலகம் சுருங்கி குக்கிராமாக மாறிவரும் இவ்வேளையில் மக்களின் சிந்தனை போக்கிலும் அதிக மாற்றங்களைக் காணமுடிகிறது. மேலும் அதிவேகமாக வளர்ந்து வரும் தகவல் சாதனங்கள் மக்களின் அன்றாட வாழ்வில் பின்னிப் பிணைந்து உள்ளன. உலக மக்கள் அனைவரும் பரபரப்பான சூழலில் வேலை, குடும்பம் என்ற இரண்டிலும் நேரத்தை ஒதுக்க முடியாது அல்லலுறுகின்றனர். இத்தகைய மனப் போக்குடன் வாழும் மக்களுக்காக இதழ் நடத்துவது அவ்வளவு எளிதான காரியமல்ல. மேற்கூறியவற்றை எல்லாம் மனதில் கொண்டு செயல்பட வேண்டிய கட்டாயத்தில் மக்கள் அனைவரும் இருக்கும்போது இதழ் நடத்துப வர்கள் இதை விட அதிகம் சிந்தித்துச் செயல்பட வேண்டிய நிலையில் உள்ளார்கள். அதனால் இதழ் மக்களைச் சென்றடைய வேண்டியது அவசியம். இல்லையேல் பயன் ஏதுமின்றி உழைப்பு வீணாவதுடன் பொருளும் விரயமாகும். இவற்றையெல்லாம் மனதில் கொண்டு ஞானம் இதழாசியர் காலத்திற் கேற்ற படைப்புகளைத் தந்து ஞானத்தைத் தொடர்ந்து வெளியிட்டு இருக்கிறார் என்னும்போது அவரது உழைப்பைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதுவும் இலங்கையில் உள்நாட்டுப் போர் உச்சத்தில் இருந்தபோதும் தடையின்றி வெளியிட்டமை அவரது திறமையைக் காட்டுகிறது.

வணிகப் பத்திரிகைளுடன் போட்டியிட்டுக் கலை இலக்கிய இதழ் நடத்துவது என்பது எளிய செயல் அல்ல. வர்த்தகப் பத்திரிகைகள் அதிக விளம்பரங்களைப் பெற்று வருகின்றன. கவர்ச்சியான அட்டைப் படங்களைப் போட்டு மக்களைத் தன்பால் ஈர்க்கின்றன. ஆனால் ஞானம் இலக்கியத்தை வளர்க்கும் நோக்குடன் வர்த்தக நோக்கமின்றி மிகக் குறைந்த விளம்பரங்களுடன் நாளும் வளர்ந்து வருவது உண்மை. இதற்கு ஞானம் இதழிலுள்ள உள்ளடக்கம், மக்களின் தொடர்ந்த ஆதரவு, இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் நல்லாதரவு முதலியன காரணங் களாகின்றன.

ஞானத்தின் உள்ளடக்கத்தைத் தொடக்கம் முதல் உன்னிப்பாகக் கவனித்தால் சில பொதுவான உண்மைகள் புலப்படும். இலங்கை யில் வாழும் மூத்த படைப்பாளர் படைப்புகளை வெளியிடும் நேரத்தில் புதிய படைப்பாளர்களை அறிமுகப் படுத்துதல், இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் படைப்பு களை வெளியிடுதல், உரைச்சித்திரம், ஈழத்து இலக்கிய நம்பிக்கைகள், கட்டுரை, கவிதை, கடிதம், கேள்வி பதில், சமகால இலக்கிய நிகழ்வுகள், சிறுகதை, சினிமா விமர்சனம், தலையங்கம், திரும்பிப் பார்க்கிறேன், நானும் என் எழுத்தும், நாடக விமர்சனம், நெற்றிக்கண், நேர்காணல், நேற்றைய கலைஞர்கள், நூலறி முகம், பத்தி எழுத்து, புதிய நூலகம், பயணக் கட்டுரை, புலம்பெயர்ந்தோர் இலக்கியம், வாசகர் பேசுகிறார், விவாத மேடை, விவாதம் எனப் பலதரப்பட்ட உள்ளடக்கங்களை ஞானம் காலத்திற்கேற்ப படைத்து வருகிறது. இதனால்தான் இன்றும் தொடர்ந்து வெற்றி நடை போடமுடிகிறது. இல்லையேல் பிற இலக்கிய இதழ்களைப் போல தோன்றிய வேகத்தில் மறைந்திருக்கும் என்பதுண்மை.

**ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையின் சிறப்பு மலர்கள்:**

இதழ் ஒன்று முதல் இதழ் இருநூறு வரை ஞானம் பதினேழு சிறப்பு மலர்களை வெளியிட்டு உள்ளது. இந்தப் பதினேழு மலர்களும் தனித் தன்மை வாய்க்கப் பெற்றவை. அந்தந்த இதழின் நோக்கத்தை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்து உள்ளது. இரண்டாவது ஆண்டு மலர்(ஜூன் 2001), மூன்றாவது ஆண்டு மலர்(ஜூன் 2002), எழுத்தாளர் கே. கணேஷ் சிறப்பு மலர்(டிசம்பர் 2002), அவுஸ்திரேலிய நான்காவது தமிழ் எழுத்தாளர் விழா சிறப்பிதழ்(பிப்ரவரி 2004), சர்வதேச மகளிர் தினச் சிறப்பிதழ் (மார்ச்சு 2004), பொன் மலர்(ஜூலை 2004), வரதர் நினைவு மலர்(ஜனவரி 2007), பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி பவளமலர் (மே 2007), சிற்பி சிவசரவணபவன் பவள விழாச் சிறப்பிதழ்(ஜூன்2008), ஈழத்து நவீன இலக்கியச் சிறப்பிதழ் (செப்டம்பர் 2008), எஸ். பொ. சிறப்பு மலர் (டிசம்பர் 2009), தெளிவத்தை ஜோசப் பவளமலர்(மே 2010), சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011 இலங்கை சிறப்பிதழ் (ஜனவரி 2011), ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழ் (நவம்பர் 2012), ஈழத்து அறிஞர் தமிழ்த்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டுச் சிறப்பு மலர் (ஆகஸ்ட்டு 2013), ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம் சிறப்பிதழ் (டிசம்பர் 2014), ஈழத்துத் தமிழ் நவீன இலக்கிய வெளி சிறப்பிதழ் (டிசம்பர் 2017) எனப் பதினேழு சிறப்பு மலர்களும் இலக்கியத் தரத்துடன் விளங்குகின்றன.

இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றிய சான்றோர் பலருக்கு ஞானம் சிறப்பு மலர்களை வெளியிட்டு அவர்களைப் பெருமைப் படுத்தியுள்ளது. மலையகத்தின் மூத்த படைப்பாளி, முற்போக்கு எழுத்தாளர் சங்க நிறுவனர் கே. கணேஷ், இலங்கை இலக்கியத்திற்குப் பெரும் பணியாற்றியதுடன் மறுமலர்ச்சி சஞ்சிகை வெளியிட்ட வரதர், இலங்கை பேரறிஞர் கார்த்திகேசு சிவத்தம்பி, கலைச்செல்வி சஞ்சிகை மூலம் இலங்கை நவீன இலக்கியத் துறைக்குப் பங்கு ஆற்றிய சிற்பி சிவசரவணபவன் ஆகியோருக்குச் சிறப்பு மலர்களை வெளியிட்டு உலக அரங்கில் இவர்கள் சிறப்புகளை, பெருமைகளை உணர்த்தியது. இவை தவிர இலங்கை படைப்பாளிகள் பலரையும் அட்டைப் படத்தில் வெளியிட்டு அவர்கள் குறித்த சிறப்புக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. இதைப் போலவே ஞானம் வெளியிட்டுள்ள பிற சிறப்பிதழ்களும் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன.

**ஞானம் சஞ்சிகை குறித்த ஆய்வுகள்:**

ஞானம் இதழ் குறித்துப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கையைத் தவிர இந்தியாவிலும் ஞானம் இதழ் குறித்த ஆய்வுகள் நடைபெற்று உள்ளன. இவ்விதழ் உள்ளடக்கத்தைக் கட்டிக்காக்க வேண்டியது அவசியமாகிறது. தரமற்ற இதழாக இருந்தால் ஆய்வு செய்ய முன்வரமாட்டார்கள் என்பது உறுதி.

1 இலங்கை திருகோணமலையைச் சேர்ந்த ஐ. குகநேசன், இலங்கை நூலக சங்கத்தின் நூலகத் தகவல் அறிவியல் பட்டயத் தேர்விற்கு முதல் ஈராண்டு ஞானம் இதழ் களைத் தொகுத்து வெற்றி பெற்றுள்ளார்.

2 தென்கிழக்குப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை மாணவரான எச். எம். எம். மன்சூர், ஞானம் இலக்கிய சஞ்சிகை - ஒரு நோக்கு என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை படைத்து உள்ளார். இவர் தன் ஆய்வுப் பொருண்மையாக ஞானத்தின் முதல் நான்கு ஆண்டு கால இதழ்களை எடுத்துக் கொண்டார்.

3 இலங்கை வவுனியாவைச் சேர்ந்த தி. அனுஷியா, தனது நூலக அறிவியல் பட்டயத் தேர்விற்கு ஞானம் நான்காம் ஐந்தாம் வருடங்களில் வெளிவந்த இருபத்து நான்கு இதழ்களைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

4 இலங்கை சாவகச்சேரியைச் சேர்ந்த வித்தியா மகேந்திரன், ஞானம் சிறுகதை கள் பற்றி ஆராய்ந்துள்ளார். இவர் நான்காண்டுகள் ஞானம் இதழை ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்டுள்ளார்.

5 திருமதி அர்ச்சிகா றோலின்சன் என்பவர் கொழும்பு பல்கலைக் கழக இதழியல் துறையின் பட்டயப் படிப்பிற்காக ஞானம் சஞ்சிகையின் முதல் நூற்று முப்பத்து ஒன்பது இதழ்களை ஆய்வு செய்துள்ளார்.

2009ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரை ஞானம் இதழில் வெளிவந்துள்ள கவிதைகளை, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக சிங்கள மொழி விசேடதுறை மாணவி மிகிராணி மதுசங்கிகா தமது கலைமாணி பட்டத்திற்கு ஆராய்ந்துள்ளார். இவர் உள் நாட்டுப் போருக்குப்பின் இலங்கைத் தமிழர் களின் நிலைமைகளை, உணர்வுகளை ஆராய்ந்துள்ளார்.

தமிழகத்திலும் இவ்விதழில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை:

1 தமிழகத்திலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழக அயல் நாட்டுக் கல்வித் துறை மாணவி மா. ஷீலா ஞானத்தில் வெளிவந்த சிறுகதைகளை ஆராய்ந்து எம். பில். பட்டம் பெற்றுள்ளார். இவர் ஞானத்தின் முதல் இருபத்து நான்கு இதழ்களில் வெளிவந்த கதைகளை ஆய்வு செய்துள்ளார்.

2 தமிழகத்திலுள்ள தமிழ்ப் பல்கலைக் கழக அயல் நாட்டுக் கல்வித் துறை மாணவி திருமதி.கு.ரேணுகாதேவி, ஞானத்தின் முதல் ஐம்பது இதழ்களை முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்துள்ளார்.

இவையெல்லாம் ஞானத்தின் இலக்கியத் தரத்தைக் காட்டுவதுடன் ஆய்வுக் களமாக ஞானம் கலை இலக்கிய மாத இதழ் திகழ்வதையும் காட்டுகிறது. இவைகளைத் தவிர வேறு ஆய்வுகளும் நடைபெற்று இருக்கலாம்.

இலங்கையிலிருந்து வந்து கொண்டிருக்கும் ஞானம் கலை இலக்கிய மாத இதழ் கடந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபது ஆண்டுகளாக தொடர்ந்து வருகிறது. இலங்கை உள்நாட்டுப் போர் உச்சத்தில் இருந்தபோதும் இலங்கைத் தமிழர்களின் உணர்வுகளைப் பிரதி பலித்துள்ளது. இலங்கைத் தமிழ் இலக்கியம் வளர வாய்ப்பளித்து படைப்பாளர்கள் உருவாக பாலமாக விளங்குகிறது. இந்நூலின் முற்பகுதி ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையின் முதல் இருநூறு இதழ்களிலுள்ள கட்டுரை, கவிதை, சிறுகதை, தலையங்கம், நேர்காணல், பத்தி எழுத்து, வாசகர் கடிதம், விமர்சனம் முதலான கூறுகளைப் பொதுவாகவும் கவிதை வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள பணிகளைச் சிறப்பாகவும் ஆராய்கிறது. இரண்டாம் பகுதி ஞானம் சஞ்சிகையின் உள்ளடக்கப் பொருண்மைகளின் ஆய்வடங்கலாக அமைகிறது.

**ஞானம் கவிதைகள்**

ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை சிறுகதை, கட்டுரை வளர்ச்சியில் ஆர்வம் காட்டுவதோடு கவிதை வளர்ச்சியிலும் ஆர்வம் காட்டுகிறது. இலங்கைக் கவிதை குறித்த ஆய்வுக் கட்டுரைகளைப் பொது நிலையிலும் சிறப்பு நிலையிலும் வெளியிடுதல், கவிதைகளை வெளியிடுதல், அட்டைப்படக் கவிதைப் போட்டி நடத்துதல், கவிதைப் போட்டி நடத்துதல், கவிதை நூல் மதிப்புரைகளை வெளியிடுதல் என இவ்விதழ் இலங்கைத் தமிழ்க் கவிதை வளர்ச்சிக்குப் பங்காற்றி வருகிறது. ஆய்வுக்குட்பட்ட காலத்தில் கவிதை குறித்து நூற்று ஏழு கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. இக்கட்டுரைகளை இலங்கைத் தமிழறிஞர்கள் படைத்துள்ளனர். இசைப் பாடல்கள், இயற்கை, இலங்கைக் கவிஞர், இலங்கைக் கவிதை, இலங்கைக் கவிதை நூல், கவிதை, கவிதை ஒப்பீடு, கவிதைக் கோட்பாடு, காதல், சிறுவர் பாடல்கள், தமிழ் இலக்கியம், தாயக கவிஞர், நாட்டார் பாடல்கள், நாட்டுப் பற்று, பா நாடகங்கள், புலம்பெயர்ந்தோர் கவிதை, பெண்ணியம், போர்க்காலக் கவிதை, ஹைகு கவிதைகள் எனப் பதினெட்டுத் தலைப்புகளில் இக்கட்டுரைகள் அமைந்துள்ளன.

**அட்டைப்பட கவிதைப் போட்டி நடத்துதல்:**

ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை இலங்கைத் தமிழ்க் கவிதையை வளர்க்கப் பல உத்திகளைப் பின்பற்றி வருகிறது. அவைகளில் ஒன்று அட்டைப்பட கவிதைப் போட்டியாகும். ஞானம் இதழிலுள்ள அட்டைப் படத்திற்குப் பொருத்தமான கவிதைகளை எழுதி அனுப்ப வேண்டும். 25-04-2008ஆம் நாளுக்கு முன்னர் சிறந்த கவிதை அனுப்புபவர்களுக்கு ஆறு மாதம் ஞானம் இனாமாக அனுப்பி வைக்கப்படும் என விளம்பரம் தந்துள்ளது. சென்ற இதழ் அட்டைப்படப் போட்டிக்கு ஏராளமான கவிதைகள் வந்தன. வாசகர்கள் உற்சாகத்துடன் இக்கவிதைப் போட்டியில் கலந்துக் கொண்டனர். போட்டி முடிவு தேதிக்குமுன் (25-03-2008) கிடைத்த கவிதைகளில் தகுதியானவை இங்கு வெளியிடப்படுகின்றன. பரிசு பெற்ற கவிதைக்கு ஆறு மாதம் ஞானம் இதழ் இலவசமாக அனுப்பப்படும் என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கவிதையை வளர்க்கும் போக்கில் இப்போட்டியை ஞானம் நடத்தி உள்ளமை இதன் கவிதை வளர்ச்சியைக் காட்டுகிறது.

**ஞானம் இதழ்க் கவிதைகள்:**

ஞானம் இதழ் மூத்த கவிஞர்களுக்கும் புதிய தலைமுறை கவிஞர்களுக்கும் பாலமாய் இருந்து அவர்களது கவிதைகளை வெளியிடுகிறது. பழைய தலைமுறை கவிஞர்களில் எம். ஏ. நுஃமான், சி. சிவசேகரம், சோலைக்கிளி, மேமன்கவி, இக்பால் அலி முதலானவர்களின் கவிதைகள் பாடுபொருள், எடுத்துரைப்பு முறைகளில் தனித்தன்மையுடன் விளங்குகின்றன. புதிய தலைமுறை கவிஞர்களை ஊக்குவித்து அவர்களை இலக்கிய உலகுக்கு அடையாளப் படுத்தியதில் ஞானம் இதழுக்குப் பங்கு உண்டு. த. ஜெயசீலன், செ. சுதர்சன், எம். அஸீம், ஜெ. திரேசா, நா. ஆனந்தன், கரவையூரான், பத்தனையூர் தினகரன், வாகரை வாணன், வே. சங்கீதா முதலானவர் கவிதைகள் நன்றாக உள்ளன. த. ஜெயசீலன், செ. சுதர்சன், கரவையூரான், வாகரை வாணன், ஆதிலட்சுமி சிவகுமார் ஆகியோர் தற்காலச் சூழலைப் பாடியுள்ளனர். இவர்கள் மரபுக் கவிதைகளையும் புதுக் கவிதைகளையும் படைத்துள்ளனர். அறிவுரை, இளையர், இனப்பற்று, உழைப்பாளர், கல்வி, காதல், சமுதாயம், பண்பாடு, புலம்பெயர்ந்தோர், பெண், போர், மொழி, வாழ்த்து, விளையாட்டு என்ற பொருள்களில் ஞானம் கவிஞர்கள் பாடியுள்ளனர். கவிஞர்கள் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்த பல உத்திகளைப் பயன்படுத்தி உள்ளனர். இனி இக்கவிதைகள் குறித்துக் காண்பது பொருத்தமாக இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுரை:

தமிழ் இலக்கியத்தில் அற இலக்கியங்களுக்குப் பஞ்சமில்லை. அந்த அளவிற்குத் தமிழர்களின் வாழ்வியலுடன் அற இலக்கியம் இரண்டறக் கலந்துள்ளது. மக்கள் நலமாக வாழ்வதற்கு அற இலக்கியம் உற்ற துணையாகிறது. திருக் குறளை உலக மக்களுக்குத் தந்த இனம் அறிவுரையை நாளும் பின்பற்றி வாழ்கிறது. அதனால்தான் அவற்றைப் பின்பற்றி வாழவேண்டும் என்ற சிந்தனையை ஞானம் கவிஞர்கள் மக்களுக்கு உரைத்துள்ளனர். வீட்டுச்சூழல் காரணமாகப் பெற்றோர்களைப் பிரிந்து வாழும் பிள்ளைகள் அதிகமாகிவிட்டனர். இதனால் இளையர்கள் பொருள் ஆசை மிக்கவர் களாக தன்னலம் மிக்கவர்களாக வாழ்கின்றனர். தாங்களும் ஒரு நாள் பெற்றோராக, முதியவராக மாறப் போகிறோம் என்பதை உணராமல் இருக் கின்றனர். இவர்கள் தாங்கள் செய்வது மட்டுமே சரி என்றும் பிறர் செய்பவை அல்லது சொல்பவை தவறென்றும் வாதிடு கின்றனர். பெற்றோர்கள் மூத்தவர்களாக இருப்பதால் வாழ்வின் நன்மை தீமைகளை அறிந்தவர்களாவர். அவர்களது அறிவுரை இன்றைய இளையர்களுக்கு உதவும். ஆனால் அவர்கள் கூறும் அறிவுரையை இளைய சமுதாயம் கேட்பதில்லை, மதிப்பதில்லை. இவர்களுக்கு வேண்டிய அறிவுரைகளை ஞானம் கவிஞர்கள் கூறியுள்ளனர்.

இலங்கையில் வாழும் பிள்ளைகள் கல்விகேள்விகளில் சிறந்து வளமாக வாழ வேண்டும். அவர்கள் பெற்றோர்களைப் பேணிகாக்க வேண்டும். நாட்டுக்கும் வீட்டுக்கும் பெருமைதேடித் தரவேண்டும் என்ற அறிவுரைகளைக் கவிஞர்கள் பாடியுள்ளனர்.

**பேரன்மாரே கொஞ்சம் வாருங்கடா – இந்த**
**பெத்தப்பா சொல்லுதை கேளுங்கடா**
**வீரமுடன் கல்வி செல்வமெல்லாம் – பெற்று**
**மேதினியில் நல்லா வாழுங்கடா**

**பள்ளியில் நன்றாய் படியுங்கடா – பல**
**பட்டம் பதவியுடன் வாழுங்கடா**
**முதுமையிலே நம்மை காக்குமடா – இது**
**முதியவன் நான் சொல்லும் புத்தியடா**

**பெற்றோருக்கும் தொண்டு செய்யுங்கடா – நாம்**
**பிறந்த ஊர்க்கும் பணி செய்யுங்கடா**
**கற்றோருடன் கூட்டு சேருங்கடா – கெட்ட**
**கயவரையே கண்டால் ஒடுங்கடா**

**கொடுமைகளை விட்டு விலகுங்கடா – சின்ன**
**குழந்தை உள்ளமுடன் வாழுங்கடா**
**கடவுள்மீது பக்தி கொள்ளுங்கடா – அவர்**
**கட்டாயம் நம்மையே காப்பாரடா**

(மூனாக்கானா, ஞானம் 88, செப்டம்பர் 2007, ப 14)

எனக் கவிஞர் மூனாக்கானா இளையர்களுக்கு வேண்டிய அறிவுரைகளைக் கூறியுள்ளார்.

இவ்வுலகத்தில் வாழ்பவர்கள் எப்படி வாழவேண்டும், எப்படி வாழக் கூடாது என்பதற்குரிய அறிவுரைகளைக் கவிஞர்கள் பாடியுள்ளனர். இத்தகைய அறிவுரைகள் மக்கள் வாழ்வை வளமாக்கும் என்ற நோக்கில் ஞானம் இதழ் வெளியிட்டுள்ளது.

**தாள்பணிந்து வாழேன், தரணியில்**
**தமிழ்மறந்தார் கால்பிடித்தும் வாழேன்**
**கோள்சொல்லி வாழேன் கொஞ்சு தமிழைக்**
**கொலைசெய்தும் வாழேன், நன்மைசெய்ய**
**நாள்பார்த்து வாழேன், சுவையுணராது**
**நாசெத்தால் வாழேன், நன்றியிலார்**
**வாள்முனையில் வாழேன், கொடிய**
**வறுமையிலும் வாழேன் இறைவா!**

**இரந்துண்டு வாழேன், பிறரை**
**இகழ்ந்திங்கு வாழேன், தமிழை**
**மறந்திங்கு வாழேன், மாசுற்றோர்முன்**
**மண்டியிட்டும் வாழேன், மதியிலார்**
**கரம்பிடித்தும் வாழேன், கற்பிலாள்**
**கைப்பிடியில் வாழேன், புகழுக்காய்**
**தரமிழந்து வாழேன், பெற்ற**
**தாய்வெறுக்க வாழேன் இறைவா!**

**காசுக்காய் வாழேன், கற்ற**
**கல்வியிழந்து வாழேன், மனம்**
**கூசும்படி வாழேன், பிறர்மேல்**
**குறைகூறி வாழேன், குணம்மாறி**
**மாசுண்டால் வாழேன், மனையாள்**
**மனம் மாறுண்டால் வாழேன்**
**வீசும்புயல்போல மானம் போயின்**
**வீழ்ந்திறப்பதன்றி வாழேன் இறைவா!**

(புரட்சிபாலன், ஞானம் 51, ஆகஸ்ட்டு 2004, ப. 33)

எனக் கவிஞர் புரட்சிபாலன் பாடியுள்ளார். இதைப் பின்பற்றி மக்கள் வாழ்ந்தால் அவர்கள் வாழ்க்கையும் அவர்களது பிள்ளைகள் வாழ்க்கையும் வளமாக அமையும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது என்பதை உணராமல் நாம் வாழக்கூடாது. வாழ்வின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளறிந்து வாழவேண்டும். அப்போதுதான் நாம் இறந்தும் இறவாப் புகழுடன் வாழும் பேறு பெறுவோம். உலகச் சான்றோர்களின் வாழ்க்கையை நாம் உற்றுப் பார்த்தால் இவ்வுண்மை தெற்றென விளங்கும். கடலலை எழும், விழும். அதன் உயரம் ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டதைப் போல மனித வாழ்க்கையும் அமைந்துள்ளது. எனவே நிலையற்ற வாழ்வில் மக்கள் அனைவரும் சமம் என்ற உயரிய சிந்தனைப்போக்குடன் வாழ்ந்து முடிந்தவரை மன்பதைக்கு உதவ வேண்டும்.

**புராணங்கள் கூறுகின்ற கொடியோர் கதைகளுண்டு**
**இலங்கேஸ்வரன் கதையை இராமாயணம் கூறும்**
**துரியோதனாதியர் கதையை மஹாபாரதம் கூறும்**
**நாஸிஸ ஹிட்லரின் கறைபடிந்த கதையை அறிவோம்**
**பாஸிஸம் பேசிய முசொலினியின் கதையும் தெரியும்**
**ஆசியாவின் விடமுள்ளு பொல்பொட்டின் கதையும் தெரியும்**
**மகிமைபெற்ற எங்கோன் பட்டறிந்த கதையும் தெரியும்**
**வீணர்கள் சூழ்ச்சியெலாம் வீணாகிப்போம் ஆனால்**
**கரைசால் கல்வியும் சொல்லவதானமும் மிக்க**
**உரைசால் மேன்மக்கள் அறங்காப்பர் புகழுடைவர்**
**அசத்தியம் வீழ்ந்துபடச் சத்தியம் மேலோங்கும்**
**வரலாறு போதிக்கும் ஐயமிலாப் பாடம்ஃது**
**கரவாது இவையுணர்ந்து நிறைவாக வாழ்வோமாக!**

(சி வ ரத்தினசிங்கம், ஞானம் 183, ஆகஸ்ட் 2015, ப. 52)

என ரத்தினசிங்கம் மக்களுக்கு வேண்டிய அறிவுரைகளைக் கூறியுள்ளார். இதைப் போல கவிஞர்கள் பலரும் மக்களுக்கு வேண்டிய அறிவுரைகளைக் கூறியுள்ளனர். இவ்வாறு வாழ்வோர் என்றும் போற்றப்படுவர். இத்தகைய அறவாழ்வை மக்கள் அனைவரும் பின்பற்றி வாழவேண்டும் எனக் கவிஞர்கள் மட்டும் விரும்பினால் போதாது, உலக மக்களும் விரும்ப வேண்டும்.

**இனப்பற்று:**

ஒரு மனிதன் தான் சார்ந்துள்ள இனத்தின்மீது அன்பு கொள்வதே இனப்பற்றாகும். உலக மாந்தரினம் தம்மினத்தின் மீது பற்றுக்கொண்டு வாழவேண்டும். அப்போது தான் அச்சமுதாயம் உலகில் தலைசிறந்து விளங்கும். கவிஞர்கள் சமுதாயத்தின் குரலாக இருந்து வந்துள்ளதை வரலாறுகள் உணர்த்துகின்றன. பாரதியார், பாரதிதாசன் முதலானவர்களின் இனப்பற்றினை அவர்களுடைய கவிதைகள் பறைசாற்று கின்றன. மனிதன் தனித்து வாழ முடியாத ஒரு சமுதாய விலங்காவான். அவன் தனித்து வாழமுற்பட்டால் அவனது வாழ்வும் அவன் சார்ந்துள்ள சமுதாயமும் வளர்ச்சி அடையா என்பதால் மனிதர்கள் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு தனிமனிதனும் தன் குடும்பத்தின் மீது பற்று வைத்திருப்பது போலத் தான் சார்ந்துள்ள இனத்தின்மீது பற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அந்த இனம் மதிப்புள்ள இனமாக உலகில் நிலைக்க முடியும்.

கடல் கடந்து சென்ற காலம் முதல் தமிழினம் மிகக் கடுமையாக உழைக்கிறது. உழைத்தும் பயனில்லாமல் இன்னும் வறுமையில்தான் வாடிக்கொண்டிருக்கிறது. கடல் கடந்தால் வளமாக வாழலாம் என்ற எண்ணத்துடன் வந்தவர்கள் வளமாக வாழவில்லை. அதுமட்டுமில்லாது அந்தந்த நாடுகளில் வாழுகின்ற பிற இன மக்கள் பார்வையில் தாழ்ந்த இனமாகத் தென்படுகிறது. இன்று இவ்வாறு இருந்தால் எதிர் காலத்தில் நம்மினம் இன்னும் மேசமான நிலைக்கு உள்ளாகும். ஆகவே இதில் இருந்து விடுபட்டு உழைப்பின் பயனை அனுபவித்து வாழ்வில் உயரவேண்டும். அப்போதுதான் உலக மக்கள் தமிழினமா அது சிறந்த இனம் எனப் பாராட்டும். அத்தகைய சிறப்பைப் பெறவேண்டியது அவசியம்.

**வேதனைச் சுமையோடு சமுதாய மதிப்பின்றி**
**விரக்தியோடு வாடு கின்றான்**
**வாழத் துணிவுடன் வங்கக் கடல்தாண்டி**
**வந்தநம் ஏழை மக்கள்**
**வாழ்வில் வடிக்கின்ற விழிநீரும் செந்நீரும்**
**வற்றாத நதிகள் ஆகி**
**ஈழத்தை வளமாக்கி இணைந்தோடிக் கடலிலே**
**இறுதியில் மடிந்து போவார்**
**எறும்பாக உழைக்கின்ற தமிழர் வாழ்விலே**
**இருள் மூடிக் கிடப்ப தேனோ**
**தோழரே இளைஞரே சிந்திப்பீர் எங்களின்**
**தோள்களில் ஏறி நின்று**
**சுரண்டியே உயர்கின்ற சுயநலத் தூண்களை**
**தூரோடு தகர்க்க வேண்டும்**

(பரிபூரணன், ஞானம் 119, ஏப்ரல் 2010, ப 47)

என்னும் பாடலடிகளில் பரிபூரணன் தமிழர் நிலையைப் படம் பிடித்துக் காட்டிச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு உள்ளார். இதைச் சாதிக்காவிட்டால் பிறரால் எள்ளி நகையாடும் நிலையிலிருந்து தமிழினம் மாறாவே மாறாது என்னும் கவிஞரின் எண்ணத்தையும் காணமுடிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன் பிடிக்கும் தொழில் இலங்கையின் பொருளாதார வளத்திற்கு முக்கியப் பங்கு ஆற்றுகிறது என்பது உண்மையாகும். இத்தொழில் எவ்வளவு கடுமையான தொழில் என்பதைக் கவிஞர்கள் பாடியுள்ள பாடல்கள் புலப்படுத்துகின்றன. இவர்கள் கடுமையாக உழைக்கிறார்கள். ஆனால் பயனை யாரோ அனுபவிக்கிறார்கள். இவர்கள் வாழ்க்கை வளமாக அமைய வேண்டும்.

**கடல் சென்று போராடி கட்டுமரம் போய் மீன்பிடித்து**
**படகில் பாய் விரித்து படும் துயரங்கள் சூழ்ந்துநிற்க**
**தடங்கள் பல தாண்டி நாம் தலையெழுத்தின் விதியை நொந்து**
**இடர்கள் எம்மை வந்தடைந்தாலும் இனிய வாழ்வு பிறக்காதோ?**
**அலைகள் வந்து ஆர்ப்பரித்து அள்ளி எடுத்து வலைபோட்டு**
**நிலை குலைந்து நிம்மதியிழந்து இரவெல்லாம் கண்விழித்து**
**கலைப்புகள் எம்மை சூழ்ந்தாலும் கவலையடையும் கூட்டம் நாம்**
**தலையெழுத்து எம்மை வாட்டி நிற்க தரணியில் இன்பம் வந்து சேராதோ**
**போராடி எதிர்ப்புக்கள் தாண்டி பொல்லா வாழ்வு வாழவேண்டி**
**மாரடித்து வலை போட்டு மக்கள் பசி தீர்த்திடுவே**
**நிரந்தர உழைப்பால் நிம்மதியிழந்து நிகரில்லா துயரம் கொண்டு**
**பாடுபட்டு வாழும் எமக்கு நிம்மதி வந்து சேராதோ?**

**கரையில் மனைவி மக்கள் எம்வரவை கண்ணீர் சிந்தி பார்த்து நிற்க**
**தரையில் படும் துன்பம் கண்டு துடிதுடித்து நிற்கும் உள்ளம்**
**சிதைபட்டு வாழ்வது போல சீரழிந்து வாழ்வு வாழும்**
**நிறைவிலா நிம்மதியாக வாழ மீனவ வாழ்வு மலராதோ?**

(உடப்பூர் வீரசொக்கன், ஞானம் 105, பிப்ரவரி 2009, ப. 02)

எனக் கவிஞர் உடப்பூர் வீரசொக்கன் மீனவர்களின் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இவர்கள் வாழ்வில் நிம்மதி வரும் நாள் நன்னாளாக அமையும். உழைக்கும் தன்னினம் உயரவேண்டும் என்ற கவிஞனின் இனப்பற்றைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

பண்டை முதலே தமிழ்ச் சமுதாயம் பல நிலைகளில் நெல்லிக்காய் மூட்டைகளாய் பிரிந்து கிடக்கிறது. இங்குதான் வளமாக வாழ முடியவில்லை, கடல் கடந்தால் வளமாக வாழலாம் என நினைத்துக் கடல் கடந்த இனம் இன்னும் ஏழ்மையிலே கிடக்கிறது. இவர்கள் உழைப்பைச் சுரண்டி வாழும் இனம் கொழுக்கிறது, இவர்கள் இன்னும் அப்படியே இருக்கிறார்கள் எனக் கவிஞர்கள் ஏங்குகின்றனர்.

**சிங்களவர் பகைகொண்டு எமையழிக்க – சீறிச்**
**செந்தழலாய்ச் சென்றீரே பகைமுடிக்க**
**செந்தமிழர் தமக்குள்ளே மோதிக்கொண்டார் – என்று**
**செகத்தவர் புழிக்கவழி சமைத்துள்ளீரே**
**சொந்தமண், இந்தமண் அது மறந்தீர் – எதிரி**
**சொற்கேட்டு வீரரைக் காட்டிக் கொடுத்தீர்**
**எந்தவழி சென்றாலும் எமது மண்ணை – நன்றாய்**
**எந்நாளும் காத்திடநீர் ஒன்று சேர்வீர்!**

(ஐயம்பிள்ளை, ஞானம் 70, மார்ச்சு 2006, ப. 55)

எனக் கவிஞர் ஐயம்பிள்ளை ஒற்றுமை, இனப்பற்றின்மை முதலியவற்றைப் பாடியுள்ளார். இனிமேலாவது ஒற்றுமையுடனும் இனப்பற்றுடனும் தமிழர்கள் வாழ வேண்டும் என்ற விதையைத் தூவியுள்ளார். விதை வளர்ந்து எப்போது பயன் தருமோ!

இலங்கை இனப்போர் காரணமாக இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் ஊர் நினைவுகளுடன் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். சொந்த மண்ணையும் வீட்டையும் விட்டு வந்த நாம் ஊர் செல்லும் நாள் எப்போது வாய்க்கும் எனத் தெரியவில்லை. தனங்கிளப்பிலுள்ள தாமரைக் குளத்தில் மீண்டும் குளித்து மகிழும் நாள் எப்போது கிடைக்குமோ. நம் கழனிகள் எப்போது பச்சைக் கம்பளம் போல் காட்சியளிக்குமோ? நன்செய் நிலங்களில் நெற்கதிர் முற்றி விளைந்து ஆண்டு முழுவதும் ஆனந்தம் அனுபவிக்கும் நாள் விரைவில் வருமா எனத் தெரியவில்லை என ஏங்கும் தமிழர்களின் வாழ்வைச் சொல்லும் கவிதையின் இறுதியில்

**பதினொ ராண்டுகள் நித்திய சஞ்சலப்**
**பஞ்ச வாழ்வுக்கு விடிவொன்று கிட்டுமோ?**
**அதியுயர் பாதுகாப்பு வலையமற்**
**றந்தோ ஊர்மீளும் நாளெந்த நாளோ?**

(சின்னப்பா, ஞானம் 92, ஜூலை 2011, ப 05)

எனக் கவிஞர் சின்னப்பா இலங்கைத் தமிழர்கள் ஏக்கங்களுடன் வாழும் அவல வாழ்க்கையைக் காட்டியுள்ளார். இதிலிருந்து இவர்கள் மீளும் நாள் விரைவில் வந்தால் அவர்கள் வாழ்க்கை வளமாக அமையும்.

இலங்கையில் வாழும் தமிழர்களின் துயரங்களைச் சொல்லி மாளமுடியாத அளவிற்குத் துயரங்களின் சுமையோடு வாழ்ந்து வருகின்றனர். உலகில் வாழும் பிற

இன மக்கள் சுகபோக வாழ்க்கையை அனுபவித்து வாழ்கிறார்கள். தமிழனாகப் பிறந்த ஒரே காரணத்தினால் இவர்கள் வாழ்க்கை உள்நாட்டுப் போருக்குப் பின்னும் சோகமாகவே இருக்கிறது. லட்சக்கணக்கான தமிழர்கள் தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலே அகதிகளாக வாழ்கிறார்கள். இத்தகு கொடுமை இவர்களைத் தவிர உலகில் வேறு யாருக்கும் வாய்க்கவில்லை.

**என்ன பாவம் செய்தார்கள் / இந்தச் சனங்கள்?**
**மண்ணில் தமிழனாகப் பிறந்தது**
**மகாபாவமா?**
**முட்கம்பிக்குள் / மூன்று லட்சம் தமிழ் முகங்கள்**
**சொற்கள் இல்லை / அவர்கள் / சோகத்தைச் சொல்ல!**
**முல்லைத் தீவில் / மூடு திரைக்குள்**
**அல்லலை / அணுஅணுவாக**
**அனுபவித்தவர்கள் / அதுவும் போதாதென்று**
**இன்று / கம்பி வேலிக்குள்**
**அடைக்கப்பட்டிருக்கிறார்கள்**
**கைதிகளாக...!**

(வாகரைவாணன், ஞானம் 111, ஆகஸ்ட்டு 2009, ப. 47)

எனக் கவிஞர் வாகரைவாணன் துயரமுடன் அவர்கள் வாழ்வைப் பாடியுள்ளார். இத்தகு நிலையில் வாழும் அவர்கள் வாழ்க்கைத் துயரங் களைப் பாடிய கவிஞரின் இனப்பற்றை எப்படிப் பாராட்டுவது.

இலங்கையில் நடந்த இனப்போராட்டத்தைக் கவிஞர்கள் பலரும் பாடியுள்ளனர். இலங்கை யில் நடந்த இனப்படுகொலை குறித்த வரலாற்றுப் பதிவாக இக்கண்ணீர்க் கவிதைகள் அமைந்துள்ளன. இலங்கை வரலாறு நாளை திருத்தி எழுதப்பட்டாலும் இந்தக் கவிதைக் கருத்துகள் வரலாற்று ஆவணங்களாக இருந்து வருகிற தலைமுறைக்கு உண்மையான கருத்துக் கூறும் என்பதில் ஐயமில்லை. தமிழருக்கும் சிங்களவருக்கும் நடந்த போரில் தமிழர் அடைந்த துயரங்களைக் காட்டும் இனப்பற்றுள்ள கவிதைகளைக் கவிஞர்கள் படைத்து உள்ளனர். தம்மினம் மகிழ்ச்சியாக வாழவேண்டும் எனக் கவிஞர்கள் மட்டும் விரும்பினால் போதுமா? பெரும்பான்மையினரைக் கொண்டுள்ள இலங்கை அரசு, தமிழினம் ஆகிய அனைத்தும் ஒன்றுபட வேண்டுமல்லவா!

**உங்களுக்குத்/ தர மனமில்லை**
**மனமிருந்தால் / எப்போதோ**
**தந்திருப்பீர்கள்**
**கேட்டுக்கேட்டு / வாழ்வதே எங்கள்**
**சந்ததியின் விதியாச்சு**
**தந்தை செல்வா காலம் முதல்**
**இதுவே எங்கள் கதியாச்சு**

(நந்தகுமார், ஞானம் 148, செப்டம்பர் 2012, ப. 4)

எனக் கவிஞர் நந்தகுமார் தம்மினம் மகிழ்வுடன் வாழவேண்டும் எனப் பாடியுள்ளார். இதிலிருந்து இலங்கைத் தமிழர்கள் என்று மீள்வார்கள் எனத் தெரியவில்லை.

இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரால் லட்சக்கணக்கான தமிழர்கள் புலம் பெயர்ந்து விட்டனர். புலம்பெயர்ந்து செல்ல முடியாத வர்கள், விரும்பாதவர்கள் போரில் ஈடுபட்டனர். இப்போரில் ஆயிரக்கணக்கானோர் உயிர் இழந்தனர், உடல் ஊனமுற்றனர், உடைமை களை இழந்தனர். இவர்கள் வாழ்க்கை இருண்டபோதும், அகதியாய் தாய் நாட்டிலே வாழ்ந்தபோதும் இனப்பற்றைச் சற்றும் விடவில்லை. கால்தானே ஊனம். மனம் ஊனமில்லையே. உறவுகளே ஓடி வாருங்கள். நமது உரிமைக்காகப் போராடுவோம் எனக் கவிஞர்கள் பாடியுள்ள கவிதைகளையும் ஞானம் வெளியிட்டுள்ளது.

**இருண்ட வாழ்வு / எரிந்த தேசம்**
**முட்கள் படர்ந்த நிலப்பரப்பு**
**முகவரியிழந்த பனைவட்டு**
**காலச் சுழற்சியில் சொந்த மண்ணிலேயே**
**அகதி என்ற அந்தஸ்து**
**கயவரின் குண்டடி பட்டு**
**ஊனமானது என் கால்கள்**
**கரடுமுரடான பாதைகளால்**
**கனதியானது என் பயணங்கள்**
**ஆனாலும் / இலக்குகளை / எட்டிப் பிடிப்பதில்**
**களைத்து விடவில்லை**
**என் கால்கள்**
**கால்கள் மட்டுமா? என் மனமும் கூட**
**அப்படித்தான்**
**உறவுகளே மீண்டெழுவோம்**
**வாருங்கள்**
**உரிமைக்காய் ஒன்றுபட்டுக்**
**குரல்கொடுப்போம் வாருங்கள்.**

(குறிஞ்சிக்கவி, ஞானம் 151, டிசம்பர் 2012, ப.19)

எனக் கவிஞர் குறிஞ்சிக்கவி பாடியுள்ள கவிதையை வாசிக்கும் வாசகனும் அதே உணர்வினைப் பெறுவது போல இருக்கிறது.

போரின் கொடுமையால் நாட்டைவிட்டு உயிர் பிழைத்தால் போதும் எனப் புலம் பெயர்ந்து வாழும் இலங்கை தமிழர் வாழ்வில் சூழ்ந்துள்ள சோகத்தைச் சொல்ல கவிஞர்களுக்கு வார்த்தையில்லை. உண்ண உணவின்றி நாளும் மடியும் மனிதர்களின் எண்ணிக்கை எவ்வளவென்று தெரியவில்லை. இவர்களைக் கவனித்துக் கொள்வதற்கு யாருமில்லை. உற்றாரும் மற்றாரும் உயிர் பிழைத்தால் போதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

என்றெண்ணி எங்கே சென்றிருக்கிறார்கள் எனத் தெரியவில்லை. புலம் பெயர்ந்து வாழும் உறவினர் வருகின்றனர், பார்க்கின்றனர். பிறகு கொஞ்ச நாள் கழிந்து சென்று விடுகின்றனர்.

**பசிக்கு சோறில்லை பார்க்க ஆளில்லை**
**குடிக்கக் கூழில்லை படிக்க முடியல்லை**
**வன்னி மண்ணிலே வாழ வழியில்லை**
**போரின் கொடுமையில் – மண் வீழ்ந்து கிடக்குது**

**வீடு குளங்களும் அழிஞ்சு போச்சுது**
**புலம் பெயர்ந்தவர் வந்து போகிறார்**
**அள்ளிக் கொடுத்துமே அரவணைக்கிறார்**
**பார்த்துப் பார்த்துமே பரிதவிக்கிறார் – சிலர்**
**அரவணைப்பதாய் அள்ளிப் புழுகிறார்**
**அங்கு வெயில் காலமாம் இங்கு சூடுதணிக்கிறார்**
**காட்சிப் பொருளாய் – எமைக் கண்டு களிக்கிறார்**
**அன்னையும் இல்லை தந்தையும் இல்லை**

**அநாதை என்ற பெயர் சூட்டி அழைக்கிறார்**
**போரின் கொடியரை அணுகி வாழ்வதா**
**போனவர்களை நினைத்து அழுவதா**
**பாம்பின் வாலென்று எதனைப் பார்ப்பது**
**மீனின் தலையென்று எதனை ஏற்பது?**
**எங்கள் இழிநிலை எங்கு உரைப்பது**
**எவர்வந்து எமக்கு வாழ்வு தருவரோ**

(ஆவூரான், ஞானம் 142, மார்ச்சு 2012, ப. 06)

எனக் கவிஞர் ஆவூரான் பாடியிருப்பது உண்மையாகும். இலங்கையில் வாழும் தமிழர்கள் நிலைமையை இக்கவிதை சரியாகக் காட்டுகிறது. எவர்வந்து எமக்கு வாழ்வு தருவரோ என்னும் இறுதியடி உணர்த்தும் சோகத்தை வாசகர்களும் உணர முடிகிறது. உற்றார் உறவினர் இருந்தும் அரசு இருந்தும் இவ்வாறு உள்ளதைப் பாடியுள்ள கவிஞனின் இனப்பற்றை எவ்வாறு பாராட்டுவது எனத் தெரியவில்லை.

**இரங்கற்பா:**

இறந்தவர்களின் சிறப்புகளைப் பாடும் இரங்கற்பா சரமகவியாகும். தன்னுணர்ச்சியாக வெளிவரத் தொடங்கிய இக்கவிதை மரபு பண்டிதர், கல்வியாளர்களை மட்டுமின்றிப் பாமரர்களையும் பாதித்துள்ளது. உறவினர், நண்பர் இறந்தபோது தாமே மனமுருகிப் பாடுவது ஒன்று, பணம் கொடுத்துப் பாடவைப்பது மற்றொன்று என இச்சரமகவி இரு வகைகளில் பாடப்படுகிறது.

மக்களின் பேரன்புக்குரிய மன்னனாக ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் விளங்கினான். அவன் இறந்ததால் அனைவரும் தாளாத் துயரத்தில் உள்ளனர். இந்நேரத்தில் நீ பூத்து இருக்கிறாயே? உன் பூக்களை யார் சூடிக் கொள்ளப் போகிறார்கள்? என்று குடவாயில் கீரத்தனார் முல்லைக் கொடியைப் பார்த்து பாடிய கையறுநிலைப் பாடல் நெஞ்சை நெகிழவைக்கும் பான்மையது.

**இளையோர் சூடார் வளையோர் கொய்யார்**
**நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்**
**பாணன் சூடான் பாடினி அணியாள்**
**ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த**
**வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை**
**முல்லையும் பூத்தியோ, ஒல்லையூர் நாட்டே?**

(குடவாயில் கீரத்தினார் பெருஞ்சாத்தன், புறநானூறு)

எனக் குடவாயில் கீரத்தினார் பெருஞ்சாத்தன் இறப்பைப் புறப்பாட்டில் பாடி உள்ளார். இப்பாடலிலுள்ள முல்லையும் பூத்தியோ, ஒல்லையூர் நாட்டே? என்னும் இறுதியடி புலவர் சோகத்தை மட்டும் உணர்த்தாமல் வாசிப்பவரையும் சோகம் அடையச் செய்கிறது. இதைப் போல ஞானம் கவிஞர்கள் இலங்கை தலைவர்கள் மட்டுமின்றி இந்திய அரசியல் தலைவர்கள், சமுதாயத் தலைவர்கள், அறிஞர்கள், கவிஞர்கள் எனப் பலரது இழப்பு குறித்தும் பாடியுள்ளனர்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி (07-01-1925 -15- 06-2008) சைவ சமயத்திற்குத் தொண்டு ஆற்றியவர்களில் முதன்மையானவராகப் போற்றப்படுகிறார். அப்பாக்குட்டி, தையற்பிள்ளை தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தவர். இவர் ஆரம்பக் கல்வியை அமெரிக்க மிஷன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையிலும் கற்றார். 1940ஆம் ஆண்டு க.பொ.த. (சா.த) தேர்வில் வெற்றியடைந்து 1941ஆம் ஆண்டு சுன்னாகம் இராமநாதன் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்றார். 1946ஆம் ஆண்டு மட்டக்களப்பிலுள்ள சென். சிசிலியா ஆங்கிலப் பாடசாலையில் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகி 1949ஆம் ஆண்டு கொழும்பிலுள்ள பாத்திமா பெண்கள் பாடசாலையில் ஆசிரியராகத் தம் பணியைத் தொடங்கினார்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி ஆசிரியப்பணி, சமூகப்பணி, ஆலய அறங்காவர், சொற்பொழிவு ஆகிய பணிகளைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வனே ஆற்றியவர். பண்டிதர், சைவப் புலவர் போன்ற பட்டங்களைப் பெற்றவர். மகளிர் இல்லம், அன்னையர் இல்லம், சைவத் தமிழ் ஆய்வு நூலகம் என இவர் செய்த தொண்டுகளுக்கு அளவு இல்லை. தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானப் பொருளாளராக இருந்தவர் 1977ஆம் ஆண்டு முதல் தலைவராகப் பணியாற்றினார். இவரது சமய, சமூகப் பணிகளைப் பாராட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் (1997) வழங்கிக் கௌரவித்தது. இவர் பல நூல்களின் ஆசிரியராக, பழம்பெரும் நூல்களின் பதிப்பாசிரியராகத் திகழ்கிறார். ஆண்டுதோறும் இவர் பிறந்த நாளில் சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அற நிதியம் அறப்பணிகளை ஆற்றுகின்றது. இவரது இழப்புக் குறித்துக் கவிஞர்கள் பலவாறு பாடியுள்ள பாக்களை ஞானம் இதழ் வெளியிட்டு உள்ளதைக் காணமுடிகிறது.

**சிந்தையதும் தெளிவுறவே சிவநெறியாம் சைவத்தை**
**முந்தை செய் வினை எல்லாம் மெய்யாக நீங்கிடவே**
**சிந்தித்தே எடுத்துரைத்த தெய்வத்தாய் செல்வியுனை**
**வந்தித்தே தேவர்களும் வரவேற்கச் சென்றனையோ?**

**ஆறாத கண்ணீரால் அகிலம்வாழ் தமிழரெல்லாம்**
**தீராத சோகத்தால் துடித்திங்கு கதறியழ**
**நேராகச் சிவலோகம் நெஞ்சணைக்கச் சென்றதென்ன**
**வாராது வந்துதித்த வையத்தின் மணிவிளக்கே**

**விரிவுரைகள் பலவாற்றி வித்தைகளைக் கற்பித்தாய்**
**புரிவுடனே எம்மை எல்லாம் பாசமுடன் நேசித்தாய்**
**அறிவான மெய்ப் பொருளை அறிந்திடவே வித்திட்டாய்**
**செறிவாக செந்தமிழை தித்திக்கத் தந்திட்டாய்**
**அறச்சாலை ஆய்வரங்கு படிப்பகமும் தானமைத்து**
**துறந்தாரை ஆதரித்து தூயபணி செய்தாயம்மா**
**மறக்காமல் அன்னையரை மதித்திங்கு காத்திட்டாய்**
**உறவாக எண்ணியுமே உளமார நேசித்தாய்**

**ஆயிரந்தான் உண்டிங்கு அழகழகாய் பலபதிகள்**
**கோயில்கள் எல்லாமே உன் கோயில் போலாமோ**
**வாயில்கள் திறந்திருந்து வரவேற்கும் உன்கோயில்**
**வாயில்லாச் சீவன்களும் வந்தணையும் வாழ்வுபெற**

**வாடியஎம் மக்களுக்கு வரமளிக்கும் தாயாகி**
**தேடியவுன் செல்வத்தைத் தினந்தோறும் சோறாக்கி**
**நாடிவந்த அனைவருக்கும் நலமாகத் தந்தவளே**
**கூடிவரும் துன்பத்தை துடைத்தெறியும் கையிழந்தோம்**

**எங்குற்றாய் எங்குற்றாய் எமை மறந்து எங்குற்றாய்**
**பொங்கிவரும் கண்ணீரும் பேராறாய்ப் பாயுதம்மா**
**மங்கிடவே எம்வாழ்வும் மறந்தெம்மைப் போனாயே**
**கங்குகரை இல்லாமல் கவல்கின்றோம் உன் பிரிவால்**

*(குறிஞ்சி நாடன், ஞானம் 98, ஜுலை 2008, ப. 21)*

எனச் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவாக குறிஞ்சி நாடன் பாடியுள்ள இரங்கற்பா இவரது பணிகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது.

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி தமது 79ஆவது வயதில் அமரரானார் என்ற செய்தி இலங்கையை மட்டுமின்றித் தமிழ்கூறு நல்லுலகை ஆறாத்துயரில் ஆழ்த்தி இருக்கிறது. இவர் உலகத் தமிழ்ப் பேரறிஞர்கள் வரிசையில் முன்னணியில் போற்றப்பட்டவர். கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தமிழ்ப்பணி செய்து நாட்டுக்கும் இலக்கியத் திறனாய்வுக்கும் பெருமை சேர்த்தவர். இவரது இழப்பு குறித்துக் கவிஞர்கள் பாடியுள்ள பாக்களையும் ஞானம் இதழ் வெளியிட்டுள்ளது.

**எல்லோர்க்கும் இனியோனாய் ஏற்புடைய ஆசானாய்**
**உள்ளத்தில் வீற்றிருந்த உத்தமனாம் நன்முத்தை**
**பொல்லாத எமன்தானும் பொசுக்கெனவே பறித்தெம்மை**
**பூமியிலே துடிக்கவிட்டுப் போனவனை சபித்திடுவோம்**

**இலக்கியத்தின் பேரொளியாய் இன்தமிழின் காவலனாய்**
**இருள்போக்கும் சூரியனாய் எம்மவரின் கோமகனாய்**
**துலங்கிட்ட தூமணியே! துய்ய சிவத் திருமகனே**
**தேவர்க்கும் அமுதூட்ட சென்றாயோ பொன்னுலகம்**

**தேசமெல்லாம் செந்தமிழை தேன்மணக்கத் தென்றலுடன்**
**புரிமளிக்கச் செய்திட்ட புரஞ்சுடரே என்றென்றும்**
**நேசித்த நெஞ்சமெல்லாம் நெஞ்சுருகிக் கலங்கிடவே**
**நோகவிட்டு நொடிப் போதில் பிரிந்தெங்கு சென்றீர் ஐயா!**

**வருவோர்க்கும் செல்வோர்க்கும் வளமான வாழ்த்தினையும்**
**வாய் இனிக்க வழங்கிய நின் வாய்மொழியை கேட்பதென்னாள்**
**தெருவெல்லாம் மேடைகளில் செந்தமிழைப் பொழிகின்ற**
**சிறப்புடையார் இவரானோம் தீந்தமிழைச் சுவைத்திடவே**

**பல்கலைக் கழகங்கள் கலையிழந்து போனதையா!**
**பார்மீது தமிழாய்வும் பதியிழந்து போனதையா!**
**செல்வமாய் விளங்கிட்ட சீராளர் போனதன் பின்**
**செந்தமிழாம் வண்ணமகள் பொட்டிழந்து போனாளே!**

**நடமாடும் நூலகமாய் வளம்வந்து அறிவூட்டி**
**நன்னூல்கள் பற்பலவும் நயந்தளித்த நாயகமே**
**குடத்தினுள் விளக்கான குறைமதியர் மனம்மகிழ**
**இடம்தந்து போனீரே என்னதான் அவசரமோ ?**

*(குறிஞ்சிநாடன், ஞானம், ஆகஸ்ட்டு 2011, ப. 03)*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எனக் கவிஞர் குறிஞ்சிநாடன், கார்த்திகேசு சிவத்தம்பி இழப்பு குறித்துப் பாடியுள்ள பாடலில் அவரது சிறப்புகளைக் காணமுடிகிறது. இப்படிப்பட்ட தமிழறிஞர் இனி தோன்றுவாரா என்பதும் ஐயமே.

**கல்வி:**

தொன்று தொட்டுக் கல்வியை ஒரு சொத்தாக அனைவரும் போற்றிப் பாராட்டுகின்றனர். உலகிலுள்ள அனைத்துச் சமுதாயமும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கவேண்டும் என விரும்புகிறது. தமிழர்கள் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளதைக் காணமுடிகிறது. பண்டைக் காலத்தில் கல்வி, சோதிடம், வானநூல், நிலநூல், மருத்துவம், கலைகள் முதலிய யாவற்றிலும் சிறந்து விளங்கியதை இலக்கண, இலக்கியங்கள் உணர்த்துகின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்வி குறித்தும் ஞானம் இதழில் பல கவிதைகள் வந்துள்ளன.

இலங்கைத் தமிழர்கள் தங்கள் பிள்ளைகள் படித்து வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற சிந்தனை உள்ளவர்களாக இருக்கின்றனர். அதனால் தங்கள் வறுமையிலும் அயல் நாடுகளுக்கு அனுப்பி படிக்க வைக்கின்றனர். படிக்கச் சென்றவர்கள் தங்கள் குடும்பத்தின் நிலையறிந்து படித்தால் பரவாயில்லை. வந்த வேலையை விட்டுவிட்டு இவர்கள் காதலில் ஈடுபடத் தொடங்கி விடுகின்றனர். இதனையறிந்த அவர்களது பெற்றோர் வருந்தும் கவிதைகளைக் கவிஞர்கள் படைத்துள்ளனர்.

**கொம்மாட கொடியை அடகுவச்சி**
**கொமிக்ஷன்குடுத்து அனுப்பினேனே சீமைக்கு**
**கும்மாளமடிச்சி குமரியோடு திரியிறியாம்**
**குடியைக் கெடுக்கவந்த கோடாரி நீதாண்டா**

**தங்கக் கிளியாட்டம் மாமன் மகள்**
**தனியாக வீட்டில் தாலிக்கு காத்திருக்க**
**இங்கிலிசுக்காரி உனக்கு உசத்தியாப் போனதா?**
**இலங்கைக்கு வாடா படிச்சது போதும்.**

**அரைக்கால்சட்டை இல்லாம அம்மணமாய்**
**அவளோடு நீயும் கடலிலே குளிச்சதாம்**
**மரைக்கார் மகனர் கண்டதாய் சொன்னான்**
**மறைக்காமல் சொல்லு உண்மையா சங்கதி**

**பாண்டியன் எண்டு பெத்தவங்க பேர்வைக்க**
**புழுகித்திரிகிறவள் பாண்டு என்டு மாத்தினாளாம்**
**கோண்டாவில் ஆக்கள் கேலியாப் பேசிறாங்க**
**கேடுகெட்ட பயலே மானம் போகுதடா**

**வெள்ளைக்காறி காதல் நீண்டு புடியாது**
**வீணாக நீயும் நாசமாப் போகாத**
**கொள்ளையாப்பேசி மசக்குவாள் கொஞ்சி**
**கொஞ்சத்துள் ஆளைப்பும் மாத்துவாள் கவனம்**

**கடுதாசி கண்டவுடன் மகனே பாண்டியா**
**காதல் விட்டதாகப் பதில்போடு**
**முடியாது எண்டாலும் சொல்லு நீ**
**மூணுமுளக் கயிறுதான் தஞ்சம் இனி**

(ரூபராணி, ஞானம் 25, ஜுன் 2002, ப. 82)

என ரூபராணி பிள்ளைகளின் செயல்களை வருத்தமுடன் பாடியுள்ளார். இந்தக் கவிதையில் பொங்கும் சோகம் படிப்பவர் மனதையும் கவ்விக் கொள்கிறது. வாழ்வோடு போராடிக் கொண்டிருக்கும் சமயத்தில் பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்ற சிந்தனை வருவதே அதிசயமாகும். அதிலும் தாலியை அடகு வைத்து அயல்நாட்டில் படிக்க வைப்பது இன்னும் சிறப்பாகும். இச்சூழலை அறிந்த இளையர்கள் நன்றாகப் படித்துப் பெற்றோர்களுக்குப் பேரும் புகழும் வாங்கித் தருதல் வேண்டும் என்பதைக் கவிஞர் உணர்த்த விரும்புகிறார்.

இவ்வுலகில் வாழும் மக்கள் அனைவருக்கும் பொருள் செல்வம் எவ்வளவு முக்கியமோ அதைப் போலவே கல்விச் செல்வமும் அவசியமான ஒன்றாகும். கல்வியால் நாடும் வீடும் முன்னேற்றமடையும். பண்பாட்டுக் கூறுகளை மேலும் வலிமையாக்கும் சக்தியாக கல்வி விளங்குகிறது. ஆகவே அனைவரும் மனிதர்களாக வாழவேண்டும்.

**மானிடராய் பிறந்துவிட்டோம் பூமியிலே நாம்**
**மாண்புடனே வாழுக்கல்வி கற்றிடுவோம் நாம்**
**மக்கள்சேவை மகேசன்சேவை என்றறிவோம் நாம்**
**மகிழ்ச்சியோடு இருக்கும்வரை சேவைசெய்வோம் நாம்.**

**நாளைஉலகை ஆளப்போகும் மன்னர்கள்தான் நாம்**
**நல்லபண்பு தனைநன்றாய் கற்றிடுவோம் நாம்**
**நாட்டில்கல்வி பஞ்சந்தனை களைந்திடுவோம் நாம்**
**நல்லதொரு சமுதாயத்தைப் படைத்திடுவோம் நாம்.**

**கற்றகல்வி உணர்ந்துவாழ்க்கை அமைத்திடுவோம் நாம்**
**கல்லாரைக் கண்டால்மனம் நெகிழ்ந்திடுவோம் நாம்**
**முற்றுமுழுக்கக் கற்றவர்கள் பாரிலில்லையே**
**மூடர்என யாரும்இங்கு இருந்ததில்லையே.**

**உலகில்உள்ள மக்களெல்லாம் படைப்பால் ஒன்றுதான்**
**உயர்வுதாழ்வு பேதமெலாம்(எம்) மனத்தின் உணர்வுதான்**
**கற்றறிந்த மக்கள் இந்த உலகின் கண்கள்தான்**
**கற்றும்பண்பு இல்லாவிட்டால் உடலின் புண்கள்தான்.**

(வீணை வேந்தன், ஞானம் 55, டிசம்பர் 2004, ப. 30)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கவிஞர் வீணை வேந்தன் கல்வியின் சிறப்புகளையும் அதைப் பெறுவதால் கிடைக்கும் பெரும் புகழையும் பாடியுள்ளார். அனைவரும் கல்வி பெற்று வாழ்வில் உயர வேண்டும் என்பதே இக்கவிதையின் நோக்கமாகும்.

**காதல்:**

பண்டைக் காலத்தில் நம் முன்னோர்கள் காதலையும் வீரத்தையும் தம்மிரு கண்களாகப் போற்றியதைச் சங்க இலக்கியங்கள் காட்டு கின்றன. அகநானூறு, கலித்தொகை, குறுந் தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு முதலிய அகப்பொருள் தொகை நூல்கள் காதலின் ஏற்றத்தைப் பலவாறு போற்றியுள்ளன. அக் காலத்தில் வாழ்ந்த நம் முன்னோர்கள் காதலின் அருமை பெருமை உணர்ந்தவர்கள். அதனால் இந்தப் பிறவிமாறி அடுத்த பிறவியிலும் என் கணவனாக நீ தான் இருக்க வேண்டும். என் உள்ளம் கவர்ந்தவராக இருக்க வேண்டும் எனப் பெண்கள் வாழ்ந்து வந்தனர். அத்தகு காதல் வாழ்க்கை தமிழர்களின் வாழ்வோடு ஒன்றியதாக இருந்ததைப் பண்டைய இலக்கி யங்கள் உணர்த்துகின்றன. இதற்கேற்ப ஞானம் கவிஞர்களும் காதலின் தன்மை, பிரிவு, ஏக்கம், சாதி மத வேறுபாடுகளால் காதலுக்குத் தடை எனப் பல்வேறு பொருண்மைகளில் கவிதைகளைப் படைத்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் காதலித்தவர்கள் பிரிகின்றனர். நாட்டை விட்டுப் பிரிந்தாலும் காதல் ஏக்கங்களுடன் வாழும் காதலர்களின் உள்ளங்களைக் கவிதைகளாகப் படைத்துள்ளனர்.

**கடல் கடந்து போனாலும்**<br>
**நினைவில் எனை நிறுத்தி**<br>
**நீயிட்ட மடலுக்கு நன்றி**<br>
**அந்திப் பொழுதுகளில்**<br>
**ஆனந்தமாய் சந்தித்த**<br>
**அத்திமரத்தடியின்**<br>
**ஞாபகங்கள்**<br>
**தினமும் வந்து வாட்டுதடி**<br>
**உன் மலர் கரங்கள்**<br>
**வரைந்த வரிகள்**<br>
**என் நெஞ்சில்**<br>
**நெருஞ்சி முள்ளாய் குத்தியது**<br>
**பிரிவுத் துயரால் துவள்வது**<br>
**நீ மட்டுமா?**

(சேகர், ஞானம் 76, செப்டம்பர் 2006, ப. 35)

எனக் கவிஞர் சேகர் காதலரின் சோகத்தைப் பாடியுள்ளார். இவ்வாறு காதல் கவிதைகளைக் கவிஞர்கள் படைத்துள்ளனர்.

**தாய்மொழி:**

தாய்மொழி என்பது ஒருவன் பிறந்தது முதல் இறக்கும் வரை பேசும் மொழியாகும். ஒரு குழந்தை தாயின் அரவணைப்பில் வளர்ந்து அவள் பேசும் மொழியைக் கற்பதால் தாய்மொழி என்று அழைக்கப்படுகிறது. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பதைப் போல அவரவர் தாய்மொழியை அவரவர் பொன் போல் போற்ற வேண்டும். பண்டை நாள் முதல் தமிழ்மொழியின் சிறப்புகளைப் புலவர் பெருமக்கள் பாராட்டி உள்ளனர். இத்தொன்மை வாய்ந்த தமிழைப் பண்டைக் காலம் முதல் நம் முன்னோர்கள் பேசினர். இன்று காலச்சூழல் காரணமாகத் தமிழ் மொழியைப் பேசவும் படிக்கவும் தயக்கம் காட்டுகின்றனர். அன்றாட நடைமுறை வாழ்விலும் தமிழ் மொழியைப் பயன்படுத்தத் தயங்குகின்றனர். இந்நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் தமிழ்மொழிக்கு ஆபத்து நேரிடும் என்பதால் அவர்களிடம் தமிழ்மொழிப் பற்றை வளர்க்கவேண்டியது கவிஞர்களது கடமையாகிறது. இலங்கைத் தமிழர்கள் தங்கள் தாய்மொழியாம் தமிழை மறவாமல் வாழவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டி தாய்மொழியை மறந்தால் ஏற்படும் இழப்புகளையும் கவிஞர்கள் படைத்து உள்ளனர்.

**பேசுக தமிழில் மட்டும் பிறமொழி தன்னை அள்ளி**<br>
**வீசுக தெருவின் ஓரம் விளங்குக தமிழனாக**<br>
**தூசது தட்ட வேண்டும் துடைப்பத்தை எடுத்துக் கொள்க**<br>
**மாசது நீங்கிப் போகும் மறைமலை அடிகளாவோம்**<br>
**மொழியினில் பற்று வேண்டும் முண்டங்கள் உணர மாட்டா!**<br>
**விழியதை இழந்து விட்டால் வீணென ஆகும் வாழ்க்கை**<br>
**புழியது நேரா வண்ணம் பைந்தமிழ் மொழியைக் காத்தல்**<br>
**தொழிலெனக் கொள்ள வேண்டும் தொண்டிதற் கிணையே இல்லை!**

**அந்நிய மொழியில் ஆசை அடியோடு சாய்த்துப் போடும்**<br>
**முன்னைய வரலாறெல்லாம் மூளையில் பதிக்க வேண்டும்**<br>
**அன்னையாம் தமிழைக் காக்கஅணியது திரள வேண்டும்**<br>
**பின்னிய சதிகள் எல்லாம் பிய்த்து நாம் எறிதல் வேண்டும்!**

**பாரதி சொன்னான் அன்று பைந்தமிழ் மொழியைப் போல**<br>
**ஓர் மொழி இனிப்பதில்லை உண்மையே அவனும் சொன்னான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேர், புகழ் சிறப்பினோடு பெருமைகள் பலவும் பெற்ற**
**சீர்மொழி தமிழே எங்கள் சிந்தையில் வாழ வேண்டும்!**

(வாகரைவாணன், ஞானம் 105, பிப்ரவரி 2009, ப. 05)

எனக் கவிஞர் வாகரைவாணன், தமிழர்கள் தாய்மொழிப்பற்றுடன் வாழ வேண்டியதை உணர்த்தியுள்ளார்.

ஆங்கிலேயர்கள் தம்மினத்தினரைச் சந்திக்கும் போது தங்கள் தாய்மொழியான ஆங்கிலத்தில் பேசுகின்றனர். சீனர்கள் சந்திக்கும்போது தங்கள் தாய்மொழியான சீனத்தில் உரையாடுகின்றனர். ஆனால் தமிழர்கள் சந்திக்கும்போது தமிழில் உரையாடுவதில்லை. மாறாகப் பிற மொழியில் உரையாடுகின்றனர். தமிழர்கள் தங்கள் இல்லங்களில் தமிழில் பேசினால்தான் மொழிப்புழக்கம் இருக்கும். அதனால் குழந்தைகள் தமிழில் ஆர்வம் காட்டி புலமை பெற்று புகழ் அடைவார்கள். அதனால் அவர்களது எதிர்காலம் ஒளிமயமாகத் திகழும். எனவே மொழிவழிதான் சமுதாயம் அமைகிறது. ஓரினத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தும் மொழியை மதிக்கத் தவறினால் அந்த இனம் எப்படி உலகில் மதிப்பைச் சம்பாதிக்கும் இனமாக விளங்கும்? எப்படி வாழவேண்டும் என்பதற்குச் சான்றாக வாழ்ந்த தமிழினம் இன்று எப்படி வாழக்கூடாது என்பதற்குச் சான்றாக வாழ்கிறதோ என்று அஞ்சும்நிலை வந்துவிட்டது. தமிழைப் போற்றி வாழ்ந்த நம் மூத்தோரிடமிருந்து நாம் விலகித் தமிழை மறக்கும் இனமாக வாழ்ந்து வருகிறோம். பண்பாட்டின் காவலனாய் விளங்கிய அவர்களிடமிருந்து விலகி பண்பாட்டை மறந்து வருகிறோம்.

**உலகெங்கும் சிதறிப்போன**
**செம்மறியாட்டுக் கூட்டமாய்த் தமிழன்**
**தனக்குத் தானே எமனாகி**
**புழும்பெருமை வேரிலே**
**தொங்கிக் கொண்டு பழுக்க**
**மறந்த பலாவாய்ப் போனான்**
**அடையாளங்கள்**
**ஒவ்வொன்றாய்த் தொலைக்கிறோம்**
**ஆடையில் தமிழனில்லை**
**பாடையில் கூட தமிழனில்லை**
**மேடையில் மட்டும் பேசிப் பயன் என்ன?**

(வேல்நந்தன், ஞானம் 122, ஜுலை 2010, ப 14)

எனக் கவிஞர் வேல்நந்தன் தமிழர்களையும் தமிழையும் பாடியுள்ளார். செம்மொழி என்றால் மட்டும் தமிழ் வாழும் மொழியாக இருக்காது. தமிழர்களாகிய நாம் அதைப் பேசி இன்புற வேண்டும். அடுத்த தலைமுறையிடம் முறையாகத் தமிழை உணர்வை ஊட்டவேண்டும்.

உயிராய் உணர்வாய் இலங்கும் தமிழ் மொழியின் சிறப்புகளைக் கவிஞர்கள் காலம் காலமாகப் போற்றியுள்ளனர். அவ்வரிசையில் ஞானம் கவிஞர்களும் தமிழ் அன்னையின் பெருமைகளைப் போற்றிப் பாடியுள்ளனர்.

**பயின்றிடும் தோறும் பண்பினை வளர்த்திடும்**
**பகலவ னொளியாய் பாங்காய் நம்மொழி**
**உயர்ந்திட தமிழினம் உணர்வுடன் வாழ்ந்திட**
**உயரிய மொழியாய் எங்கள் தமிழ்மொழி!**
**கனிந்திட வுளங்கள் கனிச்சுவை தந்திடும்**
**குறையிலா முத்தமிழ் ஏடுகொள் நம்மொழி**
**நனிமிகு சிலம்பும் மணியும் வளையலும்**
**நேராம் குண்டல முடைத்தாய் நம்மொழி!**
**என்றும் எம்மொழி எதிலும் எம்மொழி**
**எடுப்பாய்த் திகழ்வது வீறுகொள் தமிழ்மொழி**
**செம்புலமெங்கனும் தனித்தமிழ் காண்போம்**
**செழிப்புடன் இன்பக் களிப்பினில் யாமே!**
**தேனினும் உயரிய தீம்மொழிகண்டிட**
**தேகமெங்கணும் தமிழ்மொழி நின்றிட**
**கூனே இல்லாதெழுந்திட முடிந்திடும்**
**தமிழைக் கண்டேன் இன்பக் களிகொண்டேனே!**

(கலைமகள் பைரூல், ஞானம் இதழ் 153, பிப்ரவரி 2013, ப 31)

எனக் கலைமகள் பைரூல் தமிழைக் களிகொண்டு பாடியுள்ளார். இத்தகைய பெருமை வாய்ந்த மொழியை வளர்க்க வேண்டியது நமது கடமை என்பதை நமக்கு உணர்த்துகிறார்.

தமிழ் இலக்கிய வளமும் இலக்கண வளமும் பெற்ற மொழி. பிற மொழிகளைப் போல் வழக்கொழிந்து போகாமல் வாழுகின்ற தமிழர் நெஞ்சங்களில் வாழும் மொழியாக இருக்கிறது. இம்மொழியை வளர்க்கத் தமிழர்கள் தொடர்ந்து பேச வேண்டும்.

**இலக்கியமும் இலக்கணமும் இங்கிதமாய்**
**அமைந்தமொழி**
**வழக்கொழிந்து போகாமல் வாழுகின்ற தெங்கள்மொழி**
**நிலத்திலுள்ள மாந்தரெல்லாம் நிம்மதியாய்**
**வாழுதற்கு**
**நீதியொடு வாழ்வியலை நீக்கமறச் சொன்னமொழி!**

**ஆண்டவனின் அருள்பெற்ற அன்னைத்**
**தமிழ்மொழியை**
**அரியணையில் ஏற்றிவைத்து ஆட்சிமொழி**
**ஆக்கவேண்டும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அழகுதமிழ் உலகெங்கும் அனைவரிடம் சேர்வதற்கு**
**ஆர்வமுடன் இணைந்தொன்றாய் ஆவலுடன்**
**செயற்படுவோம்!**

(ஜெயராம சர்மா, ஞானம் 213, பிப்ரவரி 2018, ப 28)

எனத் தமிழ்மொழியின் சிறப்புகளைக் கவிஞர் பாடியுள்ளார். இத்தகைய சிறந்த மொழிக்குச் சொந்தக்காரர்களாகிய நாம் அதைக்காக்க வேண்டும்.

**தாலாட்டு:**

தாயன்பும் சேயைச் சுற்றிய கற்பனையும் தாலாட்டுப் பாடல்களுக்குக் களங்கள் ஆகின்றன. பணக்காரர் முதல் ஏழை எளியவரான பரதவர், உழவர், பண்டாரம், தட்டான், கருமார், தச்சர், கொத்தர் ஆகிய அனைவரும் குழந்தைகளுக்குத் தமிழிசையால் அமுதூட்டித் தாலாட்டுகிறார்கள். மடை திறந்த வெள்ளம் போல் பெருக்கெடுத்து வரும் தாய்மையின் மன எழுச்சியைத் தாலாட்டாகக் கண்ட ஆழ்வார்கள், பிற்கால கவிஞர்கள் பிள்ளைத் தமிழ் பாடினர். தெய்வத் தாலாட்டிற்கு விளைநிலம் தமிழர் பாடிய தாலாட்டுக்களே என்பதில் ஐயமில்லை. கடவுளைக் குழந்தையாகக் கருதிப் பாடிய பாடல்களைத் தொல்காப்பியப் புறத்திணை பகுதி குறிப்பிடுகிறது. எனவே தொல்காப்பியர் காலம் முதல் தாலாட்டு இருந்து வருகிறது. இத்தகைய தாலாட்டுப் பாடல்களையும் ஞானம் இதழ் வெளியிட்டுள்ளது சிறப்புக்கு உரியது.

**ஆராரோ ஆராரோ**
**ஆரிவரோ ஆராரோ**
**பாரார் புகழ் எங்கள்**
**பௌத்திரனே கண்ணுறங்கு**
**அகதியாய் வந்தவனே!**
**யாரும் உறவற்றவனே!**
**சகதியிலே பிறந்த எந்தன்**
**தமிழ் மணியே கண்ணுறங்கு**
**தந்தையை இழந்து – உன்**
**சகோதரனையும் பிரிந்து,**
**வந்தனையே ஐயா, என்**
**வளர்மதியே கண்ணுறங்கு**
**ஏணையிலே நீ யுறங்கு, என்**
**இந்திரனே நீயுறங்கு**
**சாணை இல்லாது குளிரில்**
**நடுக்கமுடன் கண்ணுறங்கு**

(செல்லத்துரை, ஞானம் 94, மார்ச்சு 2008, ப 34)

என வரும் கவிஞர் செல்லத்துரையின் தாலாட்டுப் பாடல் குறிப்பிடத்தக்கது. வாய் மொழிப் பாக்களை ஞானம் இதழ் அதிகம் வெளியிட்டாதகத் தெரியவில்லை.

**நாடு:**

நாடற்ற நாடோடிகளாய் உலகில் யாரும் வாழ்வதில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் தாய்மொழி இருப்பதைப் போலவே தாய்நாடும் இருக்கிறது. நாட்டுப்பற்று என்பதற்கு ஒருவர் தம் நாட்டின் மீது கொண்டுள்ள அன்பு எனப் பொருள் கொள்ளலாம். நாட்டில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தலைசிறந்த குடிமகனாக விளங்க வேண்டும். தான் வாழும் நாட்டையும் வீட்டையும் நேசிக்கும் மனிதனே நல்ல குடிமகனாகத் திகழ்வான். இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தான் சார்ந்துள்ள சமுதாயத்தின் மீதும் நாட்டின் மீதும் பற்றுடையவனாக விளங்க வேண்டும். கவிஞன் தான் சார்ந்துள்ள சமுதாயத்தின் உறுப்பினனாக இருந்து நாட்டுப்பற்றை ஊட்டும் கவிதைகளைப் படைக்கிறான். இந்திய நாட்டில் தோன்றிய பாரதியார் இந்திய விடுதலைக்காகவும் இனத்திற்காகவும் நாட்டுப்பற்று மிக்க பாடல்களைப் பாடினார். அதுபோல உலகக் கவிஞர்களும் தாங்கள் சார்ந்து உள்ள நாட்டு மக்களின் நலன் பற்றிப் பாடியுள்ளனர் என்பது உண்மையாகும்.

இலங்கையில் எல்லா வளமும் இருக்கிறது. இவ்வுலகில் இருக்கும் நாடுகளில் ஒப்புயர்வற்ற நாடு. நான்கு பக்கமும் கடலலை தாலாட்டுகிறது. கடற்காற்று மகிழ்விக்கிறது. கடலிலுள்ள சொத்துகளை நம் சொத்துகளாக உழைப்பால் மாற்றிக் கொள்ளலாம். நீண்ட நெடிய மலைகளிலுள்ள அருவிகள் கண்ணுக்குக் குளிர்ச்சியளிக்கின்றன. இப்படிப்பட்ட நாட்டில் மக்கள் கலகம் செய்யாமல் வாழ்ந்தால் மகிழ்ச்சிப் பெருக்கெடுத்தேடும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?.

**சுற்றி வட்டமாக நாட்டைச் சூழும் கடலைப் பார்க்கலாம்**
**சூழும் கடலின் வளத்தை அள்ளிச் சொத்துச் சுகங்கள்**
**சேர்க்கலாம்**
**பற்றி நிற்கும் பனையில் மிக்க பயனைப் பெற்றுக்கொள்ளலாம்**
**பனையின் கல்லக்காரம் செய்து பணத்தை நிறைய**
**அள்ளலாம்!**

**விண்ணை முட்டும் மலைகள் ஓரம் விளையும் இங்கே**
**தேயிலை**
**மெல்லக்கிள்ளி அவ்இலைக்கு விலை கொடுப்பாள் சேயிழை!**
**மண்ணை மூடி நீர் சுமந்து மருவி ஓடும் ஆறுகள்**
**வயல் விளைத்து மனிதருக்கு வழங்கும் மிக்க பேறுகள்!**

**அதிஉயர்ந்த மலையில் தோன்றும் ஆற்று நீரின் வீழ்ச்சியே**
**அனைவருக்கும் இயற்கை தந்த அதிக அழகுக் காட்சியே!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதிஉயர்ந்த மனிதர் இந்த வலுவில் மின்னை ஆக்கினார்**
**மனிதர் உள்ளம் குளிருமாறு வழங்கி இருளைப்**
**போக்கினார்!**

(வ.சின்னப்பா, ஞானம் 146, ஜுலை 2012, ப.21)

எனக் கவிஞர் வ. சின்னப்பா இலங்கையின் சிறப்பை, நாட்டில் கிடைக்கும் பொருட்களைக் கூறி மக்கள் மகிழ்ச்சியாக வாழலாம் எனப் பொருத்தமாகப் பாடியுள்ளார்.

இலங்கையின் பேரெழிலைக் கண்டு களிக்க கண்கள் இரண்டு போதா. காணும் இடமெல்லாம் பச்சைக் கம்பளம் விரித்தாற் போல வயற் காடுகள் காட்சி அளிக்கின்றன. பொங்கி வரும் கடலலைகள் காட்சி கண்களுக்கும் மனதிற்கும் இதமாக அமையும். இத்தகைய நாடு எங்கள் நாடு என நாட்டின் சிறப்பை வளத்தைக் கவிஞர்கள் பாடியுள்ளனர்.

**எங்கள் தமிழ்ப் பூமி இலங்கை வடகிழக்கு**
**பொங்கு கடல் அலைகள் புரளும் ஒரு பக்கம்**
**மங்காக் குளம் வாவி மருதம் மறுபக்கம்**
**எங்கும் ஒரே அழகு இரண்டு கண் போதா!**

**காணுமிடமெல்லாம் கண் குளிரும் காட்சி**
**பூணும் அழகெல்லாம் புது வயிரம் போல**
**ஊனுமது உருகும் ஒவ்வொன்றும் அழகு**
**வானமது தானும்வணங்கும் ஒரு வனப்பு!**
**நீரெல்லாம் மீன்கள் நீந்தி விளையாடும்**
**ஊரெல்லாம் வயல்கள் உழவரவர் ஆட்சி**
**ஏரெல்லாம் பாயும் எங்கும் நெற் பசுமை**
**சீரெல்லாம் மகிழ்ச்சி செல்வம் வேறில்லை!**

(வாகரைவாணன், ஞானம் 100, செப்டம்பர் 2008, ப. 111)

எனக் கவிஞர் வாகரை வாணன் இலங்கை இயற்கை அழகைப் பாடியுள்ளார். இத்தகைய சிறப்புமிக்க நாடு இன்று எப்படி உள்ளது என்பதையும் கவிஞர்கள் பாடியுள்ளனர்.

**புலம்பெயர்ந்த தமிழர்:**

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து உலகின் பல பாகங்களில் வாழும் தமிழர்கள் தமிழை வளர்க்கவும் பிள்ளைகளுக்குச் சொல்லித் தரவும் முயற்சி செய்கின்றனர். இதற்குப் பல அமைப்புகளை ஏற்படுத்தித் தமிழ்ப் பணி ஆற்றுகின்றனர். தமிழ் இலக்கியத்தை வளர்ப்பதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்கின்றனர். இவர்களின் செயற்பாடு களையும் ஞானம் இதழ் ஆவணப்படுத்தியுள்ளது. இதனால் படைப்பாளர்கள் உருவாக புலம் பெயர்ந்த தமிழர்கள் பாடுபடுவதை உணர முடிகிறது.

**புலம் பெயர்ந்து போனபின்னும்**
**வளஞ்சிறக்குந் தமிழ்மொழியை**
**புத்துணர்ச்சி யோடெழுதிக் காட்டினார் – அதன்**
**நலஞ்செறிந்து புகழோங்க**
**நறைகொண்ட மலர்மீது**
**வண்டமர்ந்த வாறமர்ந்து போற்றினார்!**

**அட்டதிக்கும் வாழ்வின்வேர்**
**ஆழப்ப திந்தோட**
**அணிமுத்து மாலையெனச் சூடினார் – நல்ல**
**திட்டமுடன் செந்தமிழைச்**
**சிங்காரித் தின்புறவே**
**தினந்தோறும் ஆவலுடன் கூடினார்!**
**கட்டழகு வீசுகின்ற**
**கன்னிகைமீ தெறிகின்ற**
**காதற்பார் வை தன்னை வீசினார் – பெரும்**
**இட்டமுடன் அவளோடு**
**இணைந்து குலாக் காண்பதுபோல்**
**எழில் மாது தமிழோடு பேசினார்!**
**திரை தாண்டி வந்தாலும்**
**திரைபோட வியலாது**
**சிந்தையிலே செந்தமிழைப் பூட்டினார் – அவர்**
**நரைதோன்றி விட்டாலும்**
**நானிலத்தில் தேமதுரத்**
**தமிழ் பரப்பும் ஆசைதனைக் கூட்டினார்!**

**நாளிதழ்கள் கதை கவிதை**
**நல்லதமிழ் சஞ்சிகைகள்**
**தொகுப்புநூல் எனத் தமிழைத் துலக்கினார் – தமிழர்**
**வாழுமிடந் தென்துருவம்**
**வடதுருவம் ஆனாலும்**
**வளர்க தமிழ் என்றுதலை தூக்கினார்!**

(அலி, ஞானம் 101, அக்டோபர் 2008, ப. 8)

இவ்வாறு கவிஞர் அலி புலம்பெயர்ந்த தமிழர்கள் ஆற்றிவரும் தமிழ்ப்பணியைப் பாராட்டியுள்ளார். இதற்கு எதிர்மறையான கருத்துகளையும் கவிஞர்கள் பாடியுள்ளனர். அதாவது இன்றைய சூழலில் புலம்பெயர்ந்த தமிழர்கள் தமிழ்மீது பற்றுடையவர்களாக இருப்பதால் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பாடுபடுகின்றனர். இவர்களது பிள்ளைகள் இதைத் தொடர்ந்து பின்பற்றுவார்களா? என்பது கேள்விக்குறியே. இதற்குக் காரணம் என்ன வென்றால் - இவர்கள் படிப்பது தமிழா எனத் தெரியாது. மேலும் வேலை செய்யுமிடத்தில் தமிழைப் பேச வாய்ப்பிருக்காது. இவர்களது குழந்தைகளும் வேற்றுமொழியைப் படிக்கும் வாய்ப்பு அதிகமுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முகவரிகளைத் தொலைப்பதற்கு**
**முன்னுரை எழுதுவோர்**
**தமது எதிர்காலம் தெரியாமல்**
**இறும்பூது எய்துகிறார்கள்!**
**புலம் பெயர் இலக்கியம்**
**கடல் கடந்த தமிழ்ப்பணி என்பதெல்லாம்**
**இன்று கவர்ச்சியாகத் தெரிகின்றன**
**நாளை என்னாகும்?**
**இன்றைய தலைமுறை எடுத்த பணியை**
**நாளைய சந்ததி தொடருமா?**

(அருள்மணி, ஞானம் 12, மே 2001, ப. 2)

எனக் கவிஞர் அருள்மணி அடுத்த தலைமுறையினர் இதைத் தொடர்ந்து செய்வார்களா என ஆதங்கப்படுகிறார்.

இலங்கை தமிழர்கள் புலம்பெயர்ந்து உலக நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். அந்நாடுகளில் மகிழ்ச்சியாக வாழ்ந்தபோதும் தாயக நினைவுகள் அவர்களை வதைத்துக் கொண்டே இருக்கிறது. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் தாயக ஏக்கங்களைக் குறித்த கவிதைகளையும் கவிஞர்கள் படைத்துள்ளனர்.

**நான் இங்க புறப்பட்டு வந்தபோது**
**எனது அன்னை தேசம்**
**யுத்தத்தின் எரிதணலால்**
**வன்கலவி புரியப்பட்டு**
**அழிவுகளையும் சிதைவுகளையும்**
**எச்சமாய் போன சிதிலங்களையும்**
**கொண்ட பாலைவனமாயிருந்தது**
**புலம்பெயர்ந்து வாழ்கின்ற**
**புதிய தேசத்து மண்ணில்**
**ஆழக்கால் பதித்த பின்பும்**
**தன் தாயின் கருப்பை சுவர்களை**
**உதைத்து உதைத்து**
**வெளியேறத் துடிப்பதுவாய்**
**பிறந்து வளர்ந்த தாயகத்திற்காய்**
**என் மனம் தாவி அலைகிறது**

(முருகானந்தன், ஞானம் 81, பிப்ரவரி 2007, ப. 22)

எனக் கவிஞர் முருகானந்தன் புலம்பெயர்ந்து வாழ்ந்தபோதும் தாய்நாட்டை மறக்க முடியாது வாழும் தமிழர்களின் மனநிலையைப் பாடியுள்ளார்.

புலம்பெயர்ந்து உலக நாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் மீண்டும் தாயகம் வந்து மகிழ்ச்சியாக வாழவேண்டும். தமிழர் வாழும் பகுதிகளில் கண்டவர் வந்து வாழ முற்படுகிறார்கள். இதனால் நமது வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. ஆகவே புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் தாயகம் வந்து மகிழ்ச்சியோடு பண்பட்ட வாழ்க்கை வாழவேண்டும்.

**ஈழத்தமிழ் மண்ணைக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கோ**
**– நீங்க**
**வாழும் நாட்டை விட்டுமீண்டும் இஞ்சை வாருங்கோ**
**எல்லைக்குள்ளே யாரோவந்து எம்மை ஏய்க்கிறார்**
**கல்லை மண்ணை மரத்தைக் கிளறிக் காசு சேர்க்கிறார்**
**வல்லமையைக் காட்டி எங்கள் வளத்தை அள்கிறார்**
**தொல்லைகளைக் கூட்டி எம்மைத் தூர விரட்டுறார்**
**எங்கள் மண்ணுள் ஊடுருவும் இழிகுணத்தாரால்**
**தங்கமான தமிழர் வாழ்வு தடுக்கி விழுகுது**

**சங்கடங்கள் குறைந்திருந்த எங்கள் மண்ணினைச்**
**செங்களமாய் மாறச்செய்யும் சூதும் நடக்குது**
**அரசமதத் தந்தச்சாமி வந்து குந்தவே**
**அரசமரப் பிள்ளையாரும் அகற்றப் படுகிறார்**
**பிரச்சினைகள் நாளுக்குநாள் பெருகி வருகுது**
**உரத்துக் குரல் கொடுக்கும் உரிமை உடைக்கப் படுகுது**

**மேலைநாட்டுப் பழக்கம் கட்டு மீறிப் பெருகுது**
**சேலை வேட்டி கட்டும் பழக்கம் சுருங்கிப் போகுது**
**வேலைவெட்டி இன்றித் திரியும் வீணர்களாலே**
**மூலைமுடுக் கெல்லாம் குழப்பம் மூட்டப் படுகுது**

**வீட்டுக்கெண்டு நீங்கள் அனுப்பும் வெள்ளிக் காசினால்**
**கோஷ்டிமோதல் குத்துவெட்டுக் கொலைகள் கூடுது**
**பாட்டன்பூட்டன் பதித்துவைத்த பாசம் பண்பெல்லாம்**
**கூட்டுச் சேரும் கொடியவரால் குதறப் படுகுது**

**போதையூட்டும் பொருளை உண்டு பொடியள் மயங்கிறார்**
**வேதனையால் அந்தப் பெற்றோர் வெம்பி அழுகிறார்**
**சோதனைக்கு என்றுசீரு டைகளைப் போர்க்கும்**
**பாதகரால் பணம் நகைகள் பறிக்கப் படுகுது**

**தந்தைதாயர் பிறந்து வாழ்ந்த தமிழர் மண்ணிலே**
**சொந்தமொழி சமயம் வாழ்க்கை சிதைந்து போகுது**
**எந்தநாளும் இடைஞ்சல் என்பதெங்கும் மலியுது**
**நொந்துமனம் வாடுகின்ற நிலையுந் தொடருது**

**எங்கள்மண்ணை விட்டுநீங்கள் ஏகிய போதும்**
**உங்கள் வேர்இம் மண்ணில் என்ற உண்மை உறுதியே**
**பங்கமின்றி உங்கள்பரம் பரைகள் தொடரவே**
**எங்கள் மண்ணே ஏற்றதுண்மை உணர்ந்து வாருங்கோ**

**எங்கள்தொகை நாளுக்குநாள் இறங்கிக் கொள்ளுது**
**இங்குகுடி யேறஏவல் பேய்கள் முயலுது**
**உங்கள் காணி பூமிகளை உதறிடா மலே**
**இங்குவந்து வாழ்ந்து எமக்கு உதவி செய்யுங்கோ**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரிலங்கை நாட்டி லெங்கள் சொந்த மண்ணிலே
ஆருக்குமே அடிமையின்றி வாழவிரும்பு றோம்
ஊருக்குரி யோர்களெல்லாம் ஒன்றுபட்டாலே
தேரிழுக்க லாம் அதனால் திரும்பி வாருங்கோ

விரலுக்கேற்ற வீக்கம் என்ற வேதம் உணர்ந்தே
அரியசிறிய தொழில்க ளாற்றி ஆக்கம் தேடுவோம்
உரிமையோடு உலகில் எங்கள் உயர்வைக் காட்டுவோம்
பெருமை மிக்க எங்கள் மண்ணின் பெருமை நாட்டுவோம்
செல்வசுகம் தேடிவெளியில் வாழ்ந்தது போதும்
அல்லும் பகலும் வேலைசெய்து அலுத்ததும் போதும்
நல்ல மனிதப் பண்புகளை நாளும் வளர்த்தே
தொல்லை யில்லா நாட்டை ஆக்கத் திரும்பி வாருங்கோ

நல்லை மாவை சந்நிதியில் நாளும் வேண்டிறோம்
நல்ல தீர்வு தந்து நம்மைக் காக்க வேண்டுறோம்
கல்வி கலாசாரம் கமம் கைத்தொழிலோங்கிச்
சொல்லுபுக ழோடுவாழத் தினமும் வேண்டுறோம்

(சிற்பி, ஞானம் 170, ஜுலை 2014, ப. 15)

எனக் கவிஞர் சிற்பி இலங்கை இனப் போருக்குப் பின்னரான சூழலைக் பாடி உள்ளார். எஞ்சியிருக்கும் தமிழர்கள் வாழ்க்கை சிறக்க புலம் பெயர்ந்த தமிழர்கள் தாயகம் திரும்பவேண்டும் எனக் கவிஞர் கூறியுள்ளார்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து உலக நாடுகளில் வாழும் தமிழர்கள் அந்தந்த நாட்டுக் குடியுரிமை பெற்று மேம்பட்ட வாழ்க்கை வாழ்கின்றனர். இவர்கள் தாங்கள் பிறந்த நாட்டைப் பற்றி அதிகம் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இவர்கள் பண்பாட்டுப் பாதையிலிருந்து விலகி நடக்கத் தொடங்கி விட்டார்கள். இவர்களது பிள்ளைகளும் இதைத்தான் பின்பற்றுவார்கள் என்பதைச் சொல்ல வேண்டியது இல்லை.

இமயத்தில் கொடியேற்றிய பெருமையை
இற்றைவரை கூறிக்கூறி
உச்சி குளிர்ந்த எம்மவரிடத்தில்
புதிய பெருமைகள் பலவும்
புகலிடம் கோரி
குடியுரிமையும் பெற்றுவிட்டன!

வெளிநாட்டு மகள் பேரப்பிள்ளைகளுக்கு
இங்கிலீசு தான் வாயில் வரும்
தமிழ் வரவே வராது என
தமிழ் தாயொருத்தி சொல்லி
தனிப்பெருமை கொண்டாட.....

நம்ம மாப்பிள்ளைப் பையனுக்கு
வேட்டியே கட்ட வராது
மாமனாரின் பெருமை இப்படியாக.....

சில இலட்சங்களை செலவு செய்து
அலங்காரம் செய்தால் மட்டுமே
மணவறையில்
அழகான மணப் பெண்ணைக் கூட
மரியாதை இராமன் மாலையிடும்
மகிமையை என்ன சொல்ல

காலை வணக்கம் காலாவதியாகி
Good Morning சொன்னாலே
தமிழ் பற்றாளர் பலருக்குக்கூட
முகமும் பொழுதும் விடிகிறது..

புதுவருட வாழ்த்து பாமரத்தனமாகி
Happy New Year கனவான்தனமாக
கை குலுக்கி நிற்கிறது.

வாழையிலை போட்டு
வருவிருந்து ஓம்பிய கலாசாரம்
சாப்பாட்டுக் கோப்பையுடன்
கியூவில் நின்று
நவீனத்துடன் சமரசம் செய்கிறது.

ஓடையிலே ஓடிய நீரை
ஊதிவிட்டு கைகளால் அள்ளிமொண்டவன்
மினரல் வாட்டர் கேக்கிறான்
கிணற்றுத் தண்ணியும்
அவனுக்கு அலர்ஜியாம்.

டா போட்டு கணவனை மனைவியும்
டி போட்டு மனைவியை கணவனும்
டீ ஏதும் இல்லாமலேயே
சந்தி தெருவில் அழைத்து
சல்லாபிப்பதும் நம்ம
புதிய தலைமுறை சந்ததியின்
அதிநவீன பெருமைகளில் ஒன்றாக
நடுத்தெருவில்.....
போடா..... போ..... இன்னும்......

(ஷெல்லிதாசன், ஞானம் 212, ஜனவரி 2018, ப 38)

எனப் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் வாழ்வியலைக் கவிஞர் காட்டியுள்ளார். இதிலிருந்து இவர்கள் மீண்டு பண்பாட்டுப் பாதையில் வாழவேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் இவரது பிள்ளைகள் வேற்று கிரகத்துப் பிள்ளைகளாகக் காட்சி அளிப்பார்கள்.

**போர்:**

இலங்கையில் 1983ஆம் ஆண்டு தொடங்கிய ஜுலை இனக்கலவரம் பின்னர் படிப்படியாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்து 1990ஆம் ஆண்டுகளில் உச்சநிலை அடைந்தது. அதன்பின் இலங்கைத் தமிழர்கள் சிங்களர்களை எதிர்த்துப் போராட வேண்டிய சூழல் ஏற்பட்டது. இதனால் மகிழ்ச்சியாக வாழ்ந்த தமிழர்கள் போரை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டார்கள். பலர் தங்களைக் காப்பாற்றிக் கொண்டால்போதும் என்ற சூழலில் அகதிகளாக இந்தியா, கனடா, ஐரோப்பிய நாடுகள், ஆஸ்திரேலியா என உலகின் பல பாகங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர். இவர்கள் தாயகம் குறித்த சிந்தனைகளுடன் படைப்பாக்க முயற்சிகளில் அதிக ஈடுபாடு காட்டுகின்றனர்.

இலங்கையில் நடந்த இனப்போரால் இலங்கைத் தமிழ்ச் சமுதாயம் சொல்லொண்ணா துயரங்களை அடைந்தது. காலம் காலமாக ஓர் இடத்தில் வாழ்ந்த தமிழர்கள் உள்நாட்டில் புலம்பெயர்ந்ததோடு அயல் நாட்டிற்கும் புலம் பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஒரே குடும்பமாக தாய்நாட்டில் மகிழ்ச்சியாக வாழ வேண்டியவர்கள் காலச்சதியால் நாட்டுக்கு ஒருவராகச் சிதறி வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையைக் கவிஞர்கள் மனவேதனையுடன் பாடியுள்ளனர்.

**வாழ்வை இழந்து வசதி பொறுக்குகின்ற**
**மனிதச் சருகுகளாய்ப் புரள்கின்றோம்**
**யாழ்நகரில் என் பையன்**
**கொழும்பில் என் பெண்டாட்டி**
**வன்னியில் என் தந்தை**
**தள்ளாத வயதினிலே**
**தமிழ்நாட்டில் என் அன்னை**
**ஒரு சகோதரியோ பிரான்ஸ் நாட்டில்**
**சுற்றம் பிராங்போர்ட்டில்**
**நானோ**
**வழிதவறி வந்துவிட்ட ஒட்டகம் போல**
**ஒஸ்லோவில்**

என ஜெயபாலன் பாடியிருப்பது வருத்தமாக உள்ளது. இலங்கையில் மகிழ்ச்சியாக வாழ்ந்தவர்கள் இனப்பிரச்சினை காரணமாக மூலைக்கு ஒருவராக வாழும் நிலை ஏற்பட்டதை மனம் வருந்தி பாடியுள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கதிர்காமம், காங்கேசன் துறை, கண்டி போன்ற இடங்களில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருகின்றனர். 1980ஆம் ஆண்டுகளுக்குப்பின் ஏற்பட்ட உள்நாட்டுப் போர் காரணமாகத் தமிழர்கள் திக்கெட்டும் சிதறி மூலைக்கு ஒருவராக வாழத் தொடங்கினர். இத்தகைய சூழலில் ஏழைத்தாய் ஒருத்தி வருத்தமுடன் வாழும் சூழலைக் கவிஞர் காட்டியுள்ளார். இலங்கைத் தாய்மார்களின் ஒட்டுமொத்த குறியீடாக இத்தாய் காட்சியளிக்கிறாள்.

**ஒரு முனிவனுக்கேயான**
**பற்றறுத்தலுடன்**
**வன்னியில் இடம் பெயர்ந்தனர்**
**மக்கள்**
**மீண்டும்**
**வாழ்தலுக்காய் வரம் கேட்டு**
**நின்றனர்**
**குடிசைகள் பூத்த மண்ணில்**
**ஒரு விதவைத்தாய்**
**இருண்மை சுவாசித்து கைகளைத் தாடைகளிடமும்**
**கண்களை வானத்திடமும் கொடுத்து**
**அவளின் மகன்**
**செம்மணியில் புதைந்து**
**கிடப்பதாய் சொன்னது**
**செய்தி**
**உறவுகள்**
**இராமேஸ்வரக் கடலில்**
**பணத்தை மாலுமியிடமும்**
**உயிரைக் காலனிடமும்**
**கொடுத்ததாய்**
**யாரோ ஒருவன் சொல்லிப்**
**போயினான்**
**இன்னும் ஏன் அவள்**
**வானத்தைப் பார்த்திருக்கிறாள்?**
**மண்ணைப் பார்த்திருக்கலாம்**
**மகன் தொலைந்த**
**இடமென்று**
**கடலைப் பார்த்திருக்கலாம்**
**உறவுகள் தொலைந்த**
**இடமென்று**
**பிறகேன் வான் பார்த்தாள்?**
**தன் வாழ்வு தொலைந்த**
**இடமென்றா?**

(முரளீஸ்வரன், ஞானம், நவம்பர் 2012, ப 95)

எனக் கவிஞர் முரளீஸ்வரன் இலங்கைத் தமிழர்களின் ஒட்டுமொத்த அவல வாழ்வைக் கவிதை ஆக்கியுள்ளார். உள்நாட்டில் புலம் பெயர்ந்த தமிழர்களும் மகிழ்ச்சியற்ற வாழ்க்கை வாழ்வதை இதனால் உணரமுடிகிறது. குடும்பத்தினர் பிரிந்த பிறகு வானத்தை வெறித்துப் பார்க்கும் தாயாரின் மனநிலையை மட்டுமா இக்கவிதை காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை விட்டும் தூவானம் ஓயவில்லை என்பது பழமொழி. இதற்கேற்ப இலங்கை உள்நாட்டுப் போர் ஓய்ந்த பின்பும் அங்கு வாழும் தமிழர்கள் தாங்கொண்ணா துயரில் தத்தளிக்கிறார்கள். முள்ளிவாய்க்கால் போரோடு முடிந்து விட்டது என அறிவிக்கப் பட்டபோதும் தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்கள் இன்னும் தொடர்கதையாய் உள்ளன. வடகிழக்கு மாகாணத்தார் தங்களைக் காத்துக் கொள்ளும் பொருட்டுப் புலம் பெயர்கின்றனர். இவர்கள் ஏன் புலம் பெயர்கின்றனர் என்றால் இங்கு வாழ்க்கை மகிழ்ச்சியாக இல்லை. எனவே மகிழ்ச்சியாக வாழ இடந்தேடி இவர்கள் பயணிக்கின்றனர். இத்தகைய போரின் தாக்கத்தால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப் பட்டது. இவர்கள் வாழ்க்கையைக் கவிஞர்கள் சோகத்துடன் பாடியுள்ளதைப் படிக்கும் வாசகரும் அதே சோகத்தை அனுபவிக்கும் மனநிலையை அடைகின்றனர்.

**முள்ளிவாய்க்கால் சமரோடு இறுதியுத்தம்**
**முடிந்து விட்ட ஈழப்போர் மக்களுக்கு**
**அள்ளிவைத்த துயர் துன்ப ஆக்கினைகள்**
**அழியாமல் இன்னுமிங்கே தொடர்வதென்ன?**
**இல்லையெனில் வடகிழக்கார் கப்பலேறி**
**ஏன் வெளியே கடல்தாண்டி உயிரைக்காக்க**
**செல்ல வேண்டும்? இதை எவரும் புரிந்தாரில்லை**
**சிந்தித்துப் பார்ப்பதற்கும் முயலவில்லை!**
**கொலை களவு கற்புழிப்பு ஆள்கடத்தல்**
**கொள்கை நீதி இல்லாமல் சிறையுடைப்பு**
**தொலையாமல் இன்னுமிங்கே தொடர்வதென்ன?**
**துயரவாழ்வு சுனாமியாகச் சூளுமானால்**
**அலைபாயும் கடல்கடந்து தமிழர் கூட்டம்**
**ஆப்பிழுத்த குரங்காட்டம் வாழ்ந்திடாமல்**
**விலை கொடுத்து வெளிநாடு சென்று வாழ**
**விரும்பாமல் வேறென்ன செய்வார் சொல்வீர்?**
**இருந்த வீடு வாசலெல்லாம் அழிந்து போச்சு!**
**இருப்பதற்குத் தகரத்தால் கொட்டில்போட்டு**
**இருங்களிதில் என்றார்கள் இருந்து கொண்டோம்**
**எங்கள் வாழ்வு செழிப்பதற்கு வழியைக்காணோம்**
**ஒருத்தருக்கும் தொழிலில்லை உழைப்பில்லாமல்**
**உண்பதற்கு உடுப்பதற்கு குழந்தைகட்கும்**
**வருத்தமேதும் வந்தாலும் என்ன செய்வோம்?**
**வாழ்க்கையெல்லாம் அடிபட்டு நொந்து போனோம்**
**சந்தேகக் கண்கொண்டு எம்மைப் பார்த்தால்**
**சரித்திரத்தில் ஒருநாளும் சமாதானத்தை**
**இந்த நாட்டில் நாம்காண இயலாதம்மா!**
**இதுவரையில் நடந்த போரை மனதில்வைத்து**
**எங்கள் வாழ்வைச் சீரழிக்கும் திட்டம்போட்டால்**
**இங்கெவரும் வாழ்வதற்கு விரும்பமாட்டார்.**
**அந்த ஒரு காரணம்தான் அலைகடலை**
**அவர் தாண்டிப் போகின்றார் அறிந்து கொள்வீர்!**

(குணராசா, ஞானம் 149, அக்டோபர் 2012, ப. 29)

எனக் கவிஞர் குணராசா இலங்கைத் தமிழர்களின் வாழ்வியலை வடித்துக் காட்டியுள்ளார். போருக்குப் பின்னும் இந்நிலை என்றால் போருக்கு முன் உள்ள நிலையைச் சொல்ல வேண்டியதில்லை.

இலங்கை போரின் வடுக்களை, தமிழர்கள் அனுபவிக்கும் துன்பங்களைக் கவிஞர்கள் பாடியுள்ளனர். இப்பாக்களை வாசிக்கும் வாசகர்கள் கண்களும் குளமாகின்றன. தமிழர்கள் ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்குப் புலம்பெயர்ந்து வாழும் சூழல் ஏற்பட்டது. பலர் தங்கள் இன்னுயிரை விட்டனர். சிலர் உண்ண உணவின்றி தங்க இடமின்றி ஏதோ உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நடைப் பிணமாக வாழ்கின்றனர். அகதி முகாம்களில் வாழும் தமிழர்களின் துயரங்களைச் சொல்ல வார்த்தையில்லை.

**இலங்கிடும் ஈழ நாடு இடையறா யுத்தப் பாட்டில்**
**துலங்கிடும் பான்மை சொன்னால் துயரமே விஞ்சு தம்மா!**
**பலமுனைத் தாக்கத் தாலே போக்கிட மிழந்த தாலே**
**புலம்பியே அழுது நாங்கள் புலம்பெயர்ந் தழிய லானோம்**

**செல்லடி வந்து வீழ சிலவுயிர் வெந்து மாள**
**வில்லடி பட்ட புட்கள் விரைந்திடும் பாங்கில் நாங்கள்**
**சொல்லொணாத் துயரத் தோடு சேர்ந்தனம் அண்டை நாடு**
**மெல்லவும் பருக்கையில்லை மேவுது வறுமைத்**
**தொல்லை!**

**உயிரினைக் கையில் பற்றி உறைவிடம் தேடிச் சுற்றி**
**துயரினைக் காவி நின்றோம்! தொல்லைகள் சொல்ல ஒன்றோ?**
**வயல்வளம் எல்லாம் போச்சு! வதிவிடம் கேம்பு மாச்சு!**
**அயலினில் மறியற் சாலை அமைப்பதே அரசின் வேலை!**

**ஆமையின் கவசம் போல அகதிகள் முகாமிற் சால**
**சேமமாய்க் குந்தக் கூட சீர்வளம் அங்கு இல்லை!**
**நாமதில் தொங்கும் பாடு நவிலவோ வார்த்தை யில்லை!**
**ஊமையன் கனவு போல உறங்குது துயர மெல்லாம்**

**அரைகுறை ஆடை யோடும் அகதியாம் பட்டத் தோடும்**
**விரைவதே வாழ்க்கை யாச்சு! வளமெலாம் தூர்ந்து போச்சு!**
**வரையறை யில்லா யுத்தம் வளருது வகையாய் நித்தம்!**
**அரைத்தமா அரைத்து மேலும் அம்மியும் தேய்ந்து போச்சு!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் நல்லாறு தேய்ந்தினி ஏற்றமாய் வாழ்வியலில்
எல்லா நிலையிலும் கீர்த்தி எளிதினி லெய்திடவே
கொல்லாமை வேண்டும் உலகினிற் கோர வெறியுணர்வு
இல்லாமை வேண்டும் இனியவந் நாளைநாம் காண்குவமே!

சாதி சமயச் சழக்கினாற் சண்டை வலுத்திடவே
மோதி மனிதர்கள் நாளுமே மாண்டு மடிவதனால்
ஏது பலனைநாம் கண்டோம் எமக்குள் பிரிவினைகள்
போதும் பலரும் சகோதரப் பாங்கினில் வாழ்குவமே

(ஏறாவூர் அனலக்தர், ஞானம் 100, செப்டம்பர் 2008, ப. 237)

எனக் கவிஞர் ஏறாவூர் அனலக்தர் தந்துள்ள கவிதை உண்மையைச் சொல்கிறது. இப்படி இனப்பற்றுள்ள கவிஞர்கள் வாழ்கிறார்கள் என்பதைக் காணமுடிகிறது.

இலங்கை போரினால் ஏற்பட்ட இழப்புகளை, தமிழர்கள் அடைந்த துன்பங்களைக் கவிஞர்கள் பாடியுள்ளதை ஞானம் வெளியிட்டுள்ளது. இக்கவிதைகளை வாசிப்பர் கண்களும் ரத்தக் கண்ணீர் வடிக்கும் அளவுக்கு சோகங்களைச் சுமந்துள்ளன.

இத்திரு நாட்டிலே எத்தனை காலம்
யுத்தம் நடந்நிடவே – இங்கு
எத்தனை மாந்தர் சித்தம் குலைந்திட
நித்தம் பெயர்ந் தனரோ
வீட்டைத் துறந்தவர் காட்டில் வாழ்ந்த
வேளைகள் கணக் கில்லை – இன்னும்
நாட்டைத் துறந்தவர் நாடுகள் சென்றது
நமது கணக்கில்லை

உடமை துறப்பதும் உறவைத் துறப்பதும்
உள்ளம் மகிழ்வ தல்ல – பெருங்
கடலைக் கடந்தவர் சென்றது கூட
உடல் உயிரைக் காத்திடவே
கொட்டிலைப் போலொரு மண்டபங் கொண்டு
கூட்டாய் அங்கே வாழ்ந்து – அவர்
பட்டது பாடங்கே தொட்டது சூன்யம்
நட்ட மடைந்ததே மிச்சம்

அல்லல் பட்டோரின் அவலக் குரலை
தொல்லை யாக நினைத்து – கடும்
கல்லு மனங்கொண்டு துப்பாக்கி யேந்தி
கலைப்பது வும் முறை யல்ல
இனங்களுக் கிடையே முறுகல் வருவது
இயற்கை யென்பதை யுணர்ந்து – நல்
மனமொன் றிணைந்து இலங்கை யராக
வாழ்வோம் என்றும் சிறக்க

(நிசார், ஞானம் 102, நவம்பர் 2008, ப. 07)

எனக் கவிஞர் நிசார் இலங்கைத் தமிழர்களின் உண்மை நிலையைப் பாடியுள்ளார். இத்தகு அவலவாழ்வு இலங்கை தமிழர்களை விட்டு நீங்கும் நாளே அவர்கள் மகிழ்ச்சியாக வாழும் நாளாக அமையும். அந்நாள் எந்நளோ!

இலங்கையில் நடந்த இனப்போர் காரண மாகத் தமிழர்கள் உள்நாட்டிலும் வாழ முடியாத நிலை ஏற்பட்டதால் தங்கள் வாழ்விடங்களை விட்டு வேறு பகுதிகளுக்குப் புலம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. சிலர் நாட்டை விட்டுத் தப்பித்தால் போதும் என வேற்று நாடுகளுக்கு உயிரைப் பணயம் வைத்து புலம் பெயர்ந்தனர். இத்தகைய சூழ்நிலையில் இவர்கள் மனநிலை எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பார்ப்பதற்கே வருத்தமாக இருக்கிறது.

அறுவரும் குடும்பத்தோடு
வெளிநாடு சென்று
அகதியானார்கள்!
தாய் தந்தையோ
சொந்தமண்ணில் அகதிகளாகி
தனித்தனர்!

(எதிர்வீரசிங்கம், ஞானம் இதழ் 111, ஆகஸ்ட்டு 2009, ப 28)

எனக் கவிஞர் எதிர்வீரசிங்கம் இவர்களின் வாழ்க்கையைப் பாடியுள்ளார். உள்நாட்டில் மகிழ்ச்சியாக வாழவேண்டியவர்களும் அகதியாக வாழும் நிலையை என்னென்பது.

இலங்கையில் நடந்த போரில் இனப் படுகொலை நடந்ததைப் பல கோணங்களில் கவிஞர்கள் பாடியுள்ளனர். இக்காலத்தில் பல பெண் கவிஞர்கள் தோன்றி தங்கள் உள்ளக் குமுறல்களைப் பாக்களாக வடித்துள்ளனர். இப்பாக்களில் தமிழினத்தை அழித்தொழிக்க சிங்கள அரசு செய்யும் செயல்களைப் பாடியுள்ளனர்.

சமாதானத்திற்காய்ப் போரிடும்
புத்தரின் வழிவந்தவர்களுக்காய்
உங்கள் யோனிகளைத் திறவுங்கள்
பாவம்
அவர்களின் வக்கிரங்களை
எங்கு கொட்டுதல் இயலும்
வீரர்களே! வாருங்கள்
உங்கள் வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள்
என் பின்னால்
என் பள்ளித் தங்கையும் உள்ளாள்
தீர்ந்ததா எல்லாம்?
அவ்வளவோடு நின்று விடாதீர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ச்சன் நூலகம்
யாழ்ப்பாணம்

**எங்கள் யோனிகள் ஊடே**
**நாளைய சந்ததி தளிர்விடக்கூடும்**
**ஆகவே**
**வெடிவைத்தே சிதறடியுங்கள்**
**ஒவ்வொரு துண்டுகளையும் கூட்டி அள்ளிப் புதையுங்கள்**
**இனிமேல் எம்மினம் தளிர்விட முடியாதபடி**

**சிங்களச் சகோதரிகளே**
**உங்கள் யோனிகளுக்கு**
**இப்போது வேலையில்லை**

*(கலா, ஞானம் இதழ் 150, நவம்பர் 2012, ப. 34)*

எனக் கவிஞர் கலா பாடலில் கவிந்துள்ள கோபத்தையும் சோகத்தையும் காணமுடிகிறது. இவ்வளவு கடுமையான முறையில் சிங்கள ராணுவ வீரர்கள் நடந்துக் கொண்டதைக் கேட்ப தற்கே வருத்தமாக இருக்கிறது. இதை நேரில் பார்த்தவர்கள் அல்லது அனுபவித்தவர்கள் எவ்வளவு நெருக்குதலுக்கு உள்ளாகி இருப் பார்கள் என்பதை நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை.

இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவுற்ற நிலையிலும் தமிழர்கள் அச்ச உணர்வுடன் வாழ்கின்றனர். இலங்கையில் வாழும் தமிழர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நாளை உயிருடன் இருப்போமா என்ற ஏக்கத்துடன் வாழும் போக்கைக் கவிஞர்கள் பாடியுள்ளனர்.

**முள்ளிவாய்க்காலில்**
**இனமொன்றை**
**புதைத்து அழித்து விட்டு**
**புதுப்பிக்கப்பட்ட தீவில்**
**பலவித வெற்றிக் கொண்டாட்டங்கள்**
**புதுப்புது மதவாத கண்டுபிடிப்புக்கள்**
**இருப்பின் மீதான**
**புதுவித அபகரிப்புக்களும்**
**ஒருவித ஆக்கிரமிப்புகளும்**
**புதிய சட்டதிட்டங்கள்**
**புதுவித அடக்குமுறைகள்**
**ஆனால்**
**மக்கள் மட்டும்**
**பழைய கனவுகளுடனும்**
**அதே தாகத்துடனும்**
**வாழும் கொடுமையான காலமிது!**

*(அஸாத் எம் ஹனிபா, ஞானம் 158, ஜுலை 2013, ப. 18)*

எனக் கவிஞர் அஸாத் ஏக்கங்களுடன் வாழும் தமிழர்களைப் பாடியுள்ளார். இவர்கள் வாழ்க்கை எப்போது மகிழ்ச்சியாக அமையுமோ அப்போதுதான் இலங்கைத் தமிழர்கள் மகிழ்ச்சியாக வாழும் நாளாக அமையும்.

இலங்கை போர் உண்டாக்கிய சோகத்தி லிருந்து தமிழர்கள் விடுபட வேண்டும். இவர்கள் வந்தேறு குடிகள் அல்லர். இந்நாட்டில் பிறந்து வளர்ந்து இந்நாட்டின் உயர்விலும் தாழ்விலுரும் உடனிருந்தவர்கள். இவர்களும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற சிந்தனை சிங்கள அரசாங்கத்திற்கு வர வேண்டும்.

**வெந்தெரியும் வீட்டுக்கோ தீயுமூட்டி மேலும் எண்ணையூற்றி!**
**இந்தவுலகம் மகிழ்ச்சி கொள்வதென்றால் வெட்கம் வெட்கம்!**
**செந்தணல் அதனில் அகப்பட்ட புழுவதுபோல் துடிக்கின்றார்!**
**பைந்தமிழ் இனப் பாவிகளாம் கொடும் போரதனில் சிக்கியன்றோ!**
**எங்குதான் நீதிநிலையில்லா வாழ்வோ இன்னும் தொடருமென! செங்குருதிவழிந்தோடத் தேம்பியழுது நிற்கும் எமது மக்கள்!**
**பொங்கிவடிக்கும் கண்ணீரும் ஓயாதோ ஒழியாதோ இறைவா!**
**சிங்கமெனக் கிளர்ந்தெழுந்து நிற்கும் இனவெறிப்போர் வேண்டாம்!**

**பல்லாயிரக் கணக்கில் பிறந்த மண்ணில் அகதிளான இனமானோம்!**
**பொல்லாத போர்தந்த பரிசதுவாம் போதும் போதும் தலைவா!**
**செல்லாத காசல்ல நாம் மரஞ்செடிகொடிகளல்ல**
**வந்தேறுகுடிகளல்ல! நல்லதீர்வொன்றைக்**
**காணத்துடிக்கும் இந்நாட்டுமைந்தர்தாம்!**

*(வேலணை வேணியன், ஞானம்)*

எனக் கவிஞர்களின் வேதனைகள் பாக்களாக உள்ளன. இவர்கள் வடிக்கும் கண்ணீர் சிங்கள அரசாங்கத்திற்கு எப்போது தெரியுமோ!

இலங்கையில் நடந்த இனப்போர் வரலாற்றில் வடுக்களாய்த் தோன்றுகிறது. இதைப் பற்றி நினைத்த மாத்திரத்தில் மக்களடையும் துன்பங்கள் எண்ணில் அடங்கா. தமிழர்கள் வாழ்ந்த இடங்களை இப்போது பார்த்தால் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பொட்டல் காடாகக் காட்சியளிக்கிறது. நன்செய், புன்செய் நிலங்கள் இருக்குமிடம் தெரியவில்லை. எல்லாம் இழந்த காரணத்தினால் தமிழர்கள் அகதிகளாக முகாம்களில் வாழ நேரிட்டது. இந்த அவலத்தை எப்படிச் சொல்வது என வேதனையுடன் கவிஞர்கள் தமிழர் வாழ்வைக் காட்டியுள்ளனர்.

**போரதன் வடுக்கள் எங்கும் புலப்படும் பார்க்கும் போது**
**ஊரதன் அழிவு தன்னை ஒவ்வொன்றும் எடுத்துச் சொல்லும்**
**பேரருள் நிறைந்த காலம் பீதியில் மக்கள் எல்லாம்**
**நீரது கண்ணில் மோதும் நெஞ்சமும் மறக்குமாமோ?**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்லதன் குவியலாக கட்டியவீடு தோன்றும்**
**நெல்லது விளையும் அந்த நிகரில்லாக் கழனியாவும்**
**புல்லுகள் வனங்களாக பூமியை மூடிக் கொள்ளும்**
**நல்வளம் மிக்க ஊர்கள் நாசமாய்ப் போனதம்மா!**

**கல்லினில் எழுத்துப் போல காண்கின்ற இடங்கள் தோறும்**
**சொல்லொணா வடுக்கள் தம்மை சுமந்துமே நிற்கும் ஊர்கள்**
**பல்விதக் கதைகள் கூறும் படிப்பவர்க் கெல்லாம் நாளை**
**நல்லதோர் வரலாறாகும் நடந்ததை மறக்க லாமோ?**

(வாகரைவாணன், ஞானம் 183, ஆகஸ்ட்டு 2015, ப.38)

எனக் கவிஞர் வாகரைவாணன் தமிழர்களின் உணர்வுகளைப் படைத்துள்ளார். இப்போர் எதிர்காலத்தில் பல தகவல்களைத் தரும் என்பதில் ஐயமில்லை. இத்தகு அவல வாழ்க்கை உலகில் யாருக்கும் வாய்க்கக் கூடாது.

காலைக் கதிரவன் எழும்போது சிங்கள இராணுவத்தினர் தங்கள் வேலையைத் தொடங்கி விட்டனர். இதனால் விழிக்கும்பேதே பலர் இறந்ததைக் கண்ணால் பார்த்த காட்சி மனத்திரை முன்னே இன்னும் அப்படியே தோன்றி மறைவதைப் பாடுவதா! பச்சிளங் குழந்தை முதல் முதியவர் வரை நாள்தோறும் மடிவதைப் பாடுவதா! முற்றங்களை, காணிகளை இழந்து மரத்தடியில் குடும்பம் நடத்தும் சோகத்தைச் சொல்வதா! எனக் கவிஞர்கள் பாடியுள்ளனர்.

**கிழக்கிலே வெய்யோன் வந்து கிரணங்கள் பரப்பு முன்னம்**
**வழக்கமாய் உறக்கம் நீங்கி வையகம் விழிக்கும் வேளை**
**முழக்கங்கள் இட்ட வண்ணம் முற்றத்தில் "பொம்பர்" வந்து**
**இழவினைத் தோற்றி விட்ட இடருறு நிலை சொல்வேனோ?**

**பாலர்கள் பருவப் பெண்கள் பால்மறக் காத சேய்கள்**
**காளையர் முதியோ ரெல்லாம் சுணத்திலே சிதறிச் சாக**
**கால்களை இழந்தோர் தங்கள் கைகளை இழந்தோர் "ஆவி**
**நூலிடைக் குள்ளே தப்பி நொந்தவோர் நிலை சொல்வேனோ?"**

**ஒட்டமும் நடையு மாகி ஓரிடம் நிலையில் லாமல்**
**வாட்டிடும் வெயிலின் கோரம் வருத்திட பனியும் வாட்ட**
**மாட்டிலும் கீழாய் இங்கு மரநிழல் தனிலே வாழு(டு)ம்**
**வாழ்க்கையை ஏற்ற மாந்தர் வாழ்ந்தவோர் நிலை**
**சொல்வேனோ?**

**குளிப்பிடம் இல்லை! ஒன்று கூடியோர் அனைவ ருக்கும்**
**கழிப்பிடம் இல்லை! பற்றைக் காடுகள் இடமாய் ஆகும்**
**களிப்பினை இழந்த மாந்தர் கவில்கின்ற நிலைகள்**
**கண்டுவிழிகள்**
**தான் கசிந்த அந்த வேதனைக் கதை சொல்வெனோ?**

**செல்விழும் பிணங்கள் நூறு சிதறிடும் அனைவ ருந்தான்**
**செல்வது எங்கே யென்று தேர்ந்திடா மனத்த ராகி**
**அல்லிலே பயணம் போயும் அல்லலே வாழ்க்கை யாகித்**
**தொல்லைகள் கண்டோர் அல்லில் தூங்கிடா நிலை**
**சொல்வேனோ?**

**பதுங்கிடும் குழிக ளுக்குள் பயத்தினால் ஒளித்**
**தொளித்துவதங்**
**கியே வாடிச் சோர வசந்தமோ தொலைவுக் கேக**
**சஞ்சலம் கண்டு கண்டு சத்திலா வாழ்க்கை வாழ்ந்த**
**நெஞ்சகம் விட்டு நீங்கா நினைவுகள் தனைச்**
**சொல்வேனா?**

(கௌரிதாசன், ஞானம் 149,அக்டோபர் 2012, ப. 17)

எனக் கவிஞர் இலங்கைத் தமிழர்களின் போர்க்கால வாழ்வைப் பாடியுள்ளார். இக் கவிதையை வாசிக்கும் கண்கள் குளமிகின்றன. இதை நேரில் கண்டவர் மனநிலையை, இத்துன்பங்களை அனுபவித்தவர் நிலைமை களை எண்ணிப் பார்க்க வருத்தமாக இருக்கிறது. இத்தகைய துயர்களை அனுபவித்த மக்கள் வாழ்க்கை வளம்பெற வேண்டும் என்பதே நமது விருப்பமாக உள்ளது.

**மகளிர்:**

ஒரு நாட்டின் மக்கள் தொகையில் பாதியாய் இருக்கும் மகளிரைப் பற்றிப் பாடாமல் இருக்க முடியாது. இதற்கேற்ப குழந்தைகள் எதிர்நோக்கும் சிக்கல்கள், பள்ளிப் படிப்பில் கவனம் செலுத்த முடியாமை, காதல், மேற்கத்திய மோகம், நண்பர்களின் தாக்கம், மனைவி, மருமகள், தாய், மாமியார் எனப் பெண்களின் பல்வேறு நிலைகளை ஞானம் கவிஞர்களும் பாடியுள்ளனர். இக்காலத்தில் பெண்கள் எப்படி வாழவேண்டும், எப்படி வாழக்கூடாது எனப் பல பாடல்களைக் கவிஞர்கள் படைத்து உள்ளதைக் காணமுடிகிறது.

குழந்தை வளர்ப்பு தமிழர்களின் பண்பாட்டுச் சிந்தனைகளில் ஒன்றாகும். குழந்தைகளே நாட்டிற்கும் வீட்டிற்கும் நற்பெயரைத் தேடித் தருபவர்களாவர். அவர்களைப் பெற்றெடுத்து வளர்த்து நற்குடி மக்களாக்குவதில் பெற்றோர்க்கும் குடும்பத்திற்கும் அதிகப் பங்குண்டு. இதை நம் முன்னோர்கள் செவ்வனே செய்தனர். ஆனால் நாம் வாழும் இக்காலக்கட்டத்தில் குழந்தை வளர்ப்பு சவால் மிக்க ஒன்றாக அமைகிறது. பொருளாதாரச் சூழலில் அலைந்து உழலும் இன்றைய மக்கள் குழந்தை பெற்றுக் கொள்வதே ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவாலாக உள்ளது. அப்படியே குழந்தை பெற்றுக் கொண்டாலும் அக்குழந்தையை நற்குடிமகனாக்குவது அடுத்த சவாலாக அமைகிறது. பெற்றோர் இருவரும் பணிபுரியும் இக்காலத்தில் தகவல் சாதனங் களின் பிடியிலிருந்து குழந்தையை வளர்ப்பது அடுத்த சவாலாகிறது. இவ்வளவு சவால்களுக்கு மத்தியிலும் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு பெற்றோர்களைச் சார்ந்திருக்கிறது. இதிலிருந்து ஒருகாலும் தப்பிக்க முடியாது, தப்பிக்கவும் கூடாது. குழந்தைகள்தாம் ஓர் இனத்தின் அல்லது நாட்டின் பெருமையை எதிர்காலத்தில் நிலை நாட்டுபவர்கள். அதனால் குழந்தைகளை நல்ல குடிமக்களாக வளர்க்க வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கு இருக்கிறது. குழந்தை வளர்ப்பு குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பு உடையதாகும். பண்டைக் காலத்தில் வாழ்ந்த நம் முன்னோர்களும் குழந்தைச் செல்வத்தைச் சொத்தாகக் கருதினர். பண்டைக் காலத்தில் ஒவ்வோர் வீட்டிலும் பல குழந்தைகளைப் பெற்று வளர்த்தனர். கூட்டுக் குடும்பத்தில் குழந்தை வளர்ப்பு தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூறு குழந்தைச் செல்வத்தின் சிறப்புகளைக் கூறுகிறது.

**குறுகுறு நடந்து சிறுகை நீட்டி**
**இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்**
**நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்**
**மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**
**பயக்குறை இல்லை – நாம் வாழும் நாளே**

(பாண்டியன் அறிவுடை நம்பி, புறப்பாடல் 312)

எனப் பாண்டிய மன்னன் அறிவுடைநம்பி குழந்தை செல்வத்தைப் பாடியுள்ளார். அதில் குழந்தைச் செல்வத்தின் சிறப்புகளைப் பாடியுள்ளார். இத்தகைய சிறப்பு உடைய மழலைச் செல்வம் இன்றைய சமுதாயத்தில் முற்றிலும் மாறுபட்டதாக விளங்குகிறது.

பழங்காலத்தில் குழந்தை வளர்ப்பு புனிதமான செயலாகக் கருதப்பட்டது. ஆனால் இன்று குழந்தை வளர்ப்பு என்பது துன்பம்மிக்க ஒன்றாகக் கருதப்படுகிறது. அன்று குழந்தைகளைத் தாய்மார்கள் வளர்த்தனர். ஆனால் இன்று குழந்தைகள், குழந்தைகள் காப்பகங்களால் வளர்க்கப்படுகின்றன. அதனால் அவர்களிடம் குடும்பப் பழக்க வழக்கங்களை எதிர்பார்க்க முடியாது. பொருளாதாரத் தேவை காரணமாகக் கணவனும் மனைவியும் வேலைக்குச் செல்வது அவசியமாகிறது. வேலைப்பளு, வேலையில் அதிகக் கவனம் செலுத்துதல், பதவி உயர்வு பெறவிரும்புதல், விடுமுறை எடுக்க முடியாமை முதலிய காரணங்களினாலும் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள விரும்புவது இல்லை. அப்படியே பெற்றுக் கொண்டாலும் ஆண் பிள்ளைகளைப் பெற்று எடுக்க வேண்டும் என்ற சிந்தனை தமிழர்களிடம் காணப்படுகிறது.

**அம்மா!**
**என்னைத் தெரிகிறதா?**
**என் அசைவுகளால்**
**உன்னை நான்**
**இம்சிக்கின்றேனா?**
**நீ அழுவது**
**சுகத்திலா? துக்கத்திலா?**
**அடிக்கடி**
**அப்பாவும் நீயும்**
**ஆஸ்பத்திரிக்குச்**
**சென்று வருவது – நான்**
**ஆணா? பெண்ணா?**
**என்று அறியத்தானே!**
**ஆணென்று அப்பாவும்**
**பெண்ணென்று நீயும்**
**தர்க்கம் புரிவதை**
**நானறிவேன் அம்மா?**
**ஸ்கேனில்**
**நான் பெண்ணென்று**
**தெரிந்து போய்**
**அப்பா உன்னை**
**உதைத்ததால்**
**வலிதாங்காமல் நீ**
**அந்த மரண வலியால்**
**கருவின் உள்ளாலே**
**நான் காயமாகிப் போனேனம்மா!**
**என்னையழிக்க நினைக்கும்**
**அப்பாவின் முன்னாலே**
**அப்பாவி நீ**
**என்னதான் செய்வாய்?**
**இந்தக் கருவுலக வாழ்க்கை**
**காணுமம்மா!....**
**அப்பாவின்னாசைப்படியே**
**என்னை யழித்துவிட்டு**
**அடுத்த கருவை**
**சுமக்க ஆயத்த மாகு!**
**அதுவாவது ஆணாக இருக்கட்டும்!**

(நாச்சியாதீவு பர்வீன், அக்டோபர் 2005, ப 29)

எனத் தாயின் கருவறையில் இருக்கும் குழந்தையின் ஏக்கங்களைக் கவிஞர் பாடி

யாழ். மாநகர 11 APR 2023 நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளார். இத்தகைய சிந்தனை தமிழர்களிடம் இருப்பதைக் காணமுடிகிறது. இக்காலத்தில் ஆணும் பெண்ணும் சமம் எனச் சொன்னாலும் எங்கும் பாகுபாடு நிலவுவதைக் பார்க்க முடிகிறது.

இலங்கையில் வாழும் பெண்களில் பலர் தனக்கு வரும் மருமகள் எப்படி இருக்க வேண்டும் என்று நினைத்துப் பார்க்கும் பெண்ணின் மனநிலைகளையும் கவிஞர்கள் படைத்துள்ளனர்.

**அழுகுக்கு ஒருருவாய் அவனியிலே**
**அமையவேண்டும் எனக்குமோர் மருமகளே**
**புழக்கத்தில் பெருந்தன்மை சொலிக்க வேண்டும்**
**பண்பாட்டை மறவாது நடத்தல் வேண்டும்**

**கற்றறிந்த பெண்மகளாய் இருத்தல் வேண்டும்**
**கருத்தறிந்து விருந்தளிக்கத் தெரிய வேண்டும்**
**பற்றோடு குடும்பத்தைப் பேண வேண்டும்**
**பத்தினயாய் குலமானம் காக்க வேண்டும்**

**பெண்மையதன் குணமனைத்தும் ஒருங்கே வேண்டும்**
**பேரழுகுப் பேரர்களைத் தரவும் வேண்டும்**
**மண்ணகத்தில் எனக்கேற்ற ம(று)ருமகளாய்**
**மாமி யென்னை நன்றாக மதிக்க வேண்டும்**

(ஹிதயா றிஸ்வி, ஞானம் 02, ஜுலை 2000, ப 30)

எனக் கவிஞர் ஹிதயா றிஸ்வி, மருமகள் குணங் களைப் பட்டியலிட்டுக் காட்டி உள்ளார். இன்றைய சூழலில் இப்படிப்பட்ட பெண்கள் இருக்கிறார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ.

இல்லறம் செழிக்க வேண்டும் என நம் முன்னோர்கள் சொல்லிச் சென்றுள்ளனர். அதன் அடிப்படையில் நாம் முன்னோர்களைப் பின்பற்றி குடும்பம் என்னும் கோவிலில் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும். இல்லற வாழ்வில் ஈடுபட்டுள்ள மகளிர் குடும்பபண்புகளைக் கட்டிக் காக்க வேண்டும். இவர்கள் விருந்தோம்பலில் ஆர்வம் காட்ட வேண்டும். இல்லந்தேடி வருபவர்களை இன்முகத்துடன் வரவேற்று உபசரிக்கும் குணத்தைப் பெற்றிருக்க வேண்டும். வீட்டிற்கும் நாட்டிற்கும் நல்ல குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்த்துத் தரவேண்டும். கணவனின் குணமறிந்து நடந்துக் கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட பெண்களைக் கொண்டுள்ள குடும்பம் அடையும் பேறுகளைச் சொல்லவும் வேண்டுமோ!

**அன்பில்லாப் பெண்டிர் இட்ட அன்னம்**
**அமுதல்ல அரவத்தின் கொடுவிஷமாம் நெகிழ்ந்து**
**இன்முகம் காட்டா விருந்தோம்பல் இனிமைதரு**
**இல்லற வாழ்க்கைக் குதவாப் பண்பாம்**

**கன்மனதோடு பிறர்மனம் வாடச்சுடு சொல்லெறிதல்**
**கருவளர் குழந்தையை அழித்திடல் போலாம்**
**பொன்நகை ஆயிரம் இருப்பினும் பெண்டிர்க்கு**
**பொங்கிவரு புன்னகை யொன்றே எழில்நகையாம்**

**கொண்டவன் குணமறிந்து வாழாப் பெண்டிர்**
**கொடிமர மில்லாக் கோயிலைப் போலாம்**
**உண்டி சுருங்கிடா துலவிடும் மாதரேநீர்**
**ஊறிடா துலர்ந்திடும் கிணற்றினைப் போலாம்**

**அண்டி வாழ்வோர்க் குதவிடா அரிவையர்**
**அடவிவாழ் விலங்கிலே கொடும்புலி போலாம்**
**சண்டித் தனமுடன் முண்டிநிற்கும் பெண்டிரோ**
**சாவோலை கொண்டுவரும் தென்புலத்தான் போலாம்**

(புரட்சிபாலன், ஞானம் 05, அக்டோபர் 2000, ப 21)

எனக் கவிஞர் புரட்சிபாலன் பெண்களின் குண இயல்புகளைப் பாடியுள்ளார். இப்படிப்பட்ட பெண்களை மணந்தவர் வாழ்க்கை மகிழ்சியாக இருக்குமா என்பது ஐயமே. ஆகவே பெண்கள் நம் முன்னோர்களின் பழக்கவழக்கங்களைப் பின்பற்றி வாழவேண்டும்.

பெண்கள் காலத்திற்குக் காலம் தங்கள் வாழ்வியல் நெறிகளில் இருந்து மாறுபட்டு வாழத் தொடங்கிவிட்டனர். அதனால் குடும்பப் பண்புகளும் சமுதாயச் சீர்கேடுகளும் அதிகம் பெருகக் தொடங்கிவிட்டன. மகளிரின் அகப் பண்புகளுடன் புறப்பண்புகளும் மாறிவிட்டன என உறுதியாகக் கூறலாம்.

**குட்டைப்பா வாடையும் குதறிய தலைமுடியும்**
**கட்டுக்கடங்கா அலங்காரமும் கவர்ச்சியின் வனப்பும்**
**ஆண்களினா டைக்குள் அடைக்கலமான பெண்மையும்**
**வீதிகளின் வழியே விகாரமாய்த் தெரிகிறதே.**

**சேலையும் தாவணியும் சேராமலே உடம்பில்**
**பாதியாடையும் பறந்திடு நிலையில்**
**பண்பாட்டையுமெம் பண்புகளைத் தெருவில்**
**பார்க்கும் கண்களெல்லாம் புழிக்கிறதே**

**நாகரிகமென்றதை நாளும் வளர்க்கிறாய்**
**நாமெல்லாம் பெண்ணென்பதை நிமிடத்தில் மறக்கிறாய்**
**அச்ச மடமென்பதை ஆதிகாலப் பெண்ணுக்கென்கிறாய்**
**அடக்கமென்பதை அடக்கு முறையென அழுதார்ப்பரிக்கிறாய்**

**அழுகையால் கண்ணீரால்லல அன்புமடக்கத்தினில்**
**ஆழுமையின் ஆதிக்கத்தில்**
**கலியுக போராட்டம் கரையெட் டிட்டும்**
**கயவரின் கண்களும் கைதொழு துணியட்டும்**

(எலிசபெத், ஞானம் 135, ஆகஸ்ட்டு 2011, ப. 51)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எனக் பெண்கள் ஆண்களின் மனக்கிளர்ச் சிக்குக் காரணமாக இருப்பதைக் கவிஞர் படைத்துள்ளார். பெண்கள் இப்படித் தங்களை முழுமையாக மாற்றி அமைத்துக் கொள்ளும் போது காண்பவர்களைத் தன்பால் ஈர்க்க வேண்டும் என்ற ஆர்வமும் காரணமாக இருக்கலாம் அல்லவா. ஆண்களின் தவறான ஆசைகளுக் குக் காரணமான குலப்பெண்களின் இத்தகையச் செயல்களையும் பாடி சமுதாயத்திற்கு நன்மை செய்ய வேண்டியது கவிஞர்களது கடமை யாகிறது.

தமிழர்களின் திருமணம் ஓர் இன்றியமையாத பண்பாட்டுக் கூறாகப் பண்டைக் காலம் முதல் போற்றப்பட்டு வருகிறது. அன்று மனம் ஒத்தவர்கள் மணம் புரிந்து மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். இன்று போல் அன்று பொருளாதாரம் பெரிய சவாலாக அமையவில்லை. ஆனால் இன்று திருமணத்திற்குப் பொருளாதாரம் பெரிய சவாலாக உள்ளது. கல்வியறிவு, நல்ல வேலை என்பனவும் திருமணத்தை நிர்ணயிக்கும் காரணிகளாக விளங்குகின்றன. மேலும் பிற இனப் பெண்களைத் திருமணம் புரிந்து கொள்ளுதல், திருமணமே வேண்டாம் என்ற போக்கு, தனித்து வாழமுடியும் என்ற நம்பிக்கை, அழகான பெண், அழகான பையன் கிடைக்க வில்லை போன்ற காரணங்களால் திருமணம் வேண்டாம் என்ற எண்ணப் போக்குடன் இளையர் இருக்கின்றனர். ஆனால் இவர்களுக்கு மத்தியில் சிலர் திருமணத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றனர் என்பதைத் தாங்கிய படைப்பு களும் உள்ளன. இக்கவிதைகளில் பெண்களின் மனப் போராட்டம் மிகுந்து காணப்படுகிறது. திருமணத்தில் ஆண்களுக்கு உள்ள வாய்ப்பைக் காட்டிலும் பெண்களுக்குள்ள வாய்ப்பு குறைவாக உள்ளதையும் இப்பாடல்கள் சுட்டுகின்றன.

**சீதனக் கொடுமையால கலியாணம் கட்டல என்று**
**சும்மா கதைவிடக் கூடாது கனகா உண்ர**
**அடிமனது ஆசைகளை அப்பட்டமாய் அறிவேன் நான்**
**ஆருக்கு நீ காதுகுத்துகிறாய் கடுக்கனிபோட**
**படித்துப் பட்டம்பெற்ற பெண்தானே நீயும்**
**பதவியிலுயர்ந்த இஞ்சினியர் டாக்டர் எக்கவுண்டனர்**
**புருஷனாய் வேணுமென்று அடம் புடிச்சி நீயும்**
**கணையாளிப் பேப்பரிவே விளம்பரமும் போட்டாய்**

**காணிபூமி கல்விடு தங்கநகை தருவதாய் சொன்னாய்**
**கடைசியில நினைத்தபடி எவனும் பொருந்திவரல்ல**
**காத்திருந்தாய் வயதும் நாற்பதைத் தாண்டிப்போச்சு**
**தலைமுடியில் வெள்ளிமுளைத்து வெளியே தெரிகிறது**
**தெய்வத்தை இப்போ நொந்து பயன் என்ன?**
**படிப்பிலே குறைந்தவன் பாடுபட்டு உழைப்பவன்**
**பரமசிவம் முடிப்பதற்குக் கேட்டானே உனை விரும்பி**
**கட்டாமல் கன்னியாய் இருந்தாலும் இருப்பேன் நான்**

**வேட்டி கட்டுபவன் வேண்டவே வேண்டாம் என**
**பட்டாசாய் வெடித்துச் சொன்னாயே கனகா அன்று**
**உடைபெரிதா உளம்பெரிதா சொல்லு நீ**
**உண்மையிலே யாருக்கும் புரியவில்லை பெண்மனது**

(ரூபராணி, ஞானம் 35, ஏப்ரல் 2003, ப. 51)

எனக் கவிஞர் ரூபராணி முதிர்கன்னியரின் ஏக்கங்களைப் பாடியுள்ளார். இதற்கு ஆண்கள் மட்டும் காரணம் எனச் சொல்ல முடியாது. இதனால் இன்றைய சமுதாயத்தில் ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் வாழ்ந்தாலும் திருமணம் என்று வரும்போது பெண்களின் நிலை வருத்தமாக உள்ளது. ஆயிரமாயிரம் கற்பனை களுடன் வாழும் கன்னியர்களின் வாழ்வில் திருமணத்தைத் தவிர மற்ற எல்லாச் செயல் களும் நடக்கின்றன. இதைப் பெற்றோர்கள் உணரும் அளவிற்குச் சமுதாயம் உணர்வதாகத் தெரியவில்லை என்பன போன்ற தகவல்களை இக்கவிதை உணர்த்துகிறது.

கடந்த காலப் பெண்களுடன் இக்காலப் பெண்களை ஒப்பிட்டுப் பார்த்தால் நடை, உடை, பாவனை, கல்வி எனப் பல நிலைகளிலும் மாறுபட்டுக் காணப்படுகின்றனர். இதற்குத் தகவல் சாதனங்கள் முக்கியக் காரணிகளாக இருந்தாலும் கல்வியின் பங்களிப்பு அதிகம் என்பதை மறுப்பதற்கில்லை. இதனால் இவர்கள் சிந்திக்கும் ஆற்றலைப் பெற்று எதையும் தர்க்க ரீதியாக செய்ய விரும்புகின்றனர்.

**பெண்ணே உன்னைக் கண்ணென்று கூறிடுவார்**
**பெருமைகள் பல கூறி பெருமிக்கச் செய்திடுவார்**
**ஏட்டினிலே அது இருக்க நாட்டினிலே கலங்குகிறாய்**
**ஏணிப்படியதிலே ஏறிடுவாய் துயர்துடைக்க**
**விலங்கிட்டு உன்னை இருளதிலே போட்டது யார்?**
**விழித்தெழுந்திடுவாய் அறுத்திடுவோம் விலங்கதனை**
**குடும்பம் என்று கூறி குகைக்குள் உனை அடைத்தது யார்?**
**குதர்க்கம் பேசி உனை குட்டைக்குள் போட்டது யார்?**

**கற்பென்று கூறி கதிகலங்க வைத்தது யார்?**
**கலைத்திடுவாய் போலிகளை கலக்கம் தெளிந்திடுவாய்**
**வன்செயல்கள் உன்னை வதைத்திட்ட போதும் இனி**
**வழி இருக்கு எமக்கிங்கே விழி கொண்டு பார்த்திடுவாய்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொறுமைக்கு எல்லை என்று போலிப்போர்வை போர்த்திடுவார்
பொங்கி எழுந்திடுவாய் போர்வைகளை அகற்றிடுவாய்
திரைகடல் ஓடியும் திரவியம் தேடச் சென்றாய்
திக்கெட்டும் உனது சேவை அது தின்கிறதே உனதுடலை**

**வீதியிலே சோதனைகள் உன் விழிகளிலோ கண்ணீரோ
வீட்டினிலே இரவதிலே நைட்டியுடன் கைதுகளோ
நாட்டினிலே போர் உன்னை நாராய்க் கிழித்ததுவோ
நாணங்கள் களையட்டும் நியாயங்கள் கேட்டிடுவோம்**

**சமாதான ஒளி பிறந்து உன் சங்கடங்கள் தீர்க்கட்டும்
சவாலாக நீ இருந்து சாகசங்கள் செய்திடுவாய்
பாவை உனைப்பார்த்து பாரே வியக்கட்டும்
பாடுபட்டு உழைத்திடுவாய் பாவையரை வாழவைப்பாய்**

(மல்லிகா, ஞானம் 28, செப்டம்பர் 2002, ப.2)

எனக் கவிஞர் மல்லிகா, மகளிர் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய வழிகளைக் கூறியுள்ளார். இக்காலத்தில் மகளிர் உழைப்பு வீணாவதும் அவர்கள் உழைப்பும் சுரண்டப்படுகிறது. மேலும் இவர்கள் வாழ்க்கை வளமாக அமைய வேண்டும் எனவும் கவிஞர் விரும்புகிறார்.

பண்டை காலத்தில் ஆண்களும் பெண்களும் சமமாக வாழ்ந்ததை இலக்கியங்கள் காட்டுகின்றன. இடைக்காலத்தில் தமிழக அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களால் பெண்ணடிமை தமிழ்ச் சமுதாயத்தை ஆட்டிப்படைக்கத் தொடங்கியது. எனவே பெண்களுக்கு உரிமை வழங்கவேண்டும், அவர்களும் மதிப்புடன் வாழவேண்டும் எனப் பெண்களின் உரிமைக்குக் கவிஞர் குரல் கொடுத்துள்ளார். இதனால் தமிழ்ப் பெண்கள் பெற்ற உரிமைகளை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

**சிங்காரப் பைங்கிளியே கேள்விக் கூண்டுக்குள்
சிக்கித் தவிப்பதாய்ச் சொன்னது கேட்கிறது
எங்கோ பறக்க விரும்பிய உன்சிறகை
எப்படிநீ வெட்டிவிட விட்டுவிட்டாய்**

**சிதறிக்கிடக்கும் பதில்களுக்கு எங்கிருந்தோ
சரிஎது என்று சொல்லும் தீர்ப்பாளி
பதறிநீ கலங்குவதால் பயன் ஏதுமில்லை
பாரதிகண்ட புதுப்பெண்ணாய் இன்றே மாறிவிடு
ஆவல்களை அடித்து நொறுக்கிய கேள்விகளை
அதிரடியாய்க் குப்பையிலே தயங்காது போட்டுவிடு
காவல்காப்பவனே கள்வனாய் மாறிவிட்டால்
கண்ணகியாய் அவற்றை நீ எரித்துவிடு**

**மூலகாரணத்தை நீதேடி அலைந்தாலும் கிடையாது
முன்னர்போட்டசுழி மூணுமுடிச்சாக இறுகிப்போச்சு
காலங்கள் மாறினாலும் அவிழ்க்கவா முடியுமதை
கடவுளே வந்தாலும் கேள்விகள் தொடருமடி**

**சங்கம் வைத்த தமிழன் கோபுரத்தில் பெண்ணைச்
சிலையாக வைத்தான் பேசாமல் இருப்பதற்கே
மங்கையர் இதனை நன்குணரவேண்டும்
மதிமலரே துணிவே துணைஉனக்கு**

**பாம்பாக நெளிகின்ற கேள்விகளைக் கண்டு
பயந்து நீ சாகாதே ஜான்சியாய் வாழ்ந்துவிடு
நாம்யார்க்கும் குடியல்லோம் நமனைஅஞ்சோம்
நாமகளே பொறுத்தது போதும் பொங்கிஎழு**

(ரூபராணி, ஞானம் ஜுன் 61, ஏப்ரல் 2005, ப.04)

எனக் கவிஞர் ரூபராணி பெண்கள் அனைவரும் விழிப்புடன் வாழ்வதற்கு வேண்டிய கருத்து களைக் கூறியுள்ளார்.

மண்ணாலும் கற்களாலும் அமையும் வீடு போல குடும்பம் அன்பாலும் பாசத்தாலும் அமைகிறது. அன்பு, அறம், அரவணைப்பு போன்ற குடும்பப் பண்புகளின் உறைவிடமான தாய் அக்குடும்பத்தின் தூணாக விளங்குகிறாள். பாலுடன் பாசத்தையும் ஊட்டி வளர்க்கும் அன்னைக்கு இவ்வுலகில் ஈடுண்டோ? ஒரு பெண் கருவுற்ற காலத்திலிருந்து குழந்தையைப் பெற்றெடுத்து காப்பாற்றும் தாயின் சிறப்பை வார்த்தைகளில் அடக்க முடியாது. குழந்தையைப் பெற்ற தாயும் தந்தையும் ஒவ்வொரு நொடியையும் பிள்ளைகளுக்காக வாழ்கின்றனர். இத்தகு அன்னையைக் காலந்தோறும் கவிஞர்கள் பாடியுள்ளதைப் போலவே ஞானம் கவிஞர்களும் பாடியுள்ளனர்.

**கருவறையில் அன்னை குருதிப்பால் ஈந்தாள்
பிறந்தபின்னும் வெண்ணமுது தந்தாள் – மருவும்
இடர்களைந்து போஷித்து ஏற்றமுறச் செய்தாள்
கடனவளைக் காத்தல் மகர்க்கு.**

**வேண்டாள் எதையும் விரும்பிமகர் தந்தாலும்
வேண்டாம் உனக்குஅது வேண்டுமென்பாள் – பூண்ட
சுமைமறப்பாள் தம்மக்கள் சான்றோராய்க் கேட்பின்
இமைப்பொழிந்து காத்த திரு.**

**ஊசி முனையளவும் ஊறுவரின் தன்னுடலத்
தேசம்புண் பட்ட துயர்கொள்வாள் – தூசு
நயனத்துட் புக்கின் தகிக்குமிமை ஒக்கும்
செயலன்னை கொள்ளுந் துயர்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாலமுது ஊட்டும் பொழுதுமுகம் நோக்குங்கால்
சாலத் தழுவுகின்ற சந்தோஷம் – நீலக்
கடலளவோ வான்வெளியின் கொள்ளளவோ அம்ம!
கிடைக்காத பேறவர்க்குத் தான்.

காயும் அகடு கொண்டிடினும் தம்மகர்தம்
வாயும் வயிறும் நிரம்பவென – தாய்தன்
துயர்மறந்து தேகந் துயருற்ற போழ்தும்
அயராள் பொருள்தேடு வாள்.

கொழுநன்கை விட்டாலும் காத்துவளர்க் கின்ற
பழுவைத்தோள் தாங்குகின்ற பாவை – எழுவான்
கதிர்கண்டு நாணும் இயல்புடையாள் கங்குல்
பொதிந்துங்கண் பொத்தா தவள்.

பேறுடையாள் ஆண்பால் பெறவொண்ணாப்
பாக்கியத்தின்
சீருடையாள் தாய்மைத் திருவுடையாள் – யாருடையார்
யாருமிலர் அன்னைக்கு ஈடாய்இப் பூவின்கண்
சாருமவர்க் காகுமந்தச் சீர்.

பிரதிபலன் நோக்காப் பிறவியெனில் தாயே
கருவிருந்து காத்துமகர் ஓங்க – பருவம்
வருமளவும் பின்னுந்தன் வாழுநாள் முற்றும்
அரும்பாடு பட்டுழைக்கும் பேர்.

(ஜின்னாஹ், ஞானம் 98, ஜூலை 2008, ப 33)

எனக் கவிஞர் ஜின்னாஹ் தாய்மையின் சிறப்புகளைக் கவிதையாக்கியுள்ளார். மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது ஆன்றோர் வாக்கு. இவர்களில் மாதா, பிதா முன்னறி தெய்வங்களாகவும் குரு, தெய்வம் பின்னறி தெய்வங்களாகவும் காலம் காலமாகத் தமிழினம் போற்றி வருகிறது. இத்தகு ஆற்றல் மிக்க தாயைக் காலச் சூழலால் இன்று அதிகம் போற்றுவதில்லை. இத்தகைய சூழலில் அன்னை யின் சிறப்பைப் போற்றிப் பாடவேண்டிய கட்டாயம் கவிஞனுக்கு ஏற்படுகிறது.

மறுமணம் என்பது மனைவியை இழந்தவன் மற்றுமொரு திருமணம் புரிந்தலைக் குறிக்கிறது. கணவனை இழந்த மகளிர் மறுமணம் செய்து கொள்ள வேண்டியதன் அவசியத்தைப் பாவேந்தர் பாடியுள்ளார். அந்த வரிசையில் ஞானம் கவிஞர்களும் மகளிர் மறுமணம் செய்து கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்திப் பாடியுள்ளனர். ஆண்கள் மறுமணம் செய்து கொள்வதைச் சமுதாயமும் சட்டமும் ஆதரிக்கிறது. ஆனால் ஒரு பெண் மறுமணம் செய்து கொள்ள முன்வந்தால் சமுதாயம் அவளை ஏளனமாகப் பார்க்கிறது. இந்நிலை தமிழ்ச் சமுதாயத்தில் மாறவேண்டும். இதற்குப் பெண்களின் மறுமணத்தை ஆதரிக்க வேண்டும்.

திருமணம் ஒருமுறை என்பது அந்தக் காலம்
வரன்முறை வகுத்த பெண்ணடிமையின் கோலம்
மறுமலர்ச்சித் திருமணம் வரத்தான் வேண்டும்
ஒவ்வாத சித்தாந்தம் ஒழியத்தான் வேண்டும்!
மீண்டும் ஒரு நல்லிதயம் கைகொடுத்த செய்தி
மனமாரத் துணிவோடு நாங்கள் வாழ்த்துகின்றோம்
விதிவசத்தால் சதிபதிகள் பிரியவேண்டி எற்பட்டால்
மாற்றுவழி தேடுதல் மாசற்ற மனித நேயமம்மா!

(கந்தையா குமாரசாமி, ஞானம் 68, ஜனவரி 2006, ப 10)

எனக் கவிஞர் கந்தைய்யா குமாரசாமி பெண்கள் மறுமணம் செய்து கொள்ள வேண்டியதைப் பாடியுள்ளார்.

உலகமயமாகி வரும் சூழலில் பெண்ணியச் சிந்தனைகள் அடங்கிய படைப்புகளும் அதிகம் வளரத் தொடங்கியுள்ளன. கல்வி, பொருளாதாரம், வாழ்க்கைதரம், மக்களின் சிந்தனை, பழக்கவழக்கங்கள், பெருகி வரும் தகவல் சாதனங்கள் முதலிய காரணங்களால் பெண்ணியச் சிந்தனைகளும் அதிக மாற்றம் கண்டுள்ளது. கடந்த காலங்களைக் காட்டிலும் இன்றைய சூழலில் பெண் கல்வி அதிக முக்கியத்துவம் பெறுவதோடு பெண்களின் வாழ்விலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இருப்பினும் ஞானம் கவிஞர்களும் தங்கள் கருத்துகளைக் கூறத் தயங்கவில்லை.

பெண்ணியம் பேசிடும் பெண்களே சற்றுநீர்
புரிந்திடச் சிறிது சொல்வேன் – தூய
பெண்ணன்றி உலகினில் பெரிதொன்று இல்லை தாய்
புவிதனில் முதன்மை பெறுவாள் – நல்ல
பெண்ணன்றி ஆண்பொது வாழ்வினிற் சிறந்திடப்
போகுமோ ஆண்கள் அறிவார் – என்றும்
பெண்பெண்ணாய் வாழ்ந்திடில் பெண்மைகாத் துயர்வுறின்
பொலிவுறும் வாழ்வு நிஜமே.

ஆணினம் தன்னைநீர் அடக்கிட எண்ணுதல்
அறியாமை அறிகு வீரோ – அந்த
ஆணினத் தோடுடன் படுவதால் ஆணின்
ஆதிக்கம் அழித்தல் கூடும் – கெட்ட
ஆணினத் தாணவம் அடங்கிடும் அன்பினால்
அறிந்தபே ருண்மை அறிவீர் – ஈங்கு
ஆணுக்குப் பெண்ஆடை பெண்ணுக்கு ஆண் ஆடை
ஆறறி வுள்ள பேர்க்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொடுமைகள் செய்திடும் கொடியவர் இருபாலும்**
**கொண்டுளார் உண்மை அறிவீர் – பொல்லாக்**
**கொடுமைகள் செய்யுமாண் குலத்தினர் பலத்தினால்**
**கோலோச்ச முயல்வர் பெண்கள் – உள்ளக்**
**கொடுமைகள் செய்தவர் கொடுபுத்தி யாலாண்கள்**
**கூறிடார் வெள்கி மறைப்பார் – செய்யும்**
**கொடுமைக்குக் காலெவர் ஆயினும் ஆய்ந்தோய்ந்து**
**கொடுமைக்கு முடிவு காண்போம்.**

*(ஜின்னாஹ், ஞானம் 65, அக்டோபர் 2005, ப 11)*

எனக் கவிஞர் ஜின்னாஹ் ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் ஆடையாக இருந்து மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்கிறார். இவ்வாறு கவிஞர்கள் குழந்தை, பெண், மருமகள், முதிர்கன்னியர், தாய் எனப் பெண்களைப் பலவாறு பாடியுள்ளார்.

**வரதட்சணை:**

திருமணத்தில் மணப்பெண் வீட்டாரிடமிருந்து மணமகன் வீட்டார் கேட்டுப் பெறும் பணம் அல்லது சொத்து போன்றன வரதட்சணையாகும். செய்முறை, சீர் என அழைக்கப்படுகிறது. பருவத்தே பயிர்செய் என்னும் பொன்மொழிக்கேற்ப எச்செயலையும் உரிய பருவத்தில் செய்வதை நம் முன்னோர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். பயிர் செய்ய வேண்டிய காலத்தில் பயிர் செய்யாமல் சும்மா இருந்துவிட்டு அறுவடை காலத்தில் அறுவடை செய்ய முடியாது. பெண்கள் திருமணத்திற்குரிய பருவம் அடைந்ததும் அவர்களுக்குப் பெற்றோர் திருமணம் செய்து வைப்பது வழக்கம். இக்காலத்தில் பெற்றோர் பார்த்து வைக்கும் திருமணங்கள் அருகிக் காதல் திருமணங்கள் பெருகியுள்ளன. பெண்கள் திருமணம் புரிந்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்தால் அதுவே சிறப்பாகும். அதற்காகப் பெண்கள் பண்பாட்டுப் பாதையிலிருந்து முற்றும் விலகி வாழ்வது சிறப்பான வாழ்வாகாது.

மண வயதை அடைந்தும் திருமணம் புரிந்து கொள்ளாமல் வாழும் பெண்களை முதிர்கன்னியர் என்பர். ஆண்களுக்குச் சமமாகப் படித்ததாலும் வேலை பார்ப்பதாலும் அக்காலப் பெண்களிலிருந்து இக்காலப் பெண்கள் வேறுபட்டும் மாறுபட்டும் காணப்படுகின்றனர். அக்காலப் பெண்கள் குடும்பத்தில் அக்கறை கொண்டவர்களாக விளங்கினர். இக்காலப் பெண்கள் தங்கள் வேலைகளில் காட்டும் ஆர்வத்தை இல்லங்களில் காட்டுவதில்லை. இதனால் திருமணத்தைத் தள்ளிப் போடுகின்றனர். திருமணமாகாத முதிர்கன்னியர் சமுதாயத்தில் இருக்கின்றனர். அவர்களது கருங்கூந்தல் வெண்மையாகிவிட்டது. அவர்கள் தங்கள் வாழ்வில் காதல் இல்லை, கலவி இல்லை, கல்வியும் இல்லையே என்று காவிரி நதியைப் போல கண்ணீரைச் சிந்துகின்றனர். மணமாகி குலமகளாக வாழவேண்டியவள் பருவங்களைக் கடந்து உணர்ச்சிகளைப் பொறுக்க முடியாமல் வருந்தும் பாடல்களும் ஞானம் இதழில் இடம் பெற்றுள்ளன.

சமுதாயத்தில் படித்த இளையர்களும் வரதட்சணை கேட்கிறார்கள். பொன், பொருள் கேட்கிறார்கள். அதோடு பட்டப்படிப்பு படித்தவர்கள் மாப்பிள்ளையாக அமைந்தால் வாழும் நாட்டுச் சூழலுக்கேற்ப பணமாகவோ அல்லது டாலராகவோ வரதட்சணை கேட்கிறார்கள். கடல் கடந்தாலும் தமிழர்களின் எண்ணங்கள் மாறவில்லை என்பதையும் உற்றார் உறவினர்களும் வரதட்சணை கேட்கின்றனர் என்பதையும் காணமுடிகிறது.

**தனியாய் பிறந்திருந்தால்**
**உனக்காய் இருந்திருப்பேன்**
**தங்கையருடன் பிறந்துவிட்டேன்**
**தவிர்க்க முடியவில்லை**
**லட்சங்கள் இரண்டு தந்தார்**
**உன் தோழி**
**லட்சுமியை மணந்து கொண்டேன்**
**என் சுகபோக வாழ்வுக்காக அல்ல**
**என் வீட்டு**
**ஜன்னல் கம்பிகளை**
**எண்ணிக் கொண்டிருக்கும்**
**என் தங்கையரின் விடுதலைக்காய்**
**என்னை மன்னித்து விடு**

(சேகர், ஞானம், ப. 35)

எனக் கவிஞர் சேகர் தம்மினப் பெண்களுக்காக வருத்தப்படுகிறார். மேலும் இன்றைய சமுதாயத்தில் ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் வாழ்ந்தாலும் திருமணம் என்று வரும்போது பெண்களின் நிலை வருத்தமாக உள்ளது. ஆயிரமாயிரம் கற்பனைகளுடன் வாழும் கன்னியர்களின் வாழ்வில் திருமணத்தைத் தவிர மற்ற எல்லாச் செயல்களும் நடக்கின்றன. அவர்கள் தங்களின் விதியை எண்ணி எண்ணி நாளும் வேதனைப்படுகின்றனர். இதைப் பெற்றோர்கள் உணரும் அளவிற்குச் சமுதாயம் உணர்வதாகத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பருவமழை பொழிவதனால் பயிரெல்லாம் செழிக்கிறது**
**பருவமகள் பூத்திருந்தாள் பலகாலம் காத்திருந்தாள்!**
**சிறு குடில்தான் அவள் வீடு சிறகடித்துப் பறப்பதெப்போ?**
**அழகிருந்தும் அறிவிருந்தும் வறுமைதனில் வாடுகிறாள்!**

**மணவினையோ முயற்கொம்பு மனதளவில் மறுகுகிறாள்**
**பேதைமனம் பேதலித்தாள் பெருந்துயரில் மூழ்குகிறாள்!**
**வேலையில்லா ஆடவர்க்கும் வேலைசெயும் பேரழகி**
**பெருநிதியில் சீதனமும் பெரியதொரு கல்வீடும்!**

**அறிவோடு எழில் சிந்தும் ஆசிரியை அவளுக்கே**
**இந்நிலை என்றிருந்தால் இவள்தான் என்செய்வாள்?**
**பருவமெலாம் கரைகிறது நரைதிரையும் வருகிறது!**
**கனவில் தான் கல்யாணம் கன்னியவள் கனியாத காயாக**

*(கண மகேஸ்வரன், ஞானம் 129, பிப்ரவரி 2011, ப. 10)*

என கவிஞர் கண மகேஸ்வரன் முதிர் கன்னியரின் ஏக்கங்களைப் பாடியுள்ளார். பெண்களின் திருமணத்திற்கு வரதட்சணை பெருந்தடையாக இருப்பதை மனவேதனையுடன் கவிஞர் பாடியுள்ளார்.

மணமாகாத பெண்களின் வேதனைகளையும் கவிஞர்கள் பாடியுள்ளனர். முப்பது வயதைத் தாண்டிய பெண்களை யாரும் மணம் முடித்துக் கொள்ள விரும்புவதில்லை. இவர்கள் முதிர் கன்னிகளாக வாழும் நிலை கண்டு பெற்றோர் வருத்தம் அடைகின்றனர். பெண் அழகாக இல்லை, தான் சார்ந்துள்ள சாதியில் நல்ல பெண் கிடைக்கவில்லை என்ற காரணங் களினாலும் பெண்களுக்குத் திருமணம் என்பது எட்டாக்கனியாக இருக்கிறது.

**முப்பது அகவைக்கு**
**முகவரி குத்தப்பட்ட**
**எனக்கான**
**பிறந்த வருடம்!**
**கல்யாணச் சந்தையில்**
**கால் நடைகளாய்**
**விலை பேசப்படும்**
**சீதன வியாபாரிகளினால்**
**சிறை வைக்கப்பட்டிருக்கும்**
**சீதை!**

**மனைவியாகலாமென்ற**
**ஆசைப்பாட்டில்**
**ஒவ்வொருத்தனுக்காய்**
**சீலைகட்டி**
**சிங்காரித்து**
**செத்துப் போன**
**உடலும் உள்ளமும்!**
**நாளை வருவான்**
**நல்லவன் என்ற**
**நம்பிக்கை நட்சத்திரத்தை**
**வாழ்க்கை வானில்**
**தொலைத்து நிற்கும்**
**கறுப்பு நிலவு!**

*(பாறூக், ஞானம் 140, ஜனவரி 2012, ப.08)*

என்னும் பாடலடிகள் இதனை விளக்கு கின்றன. பருவத்தே பயிர் செய் என்னும் பழமொழிக்கேற்ப உரியகாலத்தில் பெண்க ளுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டியது பெற்றோரின் கடமை என்பதை உணர்த்த விரும்புகிறார்.

பொதுவாக ஆண்கள் வரதட்சணை கேட்டு வாங்குவது நடைமுறையில் உள்ளது. இதற்குப் பதிலாகப் பெண்கள் ஆண்களிடம் வரதட்சணை கேட்பதைப் போன்ற கருத்துள்ள பாக்களையும் ஞானம் வெளியிட்டுள்ளது. மகள் தன் தாயிடம் தங்களுக்குத் தெரிந்த பையனை மணமுடிக்கப் பேசலாமா எனக் கேட்டதும் அதற்கு அத்தாய், அவன் படித்த பையன், நம்மிடம் வேண்டிய வசதியில்லை எனப் பதில் உரைக்கிறாள். அதற்கு மகள், நான் நன்றாகப் படித்த பெண். பெண்கள் பயந்தது போதும். இனிமேல் அஞ்சாமல் துணிந்து எச்செயலையும் செய்ய வேண்டும். என்னைத் திருமணம் செய்து கொள்ள அவர் எவ்வளவு தருவார் என்பதைக் கேளுங்கள் என்கிறாள்.

**அம்மாவே அம்மா கேளுங்க கொஞ்சம்**
**அடிமனசில் எனக்கொரு ஆசை சொல்லவா**
**சும்மாநான் யோசிச்சன் கோபியாத என்னை**
**சுதாகரை மணமுடிக்கி கேட்டால்தான் என்ன**

**கன்னியாயிருந்து களைச்சி நான் போனேன்**
**கலியாணம் வேணுமெண்டு சொல்லவா ஏலும்**
**என்னவோ வந்து அடைக்கிறது வாயை**
**ஏனம்மா உனக்கு எதுவுமே புரியல்ல**

**அடிபோடி பைத்தியமே பாவிபெத்த மகளே**
**அவன் இஞ்சினியர் பெடியடி தெரியாதா**
**மடியிலே கனமுமில்லை மாளிகை வீடுமில்லை**
**மாப்பிள்ளையா வருவானா விவரங்கெட்டவளே**

**செம்பருத்தி நிறத்திலே பொண்ணொருத்தி வேணுமாம்**
**சீதனமாய் கல்வீடு காசு நகை தேவையாம்**
**இம்மட்டும் இருக்குதாடி புத்திகெட்டுப் போனவளே**
**இருந்தா சொல்லட்டாம் செல்லையா புறோக்கன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பட்டம் பெற்றவள்நான் எம். ஏயும் எழுதிவிட்டேன்**
**பயந்துநீ ஏனம்மா பல தடவை சாகிறாய்**
**கேட்டவனைக் கூட்டிவா நான் கதைக்க**
**கல்வி எனுஞ் செல்வம் கைநிறைய எனக்கிருக்கு**

**இஞ்சினியர் எனைமுடிக்க எவ்வளவு தருவாராம்**
**இதைக்கொஞ்சம் புரோக்கிரிடம் கேட்டுவிடு**
**அஞ்சி அஞ்சிப் பெண்கள் வாழ்ந்தது போதும்**
**அதிரடியாய் புரட்சிசெய்து புதியவிதி சமைப்போம்.**

(ரூபராணி, ஞானம் 59, ஏப்ரல் 2005, ப. 39)

எனக் கவிஞர் ரூபராணி பெண்களுக்குரிய புரட்சிகரமான கருத்துகளைத் தெரிவித்துள்ளார். வழக்கமாகப் பெண்கள் வரதட்சணை கொடுப்பது வழக்கம் என்பதிலிருந்து மாறுபட்டுள்ளதைக் காணமுடிகிறது.

**வாழ்த்து:**

ஞானம் இதழில் வெளிவந்துள்ள கவிதை களில் வாழ்த்துக் கவிதைகளும் உள்ளன. இத்தகைய வாழ்த்துக் கவிதைகளில் ஞானம் இதழை வாழ்த்தும் கவிதைகளும் தெளிவத்தை ஜோசப், சிற்பி சரவணபவன், எஸ் பொன்னுசாமி, விளையாட்டாளர் முரளிதரன் ஆகியோரை வாழ்த்திய கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. இந்திய தேசியக் கவிஞர் பாரதியாரை வாழ்த்திப் பாடியுள்ள கவிதையும் உள்ளது. இலங்கையில் வாழும் தமிழர்கள், சான்றோர்கள், தமிழறிஞர்கள் முதலியோர்களை வாழ்த்தியுள்ள கவிதைகளும் ஞானம் இதழில் உள்ளன.

ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை தோன்றியது முதல் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இலங்கையில் வாழும் மூத்த படைப்பாளர் படைப்புகளை வெளியிடும் நேரத்தில் புதிய படைப்பாளர்களைப் படத்துடன் அறிமுகப் படுத்துதல், இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் படைப்புகளை வெளி யிடுதல், உரைச்சித்திரம், ஈழத்து இலக்கிய நம்பிக்கைகள், கட்டுரை, கவிதை, கடிதம், கேள்வி பதில், சமகால இலக்கிய நிகழ்வுகள், சிறுகதை, சினிமா விமர்சனம், தலையங்கம், திரும்பிப் பார்க்கிறேன், நானும் என் எழுத்தும், நாடக விமர்சனம், நெற்றிக்கண், நேர்காணல், நேற்றைய கலைஞர்கள், நூலறிமுகம், பத்தி எழுத்து, புதிய நூலகம், பயணக் கட்டுரை, புலம்பெயர்ந்தோர் இலக்கியம், வாசகர் பேசுகிறார், விவாதமேடை எனப் பலதரப்பட்ட உள்ளடக்கங்களை ஞானம் காலத்திற்கேற்ப படைத்து வருகிறது. இதனால்தான் இன்றும் தொடர்ந்து வெற்றிநடை போடமுடிகிறது. இல்லையேல் பிற இலக்கிய இதழ்களைப் போல தோன்றிய வேகத்தில் மறைந்திருக்கும் என்பதுண்மை. இவ்விதழ் மக்களுக்கு ஆற்றும் பணிகளையும் கவிஞர்கள் வாயாரப் புகழ்ந்து உள்ளனர்.

**இலக்கிய உள்ளத்தை ஈர்த்தெடுக்கும் ஞானத்தை**
**இன்சுவை திரட்டிவரும் எழிலான அமுதத்தை**
**கலங்கிய நெஞ்சுக்கு களிப்பூட்டும் ஞானத்தை**
**கற்கண்டின் சுவையோடு கலந்துவரும் ஞானத்தை**
**நலந்தரும் நாட்டமுடன் நாடிவரும் ஞானத்தை**
**நயப்புடையார் எல்லோர்க்கும் நலமளிக்கும் ஞானத்தை**
**இலங்கைத் திருநாட்டில் இதழ்விரிக்கும் ஞானத்தை**
**இதயத்தால் வாழ்த்தியே இன்புற்று மகிழ்கின்றேன்.**
**நவமான கருத்தினையும் நாடறியத் தந்திட்டாய்**
**நானிலத்து மாந்தரவர் நலமொன்றே குறியாக**
**தவமுடனே ஆற்றிவரும் உன்பணியை மறுப்பார் யார்?**
**கலைஞர்களின் நாமத்தால் சிறுகதையாம் போட்டிகளை**
**புவனத்தில் முன்நடத்தி பற்பலவாம் பணப்பரிசை**
**பலர்பெறவே களிப்புற்றாய் வாசகர் கருத்தோடு**
**நவரசம் ததும்புகின்ற சமகால நிகழ்வினையும்**
**தந்தெம்மை மகிழ்விக்கும் ஞானத்தை வாழ்த்துகிறேன்.**

(குறிஞ்சிநாடன், ஞானம், செப்டம்பர் 2008, ப. 50)

எனக் கவிஞர் குறிஞ்சி நாடன் ஞானம் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றும் பணியைப் பாராட்டியுள்ளார்.

சின்னசாமி முத்தையா, இலட்சுமி முத்தையா தம்பதிகளுக்கு மகனாக 1972ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் நாளன்று முத்தையா முரளிதரன் பிறந்தார். கண்டி புனித அந்தோனியார் கல்லூரி யில் பயின்ற முரளிதரன், கிரிக்கெட் அணித் தலைவராக இருந்தார். இவர் உலக அளவில் பல சாதனைகளைப் புரிந்துள்ளார். இவரது சாதனையை வாழ்த்தும் கவிதையும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளது.

**புகழ்பெற்ற கல்லூரி அந்த னீசில்**
**பண்பட்ட கல்வியினைத் தானும் கற்று**
**புகழ்பூக்க கிரிக்கெட்டில் வீர னாகி**
**சாதனைகள் நிலைநாட்டி உயர்ந்து நின்றான்**
**சிகரமெனத் திகழுகின்ற எமது நாட்டின்**
**தேசிய பேரணியில் தானும் சேர்ந்து**
**நிகரில்லாச் சாதனைகள் பலவும் செய்து**
**நித்த நித்தம் புகழோங்க ஓங்கி நின்றான்**

(வெள்ளைச்சாமி, ஞானம் 92, ஜனவரி 2008, ப 05)

எனக் கவிஞர் வெள்ளைச்சாமி, கிரிக்கெட் வீரர் முரளிதரனை வாழ்த்திப் பாடியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பெருமையை உலக நாடுகளில் உயர்த்திய இலங்கை தமிழரைக் கவிஞர்களால் எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும். மேலும் ஞானம் 92ஆம் இதழில் அட்டைப்படத்தில் முரளிதரன் படத்தைப் போட்டு அவருக்குரிய மரியாதை அளித்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாம்.

கல்வியாளர், இலக்கியவாதி, சஞ்சிகை ஆசிரியர், பேச்சாளர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர் சிற்பி. இவரைப் பாடசாலை ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர், எழுத்தாளர் என்ற மூன்று கோணங்களில் பார்க்கலாம். சிவசுப்பிரமணியக் குருக்களும் செளந்த ராம்பாளும் ஆறாவது மகனாக 28 - 02 - 1933 ஆம் நாளன்று பிறந்தார். சிவசரவணபவன் என்னும் இயற்பெயரைக் கொண்டவர். சென்னைப் பல்கலைக் கழகக் கலை இளமாணி பட்டம் பெற்று 1955ஆம் ஆண்டு பட்டதாரி ஆசிரியரானார். இதன் பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பேராதனை வளாகத்தில் கல்வியியல் டிப்ளோமா கற்றார். இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வியியலில் கலை முதுமாணிப் பட்டத்தினைப் பெற்றார்.

செங்குந்தா இந்துக் கல்லூரியிலிருந்து சுடரொளி என்னும் சஞ்சிகையைத் தொடங்கி ஏழு ஆண்டுகள் வெளியிட்டார். இராமநாதன் மகாவித்தியாலயத்திற் பணி புரிந்தபோது இளந்தளிர் என்ற இதழை வெளியிட்டார். 1958 ஆம் ஆண்டு கலைச்செல்வி என்னும் மாத இதழை ஆரம்பித்து வளரும் எழுத்தாளர்களுக்கு இடமளித்து எழுதவைத்தார். இவ்விதழ்கள் கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி, நாவல் போட்டி, எழுத்தாளர்களின் கட்டுரைத் தொடர்கள், விமர்சனங்கள் போன்ற கூறுகளை வாசகர்களுக்கு வழங்கியது.

**ஈழத்து இலக்கியத்தின் எழுச்சிக்காய்ச் சார்பின்றி**
**மூலத்தில் உழைத்திட்ட மூத்தவருள் இவரொருவர்**
**ஆழத்து அறிவதனை அகம்வாங்கி அருளதனால்**
**தாழத்தில் இருந்தோர்க்கும் தந்திட்ட பெருமனிதர்**

**கலைச்செல்வி இயக்கத்தின் கண்ணாக இருந்தன்று**
**நிலைத்திட்ட பெரும்பணிகள் நேர்படவே செய்த மகன்**
**உழைத்துத் தன் முயற்சியினால் ஒப்பற்ற தமிழ்த்தாய்க்கு**
**விளைத்துப் பல் அணிசாற்றி வீறான புகழ் வளர்த்தோன்**

(கம்பவாரிதி, ஞானம் 97, ஜுன் 2008, ப. 07)

இவ்வளவு சிறப்பு மிக்க இலக்கிய ஆளுமையைக் கவிஞர்கள் வாழ்த்திப் பாடியுள்ளனர்.

கம்பவாரிதி ஜெயராஜ் யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த ராஜா, குலமணி தம்பதியினருக்கு மகனாக செட்டிக்குளத்தில் பிறந்தவர். சிறு வயதில் புசல்லாவை, புத்தளம் போன்ற பகுதிகளில் படித்தபின் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்றார். 1980ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் கம்பன் கழகத்தை நிறுவினார். கம்ப இராமாயணச் சொற்பொழிவு ஆற்றிவரும் இவருக்கு யாழ்ப்பாணம் தலங்காவில் ஆலயத்தினர் கம்பவாரிதி என்ற பட்டத்தை வழங்கி பெருமை படுத்தினர். திருக்குறள், கம்ப இராமாயணம், சைவ சித்தாந்தம் ஆகிய துறைகளில் ஆழங்கால் பட்டவர். இந்தியா, இலங்கை, ஆஸ்திரேலியா, கனடா, சிங்கப்பூர், ஐரோப்பா ஆகிய நாடுகளில் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். ஆண்டுதோறும் இலங்கையில் கம்பன் விழா, நாட்டிய விழா போன்றவற்றை முன்னின்று நடத்தி வருகிறார். உகரம் இணைய இதழில் இலக்கியம், அரசியல், சமயம், சமூகம் சார்ந்த கட்டுரைகளை எழுதி வருகிறார். இவர் பல்லாண்டு வாழ்ந்து கம்பன் புகழைப் பாரில் பரப்ப வேண்டும் எனக் கவிஞர்கள் வாழ்த்தியுள்ளனர்.

**கம்பநாட் டாழ்வானின் காவியப்பெ ருண்மைகளை**
**எம்மவரின் உள்ளமதில் ஏற்றிவைத்தே – அம்புவியில்**
**தண்ணளிசே ராட்சியினைச் சாத்தியமாக் கும்ஜெயராஜ்**
**அண்ணலே எங்கள் அரண்**

**கண்டனை கம்பனாம் கவிஞனின் நெஞ்சினை**
**விண்டிடல் வேண்டியே விரும்பிநீ நின்றனை**
**கொண்டனை அவன் பெயர்க் கழகமும் கோட்டமும்**
**எண்டிசை வாழ்த்தவே இலங்குமெம் ஏந்தலே**

**ஆடுமீ ருளத்துடன் அங்குமிங் கெங்குமாய்**
**ஓடியே தேய்ந்திடும் ஒய்விலா இளைஞரைத்**
**தேடிநீ செந்தமிழ்த் தேன்சுவை யூட்டினை**
**நாடெலாம் போற்றிடும் நாவலர் ஆக்கினை**

**சடையினால் தமிழரின் பண்பினைத் தாங்கிடும்**
**உடையினால் உயர்ந்தபேர் லட்சியம் கான்றிடும்**
**நடையினால் நலந்திகழ் தத்துவம் நல்கிடும்**
**கொடையினால் ஒருதனித் தன்மையைக் கொண்டனை**

**ஐந்துபத் தாண்டெனும் அகவைநீ கண்டனை**
**சிந்தனை நாவினாற் சேர்சிறப் போலையால்**
**தந்தனை விந்தைகள் விளைத்தனை சபையிலே**
**உந்தனுக் குலகிலே ஒருவரும் நிகரிலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கம்பவா ரிதியாகிக் கம்பனைநீ காட்டுகிறாய்**
**கம்பவா ணனுமாகிக் கவிதைமழை கொட்டுகிறாய்**
**கம்பவா ரிசுவுடனே கபிலர்விரு தும்மிணையக்**
**கம்பகா வியமெனவே காசினியில் நீயொளிர்வாய்**

(சிற்பி, ஞானம், டிசம்பர் 2007, ப 05)

எனக் கவிஞர் சிற்பி, கம்பவாரிதியின் சிறப்புகளைப் பாராட்டிப் பாடியுள்ளார். கம்பன் புகழ்பாடும் இவர் பாரினில் வாழவேண்டும் என கவிஞர்கள் வாயார வாழ்த்தியுள்ளனர்.

எஸ்.பொ. எனப்படும் ச.பொன்னுத்துரை (04-06-1932-26-11-2014) இலங்கையின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவர். யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூரில் சண்முகம் என்பவருக்குப் பிறந்தவர். இவர் சென்னை கிறித்துவக் கல்லூரி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகிய கல்வி நிறுவனங்களில் பயின்றார். 1956ஆம் ஆண்டு ஆசிரியராகப் பணியில் சேர்ந்து மட்டக்களப்பு பகுதிக்கு இடம்பெயர்ந்தார். பின்னர் நைஜீரியாவிலும் ஆசிரியராகப் பணியாற்றினார். சிறுகதை, புதினம், நாடகம், கவிதை, விமர்சனம், மொழிபெயர்ப்பு, அரசியல் போன்ற துறைகளில் முத்திரை பதித்த இவரது தமிழ் நடை தனித்தன்மை வாய்ந்த ஒன்றாகும். புரட்சிப்பித்தன், பழமைதாசன் முதலிய புனைபெயர்களியலும் இவர் எழுதியுள்ளார்.

ஞானோதயம் என்ற கையெழுத்து இதழை இவரது மூத்த சகோதரர் தம்பையா நடத்தினார். இவர் 13வது அகவையில் இதில் எழுதத் தொடங்கினார். இவர் எழுதிய முதல் கவிதை வீரகேசரியில் வெளியானது. இவரது முதலாவது சிறுகதை 1948ஆம் ஆண்டு சுதந்திரன் பத்திரிகையில் வெளியானது. காதல், பிரசண்ட விகடன், ஆனந்த போதினி ஆகிய தமிழக சஞ்சிகைகளிலும் எழுதினார். இவர் எழுதிய தீ என்ற புதினம் இலங்கை இலக்கியத்தில் ஒரு திருப்புமுனையை தோற்றுவித்து பல சர்ச்சைகளையும் உருவாக்கியது. தமிழகத்தில் சரஸ்வதி என்ற இதழை நடத்திய வ. விஜய பாஸ்கரனின் முயற்சியால் இந்நூல் வெளியானது. இவர் நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவைகளில் 1924 பக்கங்களில் வரலாற்றில் வாழ்தல் என்ற சுயவரலாற்று நூல் தனித்துவம் பெற்றதாகும். இவர் 1989ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் வாழ்ந்து வந்தார். சென்னையில் மித்ர என்ற பதிப்பகத்தை நிறுவி அதன் மூலம் நூல் வெளியீடுகளிலும் ஈடுபட்டிருந்தார். இவர் சிறப்புகளைக் கவிஞர்கள் வாழ்த்திப் பாடியுள்ளனர்.

**எஸ். பொ எனிலறியார் இல்லை இலக்கியத்தின்**
**உச்சம் வரைசென்ற ஓரறிஞன் – அச்சம்**
**அணுவளவு மில்லான் அவன்கைகொள் மைக்கோல்**
**கணையாகும் தீமைக்குத் தான்.**

**கவிதை சிறுகாதை கட்டுரைநீள் நாவல்**
**எவைதனிலும் வல்லோன் இவனாம் – புவியோர்தம்**
**வாழ்வை வெளிச்சமிடும் வல்ல வரிகளிவன்**
**ஆளுகின்ற செந்தமிழுந் தான்.**

**பொய்வேஷம் போடுகின்ற பேர்தம் முகத்திரையைப்**
**பிய்த்தெறியும் போக்கே படைப்புகளில் – உய்த்திருக்கும்**
**தொய்வில்லா வார்த்தைகளால் சொல்வான் எஸ். பொ. தம்மின்**
**கையுயரும் போர்க்குணத்தால் கோன்.**

**கள்ளுவடி மீசை கரியவுடல் வெண்சுருட்டு**
**எள்ளுவபோல் நக்கல் நகைவதனம் – உள்ளத்தில்**
**ஒன்றுமிலான் தோற்றம் உவந்து வரவேற்கும்**
**பண்பினிலோ குன்றம் அவன்.**

**வரலாற்றில் சொர்ண வரியிவனின் வாழ்வு**
**இருப்பில் வரைந்த எழுத்தாம் – நிரந்தரமாய்**
**வாழ்ந்திருப்பான் எஸ். பொ வரைந்ததமிழ்ப் பொக்கிஷங்கள்**
**வாழ்ந்திருக்கும் வேந்தன் அவன்.**

(ஜின்னாஹ், ஞானம் 116, ஜனவரி 2010, ப. 07)

எனக் கவிஞர் ஜின்னாஹ் இவர் சிறப்புகளையும் இலக்கியத்திற்கு ஆற்றிய பணிகளையும் ஒருங்கே பாராட்டிப் பாடியுள்ளார்.

தெளிவத்தை ஜோசப் பதுளை மாவட்டத்திலுள்ள ஊவாக்கட்டவளை என்ற ஊரில் பிறந்தார். இவர் தெளிவத்தை என்னும் தோட்டத்தில் ஆசிரியராக இருந்த காரணத்தால் தனது பெயருடன் தெளிவத்தை என்னும் பெயரைச் சேர்த்துக் கொண்டார். அறுபதுகளில் எழுதத் தொடங்கி எழுபதுகளில் தனித்துவம் மிகுந்த படைப்பாளராக மலர்ந்தவர். மலையகப் படைப்பாளிகளில் முக்கியமானவர். இவர் சிறந்த சிறுகதை ஆசிரியர், நாவலாசிரியர், இலக்கிய ஆய்வாளர் ஆவார். எண்பது ஆண்டுகளைக் கடந்து நிற்கும் இவர் பாராட்டுக்கும், மதிப்பிற்கும் உரியவராகத் திகழ்பவர். வசீகரநடை, சுருக்கங்கச் சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்க வைத்தல், சொற்சிக்கனம் என்பன இவரைச் சிறந்த படைப்பாளியாக அடையாளம் காட்டுகின்றன. இவருக்கு ஞானம் பவளவிழா மலரை வெளியிட்டுச் சிறப்பித்தது. இவரது ஆளுமைகளைக் கவிஞர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர்.

**தெளிவத்தை என்னுமோர் தேயிலைத் தோட்டத்தை**
**திசையெங்கும் அறியச் செய்தாய்**
**சிற்றாறும் மலைகளும் தென்றலும் சாரலும்**
**சிலிர்த்தெழக் கதைபடைத் தாய்**
**புள்ளிவைத்து விளக்கிய செம்பாக மலைநாட்டை**
**பேனாவால் துலக்கி வைத்தாய்**
**பேச்சு மொழிதனை கவின்மிகு நடையினால்**
**இலக்கியம் ஆக்கி வைத்தாய்**

(பரிபூரணன், ஞானம் இதழ் 120, மே 2010, ப. 38)

எனக் கவிஞர் பரிபூரணன், தெளிவத்தை ஜோசப் சிறப்புகளைப் பாடலாகப் பாடி உள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கரம்பொன் என்ற ஊரில் இந்துக் குடும்பத்தில் பிறந்த நாகநாதன் பின்னாளில் ஸ்டனிஸ்லவுஸ் தனிநாயகம் என்ற பெயரைப் பெற்றுக் கொண்டார். ஊர்காவற்றுறை செயின்ட் அன்டனிஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் செயின்ட் பட்ரிக்ஸ் கல்லூரி ஆகியவற்றில் ஆரம்ப, இடைநிலைக் கல்வியைப் பெற்றவர், கத்தோலிக்க மறைக்கல்வியை கொழும்பு புனித பேர்ணார்ட் மறைப் பள்ளியில் பெற்றார். தமது 21ஆவது வயதில் ரோம் சென்று வத்திக்கான் மறைக் கல்விச் சாலையில் பயின்று 1934 ஆம் ஆண்டு மெய்யியலில் பட்டம் பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் லண்டனில் முனைவர் பட்டத்தையும் பெற்றார். ஆங்கிலம், லத்தீன், டச், இத்தாலிய, பிரெஞ்சு மற்றும் போர்த்துக்கீச மொழிகளில் இவர் புலமை பெற்றவர். இதனால் ஒப்பியல் ஆய்வுகளை மேற்கொள்ள இம்மொழிகள் இவருக்கு உதவின. இவர் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற முக்கியக் காரணராக இருந்தவர். தமிழை, தமிழ்ப் பண்பாட்டை உலக நாடுகளுக்கு அறிமுகம் செய்தவர். அன்னாரின் நூற்றாண்டு விழாவை உலகில் மக்கள் கொண்டாடி வருகிறார்கள். இவரது சிறப்பைக் கவிஞர்களும் பாடியுள்ளனர்

**தனிநாயகம் போலொரு தமிழ்நாயகம் உண்டோ**
**இனி ஒரு நாயகம் இங்கு பிறப்பாரோ?**
**முனியவர் திருமூலர் மூதுரையின் படியே**
**பணி செய்த அடிகள் பாருலகம் போற்றும்**

**உலகெலாம் தமிழை உணர வழி வகுத்தார்**
**பல மொழிகள் கற்றும் பைந்தமிழில் திளைத்தார்**
**விலை மதிப்பில்லா வித்தகனாய்த் திகழ்ந்தார்**
**நிலமுள்ளவரைக்கும் நிலைக்குமவர் நாமம்**

**துறவியவர் ஆயினும் தூயதமிழ் மறவாப்**
**பிறவியவர் இந்தப் பேறு யார் பெற்றார்?**
**குறுமுனி அகத்தியன் குலம் என்றே உலகம்**
**பெருமையுடன் பேசும் பிறகென்ன வேண்டும்?**

**தூத்துக்குடி மண்ணில் தூய தமிழ் மொழியின்**
**ஊற்றுக் கண் திறந்தார் ஓடி அது பாய்ந்து**
**நாற்றிசையும் பரவும் நன்கு தமிழ் செய்யும்**
**ஆற்றல் மிகக் கொண்ட அடிகளார் வாழ்க!**

**தூதன் அவர் என்றும் தூய தமிழ் மொழியில்**
**காதல் மிகக் கொண்டு கடைசிவரை வாழ்ந்தார்**
**தாதன் அவர் அதனைத் தன் மனதில் சுமந்தார்**
**வேதம் அவர்க் கென்றும் விவிலியத்தைப் போல!**

**அரிஸ்டோட்டில் என்னும் அறிஞர் கருத்தோடு**
**திருவள்ளுவர் கருத்தைச் சேர்த்து வைத்தாய்ந்த**
**ஒரு பெரும் அறிஞர் ஓங்கு புகழாளர்**
**கரம்பன் மண் நோக்கிக்கை குவித்து நிற்போம்!**

**பக்திக்கொரு மொழி பைந்தமிழ் என்று**
**வித்தகனார் உரைத்தார் விரும்பியவர் உள்ளம்**
**சித்தன் அவர் வாசகர் செய்த தமிழ் தன்னில்**
**நித்தம் குடிகொள்ளும் நிகரதற்குண்டோ?**

**ஒன்றே உலகம் என உரையவர் பகரினும்**
**நன்று அவர் நெஞ்சம் நம் ஈழம் வாழும்**
**என்றுமவர் தமிழை இன்னுயிராய்க் கொண்டார்**
**மன்று எலாம் இந்த மகத்துவத்தைப் பேசும்!**

(வாகரைவாணன், ஞானம் இதழ் 159, ஆகஸ்ட்டு 2013, ப. 43)

எனக் கவிஞர் வாகரைவாணன், தனிநாயகம் அடிகளாரின் சிறப்புகளையும் அவர் செய்த பணிகளையும் பாராட்டிப் பாடியுள்ளார்.

கவிஞர், எழுத்தாளர், பத்திரிகையாசிரியர், சமூக சீர்திருத்தவாதி எனப் பன்முகங் கொண்டவர் பாரதியார். இந்திய சுதந்திர போராட்ட காலத்தில் கனல் தெறிக்கும் கவிதைகளால் விடுதலை உணர்வை ஊட்டியவர். தமிழ் மீது அளவு கடந்த பற்றுக் கொண்டவர். உலகத் தமிழர்களால் பாரதியாரின் பெயர் அடிக்கடி உச்சரிக்கப்படுகிறது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இவரைப் பற்றிய கவிதைகளையும் ஞானம் வெளியிட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டய புரந் தன்னில் இடியென முழங்கினான்
எட்டுத் திசை எங்கும் எதிரொலி கேட்டது
மட்டிலா மகிழ்ச்சியில் மண் தமிழ் ஆழ்ந்தது
பட்ட மரந் தானும் பசுந் தளிர் பூண்டது

சுதந்திரம் என்றவன் சொன்னதைக் கேட்டதும்
பதவியில் இருந்தவர் பல்லெல்லாம் ஆடிடும்
வித வித சூழ்ச்சிகள் விரித்தவன் மாட்டிட
நிதமவர் முயலுவார் நிமையது மூடுமோ?

என் தமிழ் மொழியினை எம் மொழி ஒத்திடும்?
என்றவன் வினவுவான் எவர் பதில் கூறுவார்
விண் தனை அளந்திடும் விரிந்ததோர் புகழினால்
வண் மொழி வாழ்ந்திட வாஞ்சையாய்ப் பாடுவான்!

முண்டாசுப் பாரதி முறுக்கிய மீசை போல்
என் தமிழ் நிமிர்ந்திடும் இனியது கூறுமோ?
பண்ணுடன் கவிதைகள் படைத்தவன் ஈந்தனன்
மண்ணுடன் ஒன்றிடும் மகாகவி வாழ்கவே!

பஞ்சையாய் வாழினும் பணிந்திடாக் கவியவன்
அஞ்சுதல் அறிகிலான் ஆனந்த வெள்ளத்தில்
நெஞ்செலாம் இனித்திட நிதமவன் பாடுவான்
விஞ்சிடும் புகழினால் விண்ணையும் வெல்லுவான்

(வாகரைவாணன், ஞானம் 160, செப்டம்பர் 2013, ப. 11)

எனக் கவிஞர் வாகரைவாணன் பாரதியாரின் சிறப்புகளைக் கூறி பாராட்டி உள்ளார். பாரதியாரின் கருத்துகளைப் பின்பற்றி வாழ்வதே தமிழர் கடமையாகும். இவ்வாறு பலதரப்பட்ட வாழ்த்துக் கவிதைகளை ஞானம் கலை இலக்கிய மாத இதழ் வெளியிட்டு உள்ளதைப் பார்க்க முடிகிறது.

அறிவுரை, இளையர், இனப்பற்று, உழைப்பாளர், கல்வி, காதல், சமுதாயம், பண்பாடு, புலம் பெயர்ந்தோர், பெண், போர், மொழி, வாழ்த்து, விளையாட்டு என்ற பொருள்களில் ஞானம் கவிஞர்கள் பாடியுள்ளனர். புலம்பெயர்ந்தோர், பெண், போர் ஆகிய பொருண்மைகளில் அமைந்துள்ள கவிதைகள் முக்கியத்துவம் வாய்ந்த கவிதைகளாக உள்ளன. புலம் பெயர்ந்த தமிழர் குறித்துள்ள கவிதைகள், இலங்கை இனப்போரால் தமிழினம் எதிர்நோக்கிய இன்னல்களைக் கூறுகின்றன. இலங்கை இனப்போரால் பெண் கவிஞர்கள் அதிகம் தோன்றிதை இவ்விதழ்க் கவிதைகள் காட்டுகின்றன. இலங்கை இனப்போரில் பெண்கள் பாதித்தைப் பெண்கள் கவிதைகளாக்கி உள்ளனர். இவர் கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகளும் பெண்களின் வேதனைகளும் பாடப்பட்டுள்ளன.

○○○

---

**மொழி பெயர்ப்புக் கவிதை**

# டோல்ஸ்டோய் இங்கே இல்லை

**– கே. சச்சிதானந்தன்**

மலையாளம் ஆங்கிலம் ஆகிய
இரு மொழிகளிலும் எழுதும் இந்தியக் கவிஞர்
(இது டோல்ஸ் டோயின் அருங்காட்சியகத்திலிருந்து எடுக்கப்பட்டது)

♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦

டோல்ஸ்டோயின் பாதணிகள்
இங்கே உள்ளன.
ஆனால் அவர் பயணித்த
தூரம் இங்கு இல்லை.
பார்வை இங்கே உள்ளது.
அவர் கண்ட ஆழம் இங்கில்லை.
அவரது புத்தகங்கள் இங்குள்ளன.
அதை விரித்த விரிசல்கள்
இங்கில்லை
உணவு மேசை இங்குள்ளது
அவர் தழுவிய
வேதனைகள் இங்கில்லை
அவரது பேனா இங்குண்டு
அதன் தனிமை இங்கில்லை
கையெழுத்துப் பிரதிகள் உள்ளன.
அனாவிவின் பியரின்
குறும்புகள் இல்லை
அவரது மேலணி இங்குள்ளது.
அதனை வடிவமைத்த
அபிமானிகள் இங்கில்லை
நான் இங்கே இருக்கிறேன்
ஆனால்
நான் இங்கே இல்லை

**சிங்கள மூலம்: பராக்கிரம கொடி துவக்கு**
**தமிழில்: கலாபூஷணம் மாவனல்லை எம். எம். மன்ஸூர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீட்ட ஏடு

ஹுமைரா அல் அமீன்

கொல்லைப்புற அடுப்பிலிருந்து எடுத்துக் கொண்ட கரித்துண்டை தண்ணீரில் நனைத்து, வாயில் போட்டு மென்று அதனால் பற்களைத் தேய்த்து வேகமாகக் கொப்பளித்துத் துப்பிவிட்டு வீட்டுக்குள் வந்தாள் சரோஜா. சமையல் முடித்து குழந்தைகள் மூவரையும் தயார் செய்து பள்ளிக்கூடம் அனுப்பிவிட்டு தானும் வேலைக்கு போவதற்காய் இயந்திரமாகத் தயாரானாள்.

தலையிலே துண்டைப்போட்டு அதன்மேல் யூரியா பையை தொங்க விட்டு இடுப்புச் சீலையை சுற்றிக் கட்டிக் கொண்டாள். முன்பானால் தேயிலைக் கொழுந்து பறிப்பதற்கு பிரம்பிலான கூடைகள்தான் பயன்படுத்தப்பட்டன. அவை மிகவும் பாரமாக இருப்பதாலும் அவற்றைச்சுமந்து கொண்டு தேயிலை மரங்களுக்கிடையில் நடப்பது கஷ்டமாய் இருப்பதாலும், இந்த யூறியா பைகளில் கொழுந்து பறித்துப் போடும் பழக்கம் கொண்டுவரப்பட்டது. அது கொஞ்சம் இலகுவாகத்தான் இருக்கிறது.

வேகமாக நடந்து பெரட்டுக்களத்தை அடைந்தாள் சரோஜா. அப்போதும் நேரமாகித் தான் இருந்தது. அவளோடு ஆறுபேருக்கு ஐந்தாம் நம்பர் மலை. கொஞ்சம் கொழுந்து குறைந்த பகுதிதான். ஆறுபேர் என்பதால் மலைக்குள் குறிப்பிட்ட அளவு எடைக்கு கொழுந்து எடுத்து முடித்துவிடலாம். வரிச்சிக் கம்பை வைத்துக் கொண்டு சறுக்கி விழாமல் மேலே ஏறியாகி விட்டது.

கங்காணி ஐயா நிரை போட்டுக் கொடுக்க தனக்கான நிரைக்குள் நுழைந்தாள் சரோஜா.

போன வருடம் அவள் கணவன் குமாரவேல் இறந்து போனதன் பின்பு சரோஜா தனி ஆளாகத்தான் தன் குடும்பப் பொறுப்பை தலைமேல் சுமந்து கொண்டாள். கொழுந்து பறித்து முடியும் நேரத்தில் காட்டுக்குள் கொஞ்சம் விறகையும் சேர்த்து, அங்கே இங்கே என்று கிடைக்கும் கீரைகளையும் சேர்த்துக் கொண்டு போவாள். அதை பக்கத்து ஊரில் விற்று கிடைக்கும் பணத்தையும் சேர்த்துத்தான் செலவுகளை சமாளிக்கிறாள். லயம் காம்பராவோடு இருக்கும் பெரிய மரக்கறித்தோட்டத்திலும் ஏதாவது பயிர் செய்து கொள்வாள்.


குமாரவேலும் தோட்டத் தொழியாகத்தான் வேலை செய்தான்.

மாதச் சம்பளம் போதாதென்பதால்தான் தொழிலிலிருந்து விலகி அந்த பதினாலு நாள் பணத்தையும் வாங்கிக் கொண்டு, பக்கத்து ஊர்களில் சென்று கூலி வேலை செய்ய ஆரம்பித்தான். அப்படி வேலைக்காகச் சென்ற இடத்தில் மரம்வெட்டும்போது மரத்தில் இருந்து விழுந்து இறந்தும் போனான். சரோஜா மூன்று குழந்தைகளையும் தனியாக வளர்க்கும் நிலை வந்தது.

தனியனாகக் கிடைக்கும் சம்பளத்தில் எல்லா வேலைகளையும் செய்வது சிரமமான காரியம் தான். ஆனாலும் வேறு என்னதான் செய்ய முடியும். பிறந்து வளர்ந்த தோட்டத்தை விட்டு கணவனோடு இங்கு வந்தாகிவிட்டது. இங்கே பிள்ளைகளின் படிப்புக்காக கொஞ்சம் நல்ல பள்ளிக்கூடங்களும் உண்டு. நகர்ப்புறத்தருகில் இருக்கும் தோட்டம் என்பதால் கொஞ்சம வசதியான இடம்தான்.

கொழுந்து ஒரு முறை நிறுத்தாகிவிட்டது. இனி பகல் நிறுவைதான். இரண்டு நாட்களாக மழை பெய்ததால் தேயிலை மரங்களுக்

ஆறுதல் பரிசு
ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை
அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்த சிறுகதைப் போட்டி 2022




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையில் கால்கள் சறுக்காமல் மேலே எறுவது சிரமம்தான். அரும்பும் இரண்டு இலைகளுமாக கொழுந்தைக் கிள்ளிக் கிள்ளி எடுக்கும்போது விரல்களில் காயமும் சாயமும் இரண்டும் சேர்ந்து கருப்பாகிப்போன விரல்களை நினைத்து அவள் ஒரு நாளும் கவலை அடைந்ததில்லை. செருப்பின்றி கல்லிலும் முள்ளிலும் நடக்கும் அவள் கால்களுக்கும் வலி தெரிவதில்லை.

இயந்திரமாகக் கொழுந்து பறித்துக் கொண்டிருந்தவளின் காலில் ஓர் இடம் திடீரென்று அரிப்பெடுக்கக் குனிந்து பார்த்தவளுக்கு விரல்களின் இடுக்கில கடித்துக் கொண்டிருந்த அட்டை தெரிந்தது. கையால் பிடித்து இழுத்து பிடுங்கி எறிந்து விட்டாள் நன்றாக இரத்தம் குடித்து குண்டாகிப்போயிருந்தது. அந்த மழைக்காலங்களில் அட்டைகளின் தொல்லை தோட்டங்களில் பொதுவாகவே இருப்பதுதான். அதையெல்லாம் பொருட்படுத்திக் கொண்டிருக்க முடியாது. அட்டை கடித்த இடம் கொஞ்சம் அரிப்பாக இருந்தாலும் அன்றைய நாள் வேலையை முழுதாக முடித்துவிட்டாள். வீட்டுக்குப் ரோனதும் சில கைவைத்தியங்கள் செய்துகொண்டு வழமையான வேலைகளை முடித்துக் கொண்டு உறங்கிப் போனாள்.

மறுநாள் காலை எழுந்தவளுக்கு அவளது கால் விரல்களைப்பார்க்க அதிர்ச்சியாக இருந்தது. விரல்கள் வீங்கிப் போயிருந்தன. நொண்டிக் கொண்டே மூத்தவளின் உதவியோடு காலைக் கான வேலைகளை முடித்த போதும் அவளால் தொட்டத்திற்குச் சென்று வேலை செய்ய முடியாது என்பது புரிந்தது. தேயிலை மலை களின் சரிவுகளில் ஏறவோ, நின்று கொழுந்து பறிக்கவோ முடியாது. பக்கத்து வீட்டு மாலா



அக்காவிடம் அவள் வேலைக்குவர முடியாத தைப்பற்றி கணக்கப்பிள்ளை ஐயாவிடம் (கண்டக்டர் ஐயா) சொல்லும்படி தகவல் அனுப்பி விட்டு காம்பராவின் மூலையில் பாயை விரித்து சாய்ந்து கொண்டாள். மாலையாகும்போது கால் விண் விண்ணென்று வலிக்க ஆரம்பித்தது. தாங்க முடியாத வலி. தடியொன்றை ஊன்றிய படியே தோட்ட வைத்தியரிடம் போனவளுக்கு லேசாக காய்ச்சலும் அடிக்கத் தொடங்கியிருந்தது.

தலைவலிக்கும், காய்ச்சலுக்கும் அப் போதைக்கு வலிநிவாரணி வழங்கிய தோட்ட வைத்திய அதிகாரி "அட்டைகடித்து விஷமாகி யிருக்கிறது. நாளையே சென்று நகர வைத்திய சாலையில் காட்டுங்கள்" என்று சொல்லிவிட்டார். என்ன செய்வதென்றே புரியவில்லை சரோஜா வுக்கு. வேலைக்குப் போகாவிட்டால் அன்றைக் கான பேர் விழாது. சம்பளம் குறைந்து போகும். மறுநாள் வைத்திய சாலைக்குப் போனவளை தங்கி வைத்தியம் பார்க்க வேண்டும் என்று வைத்தியர் சொல்ல, வீட்டு நிலைமைகளை எடுத்துச் சொல்லி மருந்தைக்கேட்டு வாங்கிக் கொண்டு வந்து விட்டாள் சரோஜா.

மறுநாளே காலில் துணியைக் கட்டிக் கொண்டு வேலைக்குச் சென்றுவிட்டாள். ஆனால் ஒரு வாரம்போல் ஆகும்போது விரலில் அட்டைகடித்த இடம் இலேசாகக் கருப்பாகி இருந்தது. அவள் அதை பெரிது படுத்தவில்லை. தொடர்ந்தும் வேலைக்குப் போய்வந்தாள். விரல்கள் முழுதாகக் கருத்து மீண்டும் விடாமல் அரிக்கத் தொடங்கிய போதுதான், மீண்டும் நகர வைத்திய சாலையை நாடிவந்தாள் சரோஜா.

அட்டை கடித்த விஷம், கால் விரல்களை வெட்டவேண்டிய நிலைக்கு கொண்டு வந்து விட்டிருந்தது. யோசித்துக் கொண்டிருக்க காலமிருக்கவில்லை. மாலா அக்காவினதும் மூத்தவள் புவனாவினதும் உதவியோடு வைத்தியசாலையில் தங்கி சத்திர சிகிச்சை யில் கால்விரல்கள் நான்கினை வெட்டியு மாகிவிட்டது. அப்படியே விட்டு, கால் முழுதும் பரவினால் காலையே வெட்டவேண்டி வந்து விடலாம் என்று வைத்தியர்கள் சொல்லி யிருந்ததால் அவள் அதற்குமேல் யோசிக்கவு மில்லை. இந்த சிகிச்சைகளுக்காக அலைந்தது, அனுமதிக்கப்பட்டது சத்திர சிகிச்சைக்குப் பின் காயம் காயும்வரை என்று அவளால் தொடர்ந்தும் வேலைக்குப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக முடியாதநிலை. மாலா அக்காவிடம் சொல்லியும் அவளாக ஒரு முறை பொய் சொல்லியும் தோட்டத்துரையிடம் அனுமதி வாங்கியிருந்தாள்.

அந்த மாதத்தில ஒருநாள் தோட்டத்தி லிருந்து கடிதம் வந்திருந்தது. முறையாக அறிவிக்காமல் தொடர்ந்து வேலைக்குவராததால் வேலையிலிருந்து தானாக விலகிக் கொண்ட தாக தோட்ட நிர்வாகம் கருதுவதாகக் கடிதத்தில இருந்தது. மறுநாளே மகள் புவனாவையும் அழைத்துக் கொண்டு வைத்தியசாலையில் வழங்கப்பட்ட வைத்தியர் சான்றிதழ் இதர ஆவணங்களையும் எடுத்துக் கொண்டு தோட்டத்துரையைச் சந்தித்தாள் சரோஜா.

துரை மீண்டும் வேலை தருவதற்கு மறுத்துவிட்டார். தொழிற்சங்கத்தில் முறைப்பாடு செய்து, அங்குள்ள பிரதிநிதிகளோடு சென்று பேசிப்போராடியும் எந்தப்பயனும் கிடைக்க வில்லை. மனமுடைந்து போனாள் சரோஜா.

தொழில் ஆணையாளர் காரியாலயம், தொழில் நீதிமன்றம் என எல்லா இடமும் அலைந்தாகிவிட்டது. எந்தப்பயனும் இல்லை. கால்விரல்களை இழந்த பின் அவள் முன்பு போல வேலை செய்ய முடியாது என்பதால் எப்படியாவது தவிர்க்கவே தோட்ட நிர்வாகம் முயற்சிப்பதாக அவள் மனம் சொல்லியது. தொழிலாளர் நட்ட ஈடு ஆணையாளரிடம் வழக் கொன்று தொடுத்து நட்ட ஈடு பெறுவதற்கு முயற்சி செய்யும்படி தொழிற்சங்கத்தினர் அறிவுரை வழங்க அதையும் முயன்றாள் சரோஜா. அங்கேயும் செலவும் அலைச்சலும் மட்டும்தான் எஞ்சியது.

இது வேலை நேரத்தில் ஏற்பட்ட காயமல்ல. அதன்பின் வேறேதாவது நடந்த விபத்துக் களால் நேர்ந்திருக்கலாம். அதெற்கெல்லாம் நட்ட ஈடு வழங்க முடியாது என்று தோட்ட நிர்வாகம் பேசி வழக்கை அவர்களுக்கு சார்பாக வென்று விட்டது. அதிலும் சரோஜா வுக்குத் தோல்விதான். வக்கீல் பிடித்து வாதிடுமளவு அவளுக்கு வசதியில்லை. தொழிற்சங்கம் அவளுக்காகப் பேசியது. போக்குவரத்து அன்றாடச் சாப்பாடு, வீட்டுச் செலவுக்கென்று காதிலும் கழுத்திலும் இருந்த ஒன்றிரண்டு நகைகளும் விற்றாகிவிட்டது. இனி அவளிடம் விற்பதற்கும் பெறுமதியாக எதுவுமே இல்லை. சேமிப்புகளும் இல்லை. கால் விரல்களும் போனது. வேலையும் போனது. நொண்டிக் கொண்டு நடந்த அவளால், அவசரமாக ஒரு வேலையைத் தேடிக்கொள்வதும் சிரமமாக இருந்தது. இதுவரை யாரிடமும் கையேந்தி பழக்கம் இல்லை அவளுக்கு. அடுப்புக்குப் பக்கத்தில் அமர்ந்து அழுது கொண்டிருந்தாள்.

"அம்மா எதுக்கு அழுவுற? நா வேனா வேலைக்கு போகட்டுமாம்மா? இப்ப எனக்கு பதினைஞ்சு வயசாச்சு. டவுனுல கடையில வேல செஞ்சா மாசம் இருவத்தி அஞ்சாயிரம் கொடுக்கிறாங்களாம். ரம்யா சொல்லிச்சு" நன்றாகப் படித்து வைத்தியராக வரவேண்டும் என்ற இலட்சியத்தோடு இருந்த புவனா கேட்டபோது, சரோஜாவால் அனுமதிக்க முடியவில்லை. மனம் வரவுமில்லை. ஆனால் வீட்டின் வறுமை உழைக்க வேறு யாருமில்லை. என்ற நிலை. "தம்பி தங்கச்சிய படிக்க வைக்கலாம்மா. நான் படிச்சது பொதும்மா. காசு கேட்டு யாருட்டயும் போயி நிக்க முடியல மா" சின்னவள் சொல்லச் சொல்ல கரோஜாவுக்கு அதுதான் சரியெனப் பட்டது. படிப்பில் கெட்டிக் காரியாக இருந்த அவள் செல்வ மகள் பள்ளிப்படிப்பை தரம் பத்தோடு நிறுத்திவிட்டு வேலைக்குப் போகிறாள்.

அவள் இழந்த அனைத்திற்கும் நட்ட ஈடாகிப்போனது அவள் மகள் புவனாவின் எதிர்காலம். அந்தப் பிஞ்சின் நட்டத்தை யார் ஈடுசெய்வார்?

ooo



கரிகாற்சோழன் விருது 2021 & 2022

சிங்கப்பூர், மலேசியா, இலங்கை படைப்பாளிகள்
4 பிரதிகள் "மே" மாதம் 30 தேதிக்குள் (கவிக்கோ மன்றதிற்கு)
அனுப்பும் படி வேண்டுகிறோம்.

கவிக்கோ மன்றம்
6, இரண்டாவது மெயின் ரோடு, சி.ஐ.டி காலனி, மயிலாப்பூர்
சென்னை - 600 004

+91 44 2498 7373 | +91 99400 67000

நிறுவனர் M.A.முஸ்தபா

முஸ்தபா தமிழ் அறக்கட்டளை
கோ சாரங்கபாணி ஆய்வு இருக்கை
தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சாரச் சித்திரையை வரவேற்று மகிழ்வோம் !

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண் - அவுஸ்திரேலியா.



முன்பனி பின்பனி மாறிய பின்னே
இளவேனில் துளிர்க்க சித்திரை மலரும்
தைப் பொங்கலுண்டு தளர்வகலும் வேளை
புத்துணர் வூட்டச் சித்திரை கைகோர்க்கும்

பெற்றோரும் மகிழ்வர் பிள்ளைகளும் மகிழ்வர்
உற்றவரும் மகிழ்வர் உறவுகளும் மகிழ்வர்
மணமேடை அமர மங்கலநாள் அமைய
சிறப்பான நாளை சித்திரையே திறக்கும்

வருடத்தின் தொடக்கம் சித்திரையே என்போம்
சித்திரையே தொடக்கமாய் பஞ்சாங்கம் காட்டும்
பஞ்சாங்கம் பார்ப்போம் பலன்களையும் அறிவோம்
நெஞ்சாரச் சித்திரையை வரவேற்று மகிழ்வோம்

மருத்துநீர் வைப்போம் மகிழ்வாய் நீராடுவோம்
புத்தாடை உடுத்தி புத்துணர்வு பெறுவோம்
பெற்றவர்கள் பெரியவர்கள் ஆசியினைப் பெறுவோம்
கற்றுத்தந்த ஆசானை கண்டாசி வாங்கிடுவோம்

கோவிலுக்குச் செல்வோம் குறையகலப் பிரார்த்திப்போம்
வாழ்வெல்லாம் வளங்கொழிக்க மனமார வேண்டிடுவோம்
நாடெங்கும் நலஞ்சிறக்க நாம்வேண்டி வணங்கிடுவோம்
நல்லமனம் தருகவென நாமிறையைத் தொழுதிடுவோம்

உறவுகளைக் கண்டிடுவோம் உளமகிழச் சேர்ந்திடுவோம்
சுவையான பட்சணங்கள் பரிமாறி மகிந்திடுவோம்
இனிப்பான சுவையோடு எல்லாமே ஈந்திடுவோம்
எல்லோரும் சித்திரையைக் கொண்டாடி இன்புறுவோம்

செந்தமிழர் சிங்களவர் சித்திரையை வரவேற்பார்
சொந்தமெனச் சித்திரையைக் கொண்டாடி குதூகலிப்பார்
பாற்சோறு பலகாரம் பக்குவமாய் செய்திடுவார்
பட்டாசு மத்தாப்பு வெடித்துமே மகிழ்ந்திடுவார்

உவப்புடனே ஊஞ்லேறி உளமகிழ ஆடிடுவார்
உல்லாசம் பொங்கிவர ஊஞ்சலாடிப் பாடிடுவார்
இளையவரும் முதியவரும் இணைந்துமே இருந்திடுவார்
எல்லோரும் ஊஞ்சலாடி சித்திரையை இருத்திடுவார்

கொடியேற்றம் ஒருபக்கம் கோவில்களில் நடக்கும்
தேரோடும் திருவிழாவும் சிறப்பாக நடக்கும்
மதுரையில் கள்ளழகர் கால்வைப்பார் வைகையிலே
மீனாட்சி திருக்கோவில் திருவிழாவாய் ஜொலிக்கும்

இசையோடு இயலும் இங்கிதமாய் ஒலிக்கும்
இளைஞரொடு முதியவரும் இணைந்துமே ரசிப்பார்
களைகட்டும் கலைவிழா களிப்பளித்து நிற்கும்
காதலுடன் சித்திரையும் கைகோர்த்து சிரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாராய் நாராய் செங்கால் நாராய்...

பாடசாலைக் காலத்தை நினைவூட்டும் நாராய் நாராய் செங்கால் நாராய் பாடல் வரிகள். மாணவப் பருவத்தில் இப்பாடலின் அனைத்து மேன்மைகளும் விளங்கிக் கொள்ளப்படவில்லை. ஆனாலும் சவாலுக்கு உட்படுத்த முடியாத உவமையினாலும் வறுமை மற்றும் சூழ்நிலை என்பவற்றைக் காட்சிப்படுத்தும் பாங்கினாலும் இன்றுவரை இப்பாடல் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

சத்திமுத்தப் புலவர் பாடியதாக விசுவாசிக்கப்படும் இப்பாடல் ஆசிரியப்பா வடிவில் பன்னிரெண்டு வரிகளில் எழுதப்பட்டுள்ளது.

இப்பாடல்மீதான எனது சவாரியின் அநுபவங்களே இங்கு கட்டுரையாகக் கனிகின்றது.

**ஜனனம்**

1500 வருடங்களுக்கு முன்னர் வறுமையில் வாடிய ஒரு புலவன் பாண்டிய அரசனிடம் உதவியை எதிர்பார்த்து மதுரைக்குப் பயணிக்கிறான். தவிர்க்க முடியாத காரணத்தால் அங்கு சத்திரமொன்றில் அன்று இரவு தங்குகிறான். அடர் குளிர். மேலாடை இல்லை. பாண்டிய மன்னன் மாறன் வழுதி நகர் சோதனைக்கு வரும் நேரம்.

அவ்வேளை வானத்தில் பறந்து செல்லும் ஒரு சோடி செங்கால் நாரையை புலவன் அவதானிக்கிறான். ஆண் நாரையை அழைத்து தனது நிலையை விளக்கி மனைவிக்குத் தூது செல்லுமாறு கேட்டுக் கொள்கிறான். பாடல் பிறந்தது.

**நாராய் நாராய் செங்கால் நாராய்**
**புழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன**
**பவளக் கூர்வாய் செங்கால் நாராய்**
**நீயும் நின் பெடையும், தென் திசைக் குமரியாடி**
**வடதிசைக்கு ஏகுவீராயின்**
**எம்மூர் சத்திமுத்த வாவியுள் தங்கி**
**நனைசுவர் கூரை கனைகுரல் பல்லி**
**பாடு பாத்திருக்கும் எம் மனைவியைக் கண்டு**
**எங்கோன் மாறன் வழுதிக் கூடலில்**
**ஆடையின்றி வாடையில் மெலிந்து**
**கையது கொண்டு மெய்யது பொத்தி**
**காலது கொண்டு மேலது தழீஇப்**
**பேழையில் இருக்கும் பாம்பென உயிர்க்கும்**
**ஏழையாளனைக் கண்டனம் எனுமே**

இதனைப் பாடியவர் யார் என்று எண்பிக்க முடியவில்லை. ஆனால் எம்மூர் சத்திமுத்த வாவி என்ற ஒரு சொற்றொடர் பாடலில் தலை காட்டுகின்றது. எனவே புலவரின் ஊர் சத்திமுத்தம் என்பது ருசுப்படுத்தப்படுவதால் சத்திமுத்தப் புலவர் என்று பாடியவருக்கு பெயர் சுட்டப்பட்டது.

**பாடலின் சிறப்பு**


எல்லோராலும் வாசித்து பொருள் தேட முடியாத பாடல்களே அநேகம் வெளிவந்த புறநானூற்றுக் காலத்தில் எவரும் படித்துக் கருத்தறியத் தக்கதாக எளிமையாக அமைந்திருப்பது இப்பாடலின் சிறப்பாகும்.

பனங்கிழங்கு பிளந்தது போன்ற நாரையின் அலகு எனும் உவமை இன்றுவரை பாடலைப் பேச வைத்திருக்கின்றது. அதுவே இப்பாடலில் முதல்மைச் சிறப்பாகும்.

நனைசுவர்க் கூரை என்ற ஒரேயொரு ஒற்றைப்படைச் சொல்லால் தனது வறுமையைப் படம்பிடித்துக் காட்டும் நுட்பம் கவிதையின் மேதமையை ஒலிபரப்புச் செய்கிறது.

நாரைகள் நீண்டதூரம் களைப்பின்றிப் பயணிக்கும் திறன் வாய்ந்தவை. அதனாலும் நாரையைத் தூதனுப்பும் முடிவுக்கு புலவர் வந்திருக்கலாம்.

நாராய் நாராய் செங்கால் நாராய் பவளக் கூர்வாய் செங்கால் நாராய் என்று காலழகையும் வாயழகையும் கற்கண்டு போன்ற சொற்கொண்டு பாடலின் தொடக்கத்தில் நாரையை அழைப்பது அதன் உறுப்புகள் பற்றி அவர் தெளிவுடன் இருந்துள்ளார் என்பது மட்டுமல்ல கேட்போரை



**இரண்டாம் விசுவாமித்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் குளிரச் செய்யும் புலவனின் உளவியல் அழைப்புமாகும்.

நீயும் நின் பெடையும் என்பதால் ஆண் நாரையிடம் தனது தூதினைப் பிரேரிக்கின்றார் எனவும் தெளிந்து கொள்ளலாம்.

தொடர்ந்து வரும் வரிகளில் வாடைக்காற்று, தென்திசைக் குமரி, வட திசை போன்ற சொற்களின் மூலம் இயற்கையின் பிரசன்னம் கவிதையில் உலா வருவதையும் தெரிந்து கொள்ளலாம்.

**வலசை போதல்**

தாங்க முடியாத குளிர் மற்றும் வெப்ப காலத்தில் உடல் சமநிலை பேணவும் உணவுத் தேவைக்காகவும் இனப்பெருக்க நோக்கத்திலும் பறவைகள் இடம் பெயர்ந்து வேற்றிடம் செல்வதுண்டு. இது தமிழில் வலசை போதல் என்று அறியப்படும். பழந்தமிழ் இலக்கியங்களில் வலசை வரும் பறவைகள் பற்றி பதிவுகள் காணப்படுகின்றன.

தென்திசைக் குமரியாடி வடதிசைக் கேகுவீராயின் என்பதினால் வலசை போதல் என்ற செயற்பாடு தொடர்பிலும் தகவல் தெரிந்தவராக புலவர் இருந்துள்ளார்.

செங்கால் நாரைகளின் தமிழகப் பயணம் பெரும்பாலும் நவம்பர் முதல் மார்ச் வரை ஆகும். அது பின்பனிக் காலமும்கூட. எனவே பாடலின் காலம் இயைபாக அமைகிறது.

பன்னெடுங் காலங்களுக்கு முன்பே வலசை போதல் போன்ற இயற்கை வரலாறுகளிலும் தமிழ்ப் புலவர்கள் அறிவுள்ளவர்களாக வாழ்ந்தார்கள் என்பதனை இப்பாடல் நிறுவு கின்றது.

**சகுனங்களை நம்புதல்**

சகுனம் கேட்கும் செயன்முறை எப்போது தொடங்கியது என்பதுபற்றி நமக்குத் தெரியாது.



ஆனால் தனது கணவன் பொருளீட்டி விரைவில் வீடு திரும்புவார் போன்ற நல்ல விடயங்களை மனதில் நினைக்கும்போது பல்லி கனைத்தால் அது நல்ல சகுனமாகப் பார்க்கப்படும்.அப்படி யாக பாடு பார்த்திருக்கும் ஒரு மனைவியைப் பாடலில் காணுகின்றோம்.

**அடையாளம் இடப்பட்ட நிலங்கள்**

சத்திமுத்தப் புலவரின் இந்தப் பாடலில் வடதிசை, தென்திசைக் குமரி, சத்திமுத்தம், கூடல் ஆகிய நான்கு நிலங்கள் அடையாளம் இடப்பட்டுள்ளன.

பாடலில் வடதிசை என்பது பறவைகள் தங்களின் இடப்பெயர்வை ஆரம்பிக்கும் இடமாகும். பனிப் போர்த்துகையின்போது வடதுருவத்தில் இருந்தும் ஐரோப்பாவில் இருந்தும் பறவைகள் தென்திசை நோக்கி வருகின்றன.

இந்தியப் பெருநிலத்தின் தென்திசையில் கன்னியாகுமரி உள்ளது. வடதிசை இருந்து வரும் பறவைகள் கன்னியாகுமரியை அண்டி தமது தற்காலிக அமைவிடங்களை ஏற்படுத்திக் கொள்கின்றன.

அவ்வாறு தென்திசை நோக்கிச் செல்லும் நாரைகள் கன்னியாகுமரியில் நீராடி மகிழ்ந்து சில நாட்களின் பின் வடதிசை நோக்கிச் செல்லும். அவ்வாறு செல்லும்போது இடை வழியில் சத்திமுத்த வாவியருகே தங்கி தனது மனைவியைக் கண்டு நிலமையைச் சொல்லு மாறு நாரையிடம் புலவர் தூது போக விண்ணப் பிக்கின்றார்.

தென்திசையில் கன்னியாகுமரியைக் குறிப்பில் தரும் புலவர் வடதிசையில் ஊர் எதனையும் பெயரிடாமை வடதிசை என்பது வெளிநாடு என ஊகிக்க இடமுண்டு.

ஏற்கனவே சொன்னதைப்போல சத்திமுத்தம் புலவரின் ஊர். இன்றைய கும்பகோணத்துக்கு அருகே உள்ளது.சோழநாட்டு நிலம். கன்னியா குமரியில் இருந்து முப்பது காத தூர இடைவெளி. தற்போதைய அளவீட்டில் சுமார் 500 கி.மீ ஆகலாம்.

சக்தி இந்த இடத்தில் வைத்து சிவனை முத்தமிட்டதால் ஊருக்கு இக்காரணப் பெயர் வந்ததாக ஒரு கதையும் உண்டு.

கூடல் என்பது பாண்டிய ஆளுகைக்கு உட்பட்ட மதுரை மாநகரைக் குறிக்கும். மாறன் வழுதி என்ற மன்னரிடம் பொருள் பெற வந்தவரே கூடல் நகரச் சத்திரத்தில் தங்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பயனடைந்த புலவர்**

இரவுப் பொழுதில் நகர்சோதனையில் வந்த மன்னன் பனங்கிழங்கு பிளந்தன்ன பவளக் கூர்வாய் என்ற புலவனின் பாடல் வரி கேட்டு நாரையின் அலகை விளக்கும் வியக்கும் உவமையை எண்ணி மகிழ்ந்து தான் அணிந்திருந்த உத்தரீயம் என்ற மேலாடையைப் புலவன் மீது அடையாளமாகப் போர்த்தி விட்டுச் சென்றான். தன்னுடைய காவலர்களை அனுப்பி புலவனை அழைத்து வரச் செய்து பொருள் வழங்கி அனுப்பி வைக்கிறான்.

**பாடலை முன்வைத்து சில குறிப்புகள்**

சோறுடைய சோழ நாட்டைச் சேர்ந்த சத்தி முத்தப் புலவர் ஏன் தன் வறுமையைப் போக்க பாண்டிய மன்னனிடம் சென்றார் என்ற கேள்வி முளை விடுதல் நியாயமே.ஆனால் புலவரின் காலத்துப் பாண்டிய மன்னனே தமிழுக்கும் தமிழ் தரும் புலவனுக்கும் அள்ளி அள்ளிக் கொடுப்பவனாக இருக்கலாம் என்று நாம் சமாதானம் அடையலாம்.

இன்னுமொரு விடயம் புலவனின் வீட்டுக்கும் மதுரைக்கும் இடையிலான தூரம் பற்றியதாகும்.

சத்திமுத்தம் மதுரை ஆகிய பிரதேசங்களுக்கிடையே இன்றைய பாதை அமைப்பில் 240 கி.மீ தூரம் ஆகும். ஆயின் பதினையாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தடைகள் பல தாண்டி எத்தனை காத தூரம் புலவர் பயணம் செய்ய வேண்டியிருக்கும். அதுவும் வறுமைப்பட்ட மேனியோடு கால்நடையாக.

எனவே தூரத்தைக் கவனத்தில் கொண்டால் புலவர் மன்னனிடம் பொருள் பெற்று தன் வீடு திரும்ப இரண்டு– நான்கு மாதகால அவகாசமாவது தேவைப்பட்டிருக்கும் என்று துணியலாம்.

பிறிதொரு விடயமும் எனது குறிப்போடு வருகிறது.

இந்தப் பாடல் புறநானூறு தொகுப்பில் இடம்பெறுவதாகச் சிலரால் கூறப்படுகின்றது.

சத்திமுத்தப் புலவர் என்ற ஒரு புலவனின் பெயரில் புறநானூறு தொகுப்பில் பாடல் எதுவுமில்லை. அதேவேளை பெயர் தெரியாத புலவர்களால் பாடப்பட்டதாக 14 பாடல்கள் அத்தொகுப்பில் உள்ளன. அவற்றிலும் நாராய் நாராய் பாடல் இல்லை. எனவே இப்பாடல் புறநானூறு தொகுப்பில் இல்லை என்பது என் கட்சியாகும்.

மேலதிக தகவலாக இன்னுமொரு விடய முண்டு.

சத்திமுத்தப் புலவர் பிற்காலத்தில் களத்தூர் குடிதாங்கி முதலியாரால் ஆதரிக்கப்பட்டார். இதனை புலவரின் இரண்டாவது பாடல் உறுதிப்படுத்துகின்றது. அப்பாடல் வருமாறு.

**வெறும்புற் கையுமரிதாங் கிள்ளைசோறும் என்வீட்டில்**
**வரும்**
**எறும்புக்கு மாற்பதமில்லை முன்னாளென் னிருங்கலியாம்**
**குறும்பைத் தவிர்த்த குடிதாங்கியைச் சென்று கூடியபின்**
**தெறும்புற் கொல்யானை கவளம் கொள்ளாமற்**
**றெவுட்டியதே. (2)**

முன்னர் என் வீட்டில் கிள்ளைக்கும் எறும்புக்கும்கூட உணவு கிடைக்காத வறுமை இருந்தது.குடிதாங்கியின் தொடர்பு கிடைத்தபின் யானை கரும்பு உண்டு தெவிட்டியதால் எஞ்சியதைத் துப்பும் நிலை என்று பாடியுள்ளார்.

சத்திமுத்தப் புலவர் இரண்டு பாடல்களை மட்டுமே பாடியுள்ளர்ர். அவை தனிப்பாடல் திரட்டில் உள்ளது.

தமிழுலகம் உள்ளவரை நாராய் நாராய் செங்கால் நாராய் என்ற பாடல் நம்முடன் நலமுடன் வாழும் என்று உறுதியாக நம்பலாம்.

○○○



**திரு. திருமதி துரைச்சாமி தவமணி தம்பதியின்**
**கனிஷ்ட புத்திரன் தயாதர்சன் அவர்களுக்கும்,**
**திரு. திருமதி கிருஷ்ணானந்தன் சந்திரா தம்பதியின்**
**செல்வப்புதல்வி சுஜாதா அவர்களுக்கும்**
**06.02.2023 அன்று திருமணம் இனிதே இடம்பெற்றது.**

**புதுமணத் தம்பதியரை ஞானம் வாழ்த்தி மகிழ்கிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'வருகிறான்'....

ரஞ்ஜனி சுப்ரமணியம்



நேற்று உதயனின் தொலைபேசி அழைப்பு வந்ததில் இருந்தே ரம்யாவுக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. லண்டனில் இருந்து வந்திருக்கிறானாம். சந்திக்க வேண்டுமாம். என்றுமில்லாத பரபரப்பும் கேள்விகளும் மனதில் அலைவீசிக் கொண்டே இருந்தன. அவனைப்பற்றிய நினைவே வெறுப்பாக இருந்தாலும் எதற்காக வருகிறான் இப்போது எப்படி இருப்பான் என்று அறியும் அவாவும் உள்மனதில் பதுங்கி இருந்தது.

எதிர்பாராமல் வந்த அழைப்பு. அவள் இருந்த மனநிலையில் மேலதிகமாக எதையும் விசாரிக்கவில்லை. உதயன் பற்றி பாடசாலை நாட்களுக்குப் பிறகு அவள் நினைத்துப் பார்க்க எந்தத் தேவையும் இருக்கவில்லை. ஒரு பட்டிக்காட்டுக் கோமாளியைப் பற்றி நினைப்பதற்கு என்ன இருக்கிறது. அவனது தோற்றமும், எண்ணெய் வழிந்த தலையும், சற்றே முன் தள்ளிய பற்களும், பழுப்பு நிற சீருடையும் ஞாபகத்தில் வர கேலிப் புன்னகையால் உதடுகள் நெளிந்தன.

உண்மையில் இது பரபரப்பாக வேண்டிய சந்தர்ப்பமோ வயதோ இல்லையென்பது நன்றாகவே புரிந்தாலும், தம்மை விட ஏதோ ஒரு விதத்தில் தகுதி குறைந்தவர்களைப் பார்த்து ஆறுதல் கொள்வது மனித மனதின் கறைப்பட்ட மூலையில் பதுங்கியிருக்கும் ஒரு புதிர் மிகுந்த உணர்வு என்பது உண்மையே.

அவளுக்கு என்ன வயதாகிறது என்று அறிய ஆவலாக இருப்பீர்கள் ஐம்பது கடந்து மேலும் ஐந்து வருடங்களும் ஓடிவிட்டன. இளமையின் அழகுகள் ஒவ்வொன்றாக விடைபெற்றுக் கொண்டிருக்க, இவ்வயதில் ஹோமோன் சமநிலை இன்மையால் நிகழும் அனைத்து பிரச்சனைகளையும், மாற்றங்களையும் அதீதமாகவே அனுபவித்துக் கொண்டிருக்கிறாள். சிலபல நோய்கள் போனசாகக் கிடைத் திருக்கின்றன.

அழகுமிகும் தேவதையாக இருந்த பருவங்கள் மாறி உடல் பருத்து ஊளைச் சதையும் பசுமையை இழந்து சுருங்கும் சருமமும், கண்களின் கருவளையமும் சொல்லாத சில சேதிகளை பறைசாற்றியதுடன் மன விரக்தியை ஏற்றிக் கொண்டும் இருந்தன.

இந்த வயதிலும் அவளது பள்ளித் தோழிகள் சிலர் இளமைத் தோற்றத்துடன் வலம் வருவதை வெளித் தெரியாத ஏக்கத்துடனும் பொறாமையுடனும் நோக்குவது அவள் மட்டுமே அறிந்த ரகசியம். அவர்கள் வாழ்க்கையில் சந்தோஷமும் அமைதியும் நிறைந்திருப்பது காரணமாக இருக்கலாம். பதவியும், ஆளுமையும் அந்த விதமான கம்பீர அழகினை அவர்களுக்கு அளித்திருக்கக் கூடும்.

நாற்பத்தைந்து வயது வரை அவளும் அப்படித்தானே வாழ்ந்தாள். வேலைக்குப் போகாவிட்டாலும் வீட்டின் அரசியாகவே மேன்மையுடன் வாழ்ந்திருந்தாள். கனத்த பெருமூச்சொன்று இதயத்தின் ஆழத்திலிருந்து வெம்மையுடன் வெளியேறியது. காலம் தன் கருணையில்லாத முகத்தை அதன்பின் தான் காட்டியது.

"ரம்யா...ரம்யா"

கணவர் ஈனமான அலுப்பான குரலில் அழைப்பது கேட்கிறது. உடனடியாக எழும்பி ஏனென்று கேட்கக்கூட சுரத்தில்லாது சற்றுப் பொறுத்தே செல்கிறாள். மனித வாழ்வில் பாசம், பக்தி என்பவற்றிற்கு கூட பொறுமையின் எல்லையும், காலமும், விலையும் நிர்ணயிக்கப்பட்டு இருக்கின்றன.

பாரிசவாதம் வந்து ஒடுங்கிய உடம்பும் கோணிய வாயும் தளர்ந்த நடையும் அவருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள்ளும் மனமாற்றங்களை ஏற்படுத்தி இருந்தது. தனியாக நடப்பதற்கு பயப்படுவதால் அவரை விட்டு அவள் எங்கும் செல்ல முடிவதில்லை. ஆள் வைத்துப் பார்க்கும் அளவிற்கு தற்போதய பொருளாதார நிலை இடம் தரவில்லை.

"கோப்பி கொஞ்சம் போட்டுத் தாறியோ? களைப்பாக இருக்கிறது".

எப்படி வாழ்ந்தவர் இவர். நோய் மனிதனது வாழ்க்கையை மறுபக்கமாகப் புரட்டிப் போடும் என்பது அனுபவிக்கும் வரை தெரியாமலே இருந்தது. இவரது தோற்ற அழகையும் இஞ்சினியர் படிப்பையும் பார்த்துத்தானே அதிக வயது வித்தியாசத்தையும் மறந்து அன்று அவள் மயங்கிப் போனாள். பத்தொன்பது வயது நிறைய முதல் திருமணம். மேற்கொண்டு படிக்கும் ஆசையை விட்டுவிடும் அளவிற்குத் திருமண மாயையில் கட்டுண்டு போனது அவளது தவறுதான்.

திருமணமாகி பத்து வருடங்களின் பின் கிடைத்த இரண்டு மகன்மார். இரட்டைக் குழந்தைகள். அவர்களும் படிக்க வேண்டிய வயதில் கவனம் செலுத்தவில்லை. இன்று ஏனோதானோ என்று நிறைவான வருமான மில்லாத ஒரு தொழில். தனியார் துறையில் கணவரின் சம்பாத்தியம் திருப்தியாக இருந்ததவரை வாழ்க்கை அழகாகத்தான் ஓடிக் கொண்டிருந்தது. பக்கவாதம் வந்த நொடியில் இருந்து எல்லாமே இறங்கு முகமாக மாறிப் போயிற்று.

கோப்பியை தயாரித்துக் கொண்டு இருக்கை யில் கைத்தொலைபேசி சிணுங்கியது.

"ரம்யா, நான் நேற்று சொன்னபடி மதியம் ஒரு மணி போல வருகிறேன். விலாசத்தை மெசேஜ் பண்ணி விடும். நண்பருடன் மதியம் சாப்பிட்டு விட்டுத்தான் வருவேன். ஒரு கொஞ்ச நேரம் எனக்காக ஒதுக்குவீர் தானே?"

"சரி. வாரும். வீட்டில்தான் நிற்பேன்".

உதயன், ரம்யா என பெயரைச்சொல்லி அழைத்தது அவளுக்கு கடுப்பாகவே இருந்தது. அவனைச் சந்திப்பதில் ஆர்வம் இல்லை யெனிலும், அந்தக் கோமாளி இப்போ எப்படி இருக்குதென்று பார்க்கும் ஆவலும் இல்லாமல் இல்லை. அவனைப் பற்றி சொல்லிச் சிரிப்பதற்கென்றே அன்று ஒரு கூட்டம் இருந்ததே. எப்படியான மகிழ்வான நாட்கள் அவை ?

நினைவுகள் நாற்பது வருடங்களை நொடியில் கடந்தன. அந்த அழகிய இளவரசி தகப்பனின் காரிலிருந்து இறங்கி "பைபை பப்பா" என்றாள் நாகரிகமாக. ஸ்டைலாக சற்றே குனிந்து, இறக்கியிருந்த கண்ணாடியூடாக தந்தையைப் பார்த்து "இன்றைக்கு கொஞ்சம் பிந்தி காரை அனுப்புங்கோ பப்பா. ஸ்போட்ஸ் பிரக்டிஸ் இருக்கிறது.

மம்மியிடம் சொல்லி விடுங்கோ". ஆங்கிலத்தில் தொடர்ந்த உரையாடல்.

தந்தை அரச உயர் அதிகாரி. தந்தையின் மிதப்பை விட மகளுக்கு அதிகம். இருக்காதா பின்னே. பாடசாலையின் பேரழகி. பரம்பரைச் செட்டு. பங்களாவாசி. நுனி நாக்கில் ஆங்கிலம். படிப்பிலும் ஓரளவு திறமை. அதனால் யாரையும் மதிக்காத திமிர்ப்பார்வை. தலை நிமிர்ந்து பந்தயக் குதிரை போலவே நடப்பாள்.

அவள் காரிலிருந்து இறங்கியதும் நிழல்கள் போல தொடரும் பார்வை வீச்சுகள் வகுப்பறை செல்லும் வரை பாதுகாப்பு வலயமாக சேர்ந்தே பயணிக்கும். ஓரக்கண்ணால் ரசித்துக் கொண்டே கவனிக்காதது போன்ற அலட்சிய நடையில் போவதில்தான் அவளுக்கு எத்தனை கர்வம்.

சைக்கிளில் பல மைல் ஓடி வந்த களைப் புடன், உதயனும் அந்தக் கூட்டத்தில் அடக்கம். அவனது கனவுக்கன்னியும் முதல் காதலும் அவள்தான். எட்டாத உயரத்தில் இருக்கும் பொக்கி ஷங்களை அடைவதற்கு ஆசைப்படக் கூடாது என்று எந்த சர்வதேச சட்டங்களும் கூற வில்லையே.

வாசலில் அழைப்புமணி அடிக்கும் ஓசை. நேரத்தைப் பார்த்தாள். மணி பதினொன்று. "டீசன்சி தெரியாத பட்டிக்காடு. இரண்டு மணித்தியாலம் முதலே வந்து நிக்குது. என்னைப் பார்க்க அவ்வளவு ஆசை போல. அப்போ என்ன மாதிரி குடம்குடமாக வழிஞ்சு கொண்டு திரிஞ்சுது. என்ரை அந்தஸ்து என்னவென்று தெரியாத இடியட்".

மனதில் நினைத்த அதே பாவனையைக் கண்களில் உருவேற்றிக் கொண்டு எகத்தாள மாகவே கதவைத் திறந்தாள். "நினைத்தது சரிதான். அவனைப் போல தான் இருக்கிறது. லண்டனிலை ஏதாவது கடைகளிலை வேலை செய்வான் போல. ஆளைப் பாத்தா அப்படித்தான் தான் தெரியுது"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவனது தோற்றத்தை அளந்த அவளது மனம், ஏனோ அதீத உற்சாகமாகியது. அது தானே அவள் விரும்பியதும். வயதுக்கு அதிக மாகவே மெலிந்த உடல்வாகு. வழுக்கைத் தலை. முன்துருத்திய பற்கள். இருக்கும் தோற்றத்தையும் குறைக்கும் அரைக்கை சேர்ட். அப்படியே, அதே பட்டிக்காட்டான் மாதிரியே இருக்கிறான். மாறவேயில்லை.

"லண்டனுக்குப் போனாலும் சிலருக்கு நக்குத் தண்ணிதான்". மனதில் இளக்காரமாக சிரித்தாள்.

"இது சில்வெஸ்டர் ஒழுங்கை, நம்பர் முப்பத்தைந்து தானே அம்மா..."

அடச்சீ....வீதி மாறி வந்திருக்கிறார்.

"இல்லை. அடுத்த ஒழுங்கை"

என வழி கூறி அனுப்பி விட்டு ஓய்வாக சோபாவில் இருந்து கண்களை மூடினாள். காட்சிப்புலம் பின்னோக்கி நகர்ந்தது.

அது ஆங்கிலப்பாட வகுப்பு. அவளுக்கு மிகவும் பிடித்தமானது. மற்றவர்களின் ஏக்கப் பார்வைகளை மிக அதிகமாகவே பெற்றுத் தரும் பாடவகுப்பு. ஆங்கில ஆசிரியர் சிதம்பரம் தன் ஆங்கிலப் புலமையை வெளிக்காட்டும் விதமாகக் கேட்கும் கேள்விகளால் மற்ற மாணவர்கள் பேந்தப்பேந்த முழிக்க அவள் மட்டுமே கோலோச்சும் பாடம்.

மற்றவர்களாவது பரவாயில்லை. உதயனை இப்போது நினைத்தாலும் சிரிப்பு பொங்கி வழிகிறது. மற்றப் பாடங்களில் திறமை காட்டினாலும், அவனுக்கு சுட்டுப் போட்டாலும் வராத பாடம் ஆங்கிலம். ஊர்ப் பாடசாலையில் இருந்து அண்மையில் தான் ஒன்பதாம் வகுப்பில் சேர்ந்தான். ஆசிரியர் பந்தியை வாசிக்கச் சொல்ல, எழுத்துக் கூட்டி could என்பதைக் "குல்ட்" என்றும் nature என்பதை "நட்டுரே" என்றும் வாசிக்க வகுப்பே திரும்பிப் பார்த்து ஏகத்தாளமாகச் சிரித்தது. சிரிப்பை ஆரம்பித்து வைத்த கைங்கரியம் அவளுடையது. முடித்ததும் அவள்தான்.

சிதம்பரத்தாருக்கு கோபம் சிரசிலை ஏற பிரம்பால் பின்னாலை ரெண்டு போட்டு "ஏறடா பின் வாங்கிலை. இங்கிலிஷிலை ஒரு எழுத்தும் தெரியாத மொக்குகளை எல்லாம் என்ரை உயிரை எடுக்கவெண்டு இங்கை கொண்டு வந்து தள்ளி விட்டிருக்கினம்"


அவன் வாங்கின் மேல் ஏறி உடல் குறுக நின்ற அந்தக் காட்சியை, நினைவுக் கலங்களால் மீட்டு கண்ணீர் வரும்வரை சிரித்தாள். மனம் கொஞ்சம் லேசாகியது. அவன் அவமானப்பட்டு கண்கலங்கி நின்றது இப்ப நினைச்சாலும் நல்லாத்தானே இருக்கு.

"ரம்யா இங்கை கொஞ்சம் வந்திட்டுப் போவன். வாஷ்ரூம் போக வேணும். தனிய போகேலாமல் இருக்குது. உன்ரை கிளாஸ்மேட் வாறதெண்டு சொன்னியே. வரேல்லையோ? என்னையும் ஹோல்லை இருத்திவிடன். யாரெண்டு பாப்பம்"

அவள் அவரை வெறுமையாகப் பார்த்தாள். புரிந்து கொண்டிருப்பார். பேசாமல் கட்டிலில் சாய்ந்து கொண்டார்.

"கதவைப் பூட்டாதை ரம்யா. பிறகு நான் கூப்பிட்டாலும் உனக்கு காதிலை விழாது"

அவள் அதையும் காதில் விழுத்திக் கொள்ளாமல் கதவைச் சாத்திய நேரம் அழைப்புமணி மீண்டும். நேரம் சரியாக மதியம் ஒரு மணி.கதவைத் திறந்தாள்.



BMW கார் வாசலில் நின்றது. ஓட்டுனருக்குப் பக்கத்து ஆசனத்தில் இருந்து இறங்கியவரைப் பார்த்து விழிகள் விரிந்தாள். நேர்த்தியான உடையுடன், இளமை மாறாத கம்பீரமான அந்த உருவத்தைப் பார்த்து அவள் மௌனத்தில் உறைந்தாள்.

மனதில் விவரிக்க முடியாத ஆதங்கம் தலை விரித்தாடியது.

அவனா இவன் ?

இல்லையில்லை இவர்.

"Hi Ramya, I'm so pleased to see you. It's been decades ..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியப்பை முகத்தில் காண்பித்து தோள்களைக் குலுக்கி, பளீரென்ற வரிசைப் பற்களால் சிரித்தார். அவளுக்கு பேச்சு வரவில்லை. மீண்டும் மென்மையாகப் புன்னகைத்துக் கேட்டார்.

"May I come in Ramya ? வாசல்லையே திருப்பி அனுப்பி விடுவீரோ ?"

"வாங்கோ....."

பிரமையில் இருந்து நீங்கினாள். பெயர் சொல்லி அழைக்க முடியாதபடி அவரது கம்பீரம் தடுத்தது. ஆங்கிலத்தில் தொடர்ந்தார்.

"நான் முன்பு அடிக்கடி இலங்கை வருவதுண்டு. கடந்த பத்து வருடங்களாக வர முடியாமல் போய்விட்டது. ஒவ்வொரு முறை இலங்கை வரும் போதும் உம்மைப் பார்க்க வேண்டுமென்று நினைப்பேன். ஆனால் வரமுடியாதபடி ஏதோ ஒன்று தடுக்கும்:.

பேசுவதை நிறுத்தி அவளது உணர்வுகளை உள்வாங்கி நனவிடை தோய்ந்தார்.

அந்த "ஏதோ ஒன்று" கடந்தகாலத்தின் கசப்பான சொந்த நினைவுகளா அன்றி நிகழ்கால நிகழ்வுகளா என அவளும் யோசித்தாள்.

"போனகிழமை உமது நண்பி சித்ராவை ஊரில் கண்டேன். உமது கணவருக்கு சுகமில்லை என்று சொன்னா. அதுதான் இம்முறை வர வேண்டுமென்று விரும்பினேன். அவதான் உம்முடைய மொபைல் நம்பரும் தந்தா. ஆனால் நீண்ட காலமாக நீர் தொடர்பில் இல்லையென்றும் கூறினா...".

பதில் ஏதும் பேசாதிருந்தாள்.

அவளது மனம் எரிமலையாய் தகித்துக் குமுறியது. குத்திக் காட்டுகிறாரா?

பழிவாங்குகிறாரா? இவ்வளவு நாள் வராதவர் இன்று ஏன் வந்தார். புரியவில்லை. தனது காதலை அன்று நிராகரித்து அவமானப் படுத்தியதை ஞாபகப் படுத்தவென்றே வந்தாரா?

பாவனையில் இருந்து எதையும் அவளால் அறிய முடியவில்லை.

"எப்படி இருக்கிறீர் ரம்யா? ஹஸ்பன்ட் எங்கே...? காணவில்லையே?"

அவள் கவனிக்காதது போன்ற பாவனையில் இருந்தாள். மனதில் ஆழமான வெடிப்புகளின் ஊடே இரத்தம் கசிந்து கொண்டிருந்ததை அவர் அறிய மாட்டார்.

மீண்டும் கேட்பது நாகரிகமில்லை என்பது அவருக்குத் தெரியும். தனது வருகை தந்த பாதிப்பை மனதில் எடை போட்டவராக அழுத்தமாகவே இருந்தார்.

சிறிது மௌனம் சாதித்தவர், பொன்னிற அலங்காரக் கடதாசியில் சுற்றப்பட்ட சிறு பரிசுப் பொதியொன்றை அவள் முன்னே வைத்தார். என்னவாக இருக்கும்?

அன்று உதயன் தனிமையில் தயங்கித் தயங்கி மஞ்சள் பேப்பரில் சுற்றி பரிசாகத் தந்த சிறிய முத்துமாலையை, அவன் கண்முன்னேயே காலில் போட்டு மிதித்து சிதற வைத்ததை நினைத்தாள். கதிகலங்கிப் போன அவன் செம்பாட்டு மண்ணில் உருண்டோடிய அந்த வெண்முத்துக்களைக் கூம்பிய முகத்துடன் பொறுக்கிப் பத்திரப் படுத்தியதை எத்தனை ஆணவத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இன்றைய அவளது மனநிலை அதற்கு முற்றிலும் மாறானதாக இருந்தது. அக்கணத்தில், அன்று உதயன் அவள் மேல் கொண்டிருந்த காதல் பற்றியும், அவளது அந்நாள் சௌந்தர்யம் பற்றியும் இப்போது அவர் நினைவூட்ட வேண்டும் என்ற விநோதமான பேரவா அவள் மனதில் ஏக்கமாய் குடி கொண்டது.

இன்று அந்த நினைவூட்டல் தன்னைப் பெருமிதப் படுத்தும், சோர்ந்திருக்கும் தன்னை சற்றேனும் உயிர்ப்பிக்கும் என்று நிச்சயமாக நம்பினாள். காலமும் சூழ்நிலையும் மனிதமனங்களின் அத்திவாரத்தையே அசைத்து எத்தனை மாற்றங்களைத் தருகின்றன?

அவர் நிமிர்ந்து அவளது கண்களைப் பார்த்தார். ஆர்வமானாள். என்ன சொல்லப் போகிறார்?

"நாளை மீண்டும் லண்டன் செல்கிறேன். இரண்டு கிழமைதான் லீவு. நான் CEO வாக பணிபுரியும் NHS TRUST இல் இருந்து வேறோன்றில் பதவியேற்கிறேன். அதற்கு முதல், கிடைத்த லீவில் அவசர வேலையாக வந்தேன்".

பக்கவாட்டில் திரும்பியவரின் கண்களில் ரம்யாவின் இளமைக்கால படம் ஒன்று கவனத்தை ஈர்த்தது. காலத்தால் மங்கியிருந்தாலும் ரம்மியமான அவள் அழகு இன்றும் துலாம் பரமாகவே தெரிந்தது. ஒரு நிமிடம் கண்களைமூடி பழைய நினைவுகளை மீட்டவராக, அர்த்தம் பொதிந்த பார்வையினை அவள் பக்கம் வீசியவர் தொடர்ந்தார்.

"உமது கணவர் பிள்ளைகளை பார்க்க ஆசைப்பட்டேன். கிடைக்கவில்லை. சரி பரவாயில்லை. எனது குடும்பப் படத்தையாவது உமக்குக் காட்ட விரும்புகிறேன். பார்க்கிறீரா?"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்''.... அரைமனதோடு அவளின் சம்மதம்.

கையில் இருந்த பிரீவ்கேசில் இருந்து ஒரு சிறிய அல்பத்தை வெளியில் எடுத்தார்.

"என்னுடைய மனைவி அபிராமி. கன்சல்டன் காடியோலொஜிஸ்ட் ஆகப் பணி புரிகிறார். இரண்டு பிள்ளைகள். அவர்களும் டாக்டர்கள் தான்."

பெருமிதத்துடன் நீட்டினார். வேண்டா வெறுப்பாய் திறந்தாள்.

அவர்களது திருமணப் படங்களும் குடும்பப் படங்களும்.

அவரது இளமைத் தோற்றத்திற்கேற்ற நாகரிக மனைவி. தலைமயிரைக் குட்டையாக வெட்டியிருந்தாள். அது அவளது அழகுக்கு கம்பீரத்தை இணைத்திருந்தது. வளர்ந்த பிள்ளைகள். பட்டமளிப்பு விழாவில் எடுத்தது. அழகர்கள்.

இப்போது அவளது மனம் மட்டுமல்ல முகமும் இருண்டே இருந்தது. நல்ல வேளை மகன்மார் வீட்டில் இல்லை. உள்ளுக்குள் உடைந்து வெளியே வரத் துடிக்கும் கண்ணீரை கண்களை அகல விரித்து உள்ளீர்க்க முயன்றாள். அது தெரியாமல் மறைக்க முயல்வதும் அவருக்குத் தெரிந்தே இருக்கும் என்பதால் ....

"இருங்கோ. குடிப்பதற்கு ஏதாவது எடுத்து வருகிறேன்''.

அவசரமாக எழுந்து சென்றாள். அந்த இடைவெளியில் உதயன் அவளது இளமைக் கால படத்தை தன் மொபைலில் சிறைப்படுத்திக் கொண்டார். அவரது சந்திப்பின் அனைத்து நோக்கங்களும் இப்போது நிறைவுக்கு வந்திருந்தன.

"ம்..... கோப்பி மிக அருமையாக இருந்தது. நன்றி. நான் அதிக நேரம் இருக்க முடியாது ரம்யா. நண்பர் ஒருவரையும் சந்திக்க வேண்டும்''. மனதினை ஈர்க்கும் வகையில் புன்னகைத்தார்.

அவளது உணர்வுகளைப் படிப்பது போல கண்களை மீண்டும் நேராகப் பார்த்து அதே மென்னகையுடன் விடைபெற்றார்.

"அந்தப் பரிசுப் பொதியைத் திறந்தால், உடைந்து போய் விடுவேனோ'' எனும் ஐயம் இப்போது அவள் உள்ளம் எங்கும் வியாபித்தது.

OOO

# மாரி காலம்

பாலைவனம் எனத்துவண்ட சில
பாறைநில வனங்கள் இன்று,
பாலும் தேனும் பொழியும்
ஆநிரைகள் உலாவும்
ஆயர்களும் மகிழும்
ஆனந்தத்தின் களமே....
கயம் இல்லாக் கிராமத்தில்
கண்ணயரா உழவன்
கார்முகிலை வேண்டி
காத்திருந்து உழுவான்
காலமழை கண்டே அவன்
கண்மலர்ந்தான் இன்றே
வாடைக் காற்றும் வீசும் - நீல
வானமெங்கும் கறுக்கும்
நீர் நிலைகள் தேடி - மிக
நீண்ட தூரம் பறந்தே
கூழைக்கடாய் முதலாய் - பல
பட்சியினம் இங்கு இடம்பெயரும்
சேற்றுத் தண்ணீர் சேரும் - சிறு
சேற்றுக் குட்டை நாடி
காத்திருந்த ஆமை - சிறு
கண்மலர்ந்தே அங்கு வந்து சேரும்
மும்மாரி பொழியாமல் - இங்கு
முச்சாணும் இயங்காது காணீர்
மண்ணுயிர் முற்றும் மகிழும் - இங்கு
மாரி என்ற காலம் வந்து சேரும்

**யே. கிறித்துறாஜா,**
**2ம் வருடம், தமிழ்த்துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன். அவன் ஆரம்பம், வாழ்வு பற்றிய சில சிந்தனைகள்


இந்தோ ஐரோப்பிய மொழிகளில் முதன்மை பெற்றுத் திகழ்ந்த லத்தின் மொழியில் உள்ள HUMOR என்னும் சொல்லுக்கு 'ஈரம்' என்று பொருள். ஆங்கில மொழியில் இது MOISTURE எனப்படும். இச்சொல் HUMUS (மண், தரை) என்றும் லத்தின் மொழியில் வழங்கும் அதேவேளை, MOIST அல்லது WET (இச் சொல் WATER என்னும் ஆங்கிலச் சொல்லின் வேர்ச் சொல்லாகும்) என்னும் பொருளோடு HUMEO எனவும் லத்தின் மொழியில் வழங்கும். மேலும், இச்சொல் HUMENS ENTIS என்று அதே பொருளுடன் திகழும்.

இதிலிருந்து மனிதன் என்னும் கருத்தினை உடைய HUMAN என்னும் ஆங்கிலச் சொல் மனிதன் என்பவன் 'நீரோடு கலந்தவன்' என்னும் பொருளைக் கொண்ட HUMEO என்னும் லத்தின் சொல்லோடு மட்டுமன்றி MOIST அல்லது WET என்னும் ஆங்கிலச் சொல்லோடும் கருத்தில் (MEANING) கலந்திருப்பதையும் புரிந்து கொள்ளலாம். இயல்பாகக் காணக்கூடிய இம் மொழி உறவு அனைத்து உயிர்களுக்கும் தண்ணீரே முதல் காரணி (WATER WAS THE FIRST PRINCIPLE OF ALL THINGS) என்னும் கிரேக்கத்து மெய்யியலாளரும் (PHILOSOPHER) விஞ்ஞானியுமான (SCIENTIST) தாலஸின் (THALAS-546 BC) ஆழமான கருத்தை அப்படியே வெளிப்படுத்தும்.

மனித இனம் என்பது ஆங்கில மொழியில் HUMAN RACE என்று சொல்லப்படுவதுபோல் HUMANISM (மனிதாபிமானம்) HUMAN BEING (மனித உயிர்) என்றெல்லாம் வழங்குவதிலிருந்து அச் சொற்கள் மட்டுமன்றி தாலஸின் சிந்தனையும் (POWER OF THINKING) அவற்றோடு இணைந்து இன்றும் வாழக் காண்கின்றோம். இதுபோல் மனிதனைக் குறிக்கும் HUMAN என்னும் ஆங்கிலச் சொல்லும் மனிதனின் தோற்றம் நீரோடு சம்பந்தமுடையது என்பதனையும் நினைவூட்டும். மேற்படி சொற்களிலிருந்து MAN என்னும் சொல் பிரித்துக் கூறப்பட்டாலும் அச் சொல் ஆங்கில அகராதியில் HUMAN என்று இணைக்கப்பட்டதிலிருந்து அதில் அடங்கியுள்ள HUMOR அல்லது HUMUS என்னும் லத்தின் சொற்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்வோர் தற்காலத்தில் கற்றவரி டையேயும் இல்லாமை பெரும் குறைபாடாகும்.

"அனைத்து உயிர்களுக்கும் தண்ணீரே முதல் காரணி" என்னும் தாலஸின் கோட்பாட்டைத் "திரளான உயிர்களைத் தண்ணீர் தோற்றுவிப்பாயாக" என கிறிஸ்தவர்களின் 'பழைய ஏற்பாடு' (தொடக்க நூல் - பக்கம் 1) வெளிப்படுத்துவது போன்று பாரதநாட்டின் இரண்டாவது இதிகாசமான மகாபாரதத்தின், ஆரம்பத்திலே இடம்பெற்றுள்ள கங்கா (கங்கை) தேவி (இது பூமாதேவி என்னும் பெயர் போன்றது) சந்தன மகாராசா, சத்தியவதி (மீனவப் பெண்) ஆகியோர் பற்றிய கதைகளையும் நாம் கவனத்தில் கொள்வோமாயின் ஆதிகாலத்தில் மக்கள் நீரோடு (குறிப்பாகக் கடலோடு) கலந்திருந்தமையை எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

மனிதனின் 'ஆரம்ப நிலை' பற்றி கிறிஸ்தவர்களின் 'பழைய ஏற்பாடு' குறிப்பிட்டுள்ளது போன்று அதன்பின் உருவான 'புதிய ஏற்பாடு' (மாற்கு 6ஆம் அதிகாரம், வசனம் 49) யேசுகிறிஸ்து கடல் மீது நடந்தது பற்றியும் கூறும். இதுவும் மகாபாரதத்தின் கங்காதேவியின் செயல்பாட்டை ஒத்தது எனலாம்.



மேற்படி விடயங்கள் சமயம் சம்பந்தப்பட்ட பண்டைய நூல்களில் இடம்பெற்றிருப்பினும் உயிர்களின் மூலமாக (SOURCE) நீர் இருப்பதை முதலில் கடலில் உருவான 'அமீபா' என்னும் உயிரி னமும் அதனைத் தொடர்ந்து

**வாகரைவாணன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிய வேறுபல உயிரினங்களும் வெளிப் படுத்தியுள்ளமையை அறிவியல் பூர்வமான ஆய்வுகள் உறுதி செய்யும்.

மகாபாரதக் கதைகள் போன்று கி.பி 2ஆம் நூற்றாண்டில் தமிழில் உருவான 'வாயு' புராணம் உட்பட ஏனைய புராணக் கதைகளிலும் இடம் பெற்றுள்ள நான்முகன், சரஸ்வதி, திருமால், லட்சுமி ஆகிய தேவகணங்கள் நீரில் 'வாசம்' செய்வது போல மாரி அம்மன், கருமாரி, வருண பகவான், அலைமகள் முதலான தெய்வங்களும் நீரோடு பின்னிப் பிணைந்திருப்பதாகக் கூறும் புராணக் கதைகளும் உலகின் அடித்தளமாக நீர் (எழுபத்தொரு வீதம்) இருப்பதை நமக்கு நினைவூட்டும்.

தண்ணீருக்குத் தாலஸ் பெரும் முக்கியத் துவம் தந்தாலும் அதிலிருந்து பெரிதும் வேறுபட்ட தொல்காப்பியர் (கி.மு.3ஆம் நூற்றாண்டு)

**நிலம் நீர்வளி விசும்போடைந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின் மரபியல்**

என்று உலகம் பற்றிக் கூறக் காண்கிறோம்.

தொல்காப்பியத்தின் மேற்படி கருத்தினை 'புறநானூறு' என்னும் சங்க இலக்கியமும், (பாடல் 2)

**மண் திணிந்த நிலனும் நிலம் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும் வளித்தலை இயதீயும்**
**தீ முரளிய நீரும் என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை**

என்று சற்று விரிவாகக் கூறி இயற்கையை ஏத்திப் போற்றும்.

இதுபோன்று கி.பி. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததென்று சொல்லப்படுவதும் தமிழில் எழுந்த முதல் காவியமுமான சிலப்பதிகாரத்தின் மங்கல வாழ்த்துப் பாடலில் இடம்பெற்றுள்ள "திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும், மாமழை போற்றுதும்" என்பவையும் அன்றையச் சங்க காலத் தமிழர் இயற்கையை வழிபட்ட மைக்கான தக்க சான்றுகளாகும்.

இயற்கை மீது சங்க காலத் தமிழருக்கு ஈடில்லாப் பற்றும் மரியாதையும் இருந்ததால்தான் அதற்கு நிகரான கடவுள் என ஒன்றை முற்றாகக் கைவிட்டனர். இதனைப் புற நானூற்றில் இடம்பெற்றுள்ள,

**ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி**
**ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்தெனக்**
**கல்லே பரவின் அல்லது**
**நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே**

என்னும் பாடல் (335) தெளிவாகக் கூறும்.

ஆதி மனிதன் மண்ணால் ஆனவன் என்று 'பழைய ஏற்பாடு' சொல்லும், (தொடக்க நூல் - 2) இதனை 'மண' எனும் பொருளைக் கொண்ட 'ஆதாமா' என்னும் எபிரேயச் சொல் உணர்த்தும். இம் மண்ணாலேயே ஆதிமனிதனை ஆண்டவன் படைத்தான் என்று அதே பழைய ஏற்பாடு பகரும். 'ஆதாமா' என்னும் சொல்லே 'ஆதாம்' (ADAM) எனத் திரிந்து வழங்கும். ஆயினும் இச் சொல்லுக்கு (ஆதாமா) கீபுறு (HEBREW) மொழியில் MAN (மனிதன்) என்ற பொருளும் இருப்பதாகவே ஆங்கில அகராதி கூறும்.

'மண்ணால் மனிதன் உருவாக்கப்பட்டவன்' என்னும் கருதுகோள் ஏற்கக்கூடியது என்பதை அவன் இறந்த பின் உடல் மண்ணோடு சங்கம மாதல் எடுத்துக்காட்டும். இதனை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் வாழ்ந்த திருவள்ளுவரின் திருக்குறளும் "மண்புக்கு மாய்வது மன்" (ஒழிபு இயல், பண்பு உடைமை) என்று மனிதனின் உடல் மண்ணோடு கலப்பதை உறுதியாகக் கூறும். மனிதனின் இந்தக் குறுகிய கால வாழ்வை கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் தமது இளம் வயதிலேயே "ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே அவன் ஆடி அடங்குவது மண்ணுக்குள்ளே" (திரைப்படம் - தங்கப் பதுமை) என்று எதுகை மோனையுடன் அழகாகச் சொல்லி இருப்பதை நாம் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. பெண்ணுக்கு வாழ்க்கையில் இருக்கும் பெரும் பங்கையும் அப்பாடல் வெளிப்படுத்தும்.

"குரங்கில் இருந்து பிறந்தவன் மனிதன், கொம்பேறித் தாவும் குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்" என்னும் திரைப்படப்பாடலுக்கான கோட்பாட்டின் சொந்தக்காரரும் சிந்தனை யாளருமான டார்வின் (DARWIN, ENGLISH SCIENTIST: 1809 - 1802) "அறிவிக்கை" ஒருகாலம் கொடி கட்டிப் பறந்தது. இதனை ஏற்றுக் கொள்ளும் விதத்தில் பல்வேறு ஆக்கங்கள் நூல்கள் வெளியாயின. ஆயினும் அக் கோட்பாட்டைக் கைவிடவேண்டிய எண்ணம் மக்களிடையே எழுந்ததால் அது "அகால மரணம்" அடையலாயிற்று.

**(தொடர்ச்சி பக்கம் 54)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாட்சப் நண்பர்

‘முதுமை எய்துவது குற்றமா?’ என்ற புத்தக வெளியீட்டுக்கான அழைப்பிதழ்களை அனுப்பிக் கொண்டிருந்தேன். முதியோர் தொடர்பான புத்தகம் என்பதால், தமிழ் மூத்த பிரசைகள் சங்கத்திலிருந்து முதியவர்கள் பலர் வர விரும்புவதாக அறிவித்திருந்தார்கள்.

“உங்கள் வாட்சப் நண்பருக்குச் சொல்லி விட்டீர்களா?” மனைவி ஞாபகப்படுத்தினார்.

“இந்தத் தடவை அவருக்குத்தான் முதல் அழைப்பிதழ் அனுப்பியிருக்கின்றேன். ஆவலோடு விழாவை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகச் சொன்னார்.” என்றேன் நான்.

கதிர்காமநாதன் எனது சமீபத்திய வாட்சப் நண்பர். மாலை வேளைகளில் எனது பாதி நேரத்தை அவர் விழுங்கிவிடுவதாக மனைவி முறைப்பாடும் செய்வார்.

தினமும் மாலை வேளைகளில் குறைந்தது ஒரு தடவையாவது கதைத்து விடுவார். பெரும்பாலும் எமது உரையாடல் இலக்கியம் சம்பந்தமாகவே இருக்கும். இவ்வளவு விடயங்களை அறிந்து வைத்திருக்கின்றாரே என வியக்க வைக்கும் கணீரென்ற காந்தக்குரல். தொடர்ந்து எவ்வளவு நேரமும் பேசிக் கொண்டே இருக்கலாம்.

ஸ்ரைல் கண்ணாடி அணிந்து, கன்னக்கிராதி குறுந்தாடியுடன் புன்னகை தரும் வாட்சப் ப்ரொபைல் படம், குறைந்தது என்னைவிட பத்து வயதுகளாவது குறைவாகவே இருப்பார் என்று சொல்கின்றது. அடிக்கடி ப்ரொபைல் படத்தை மாற்றிக் கொள்வார். எல்லாமே இளமை ததும்பும் படங்கள். இருவருமே விரைவில் நேருக்கு நேர் சந்தித்துக் கொள்ளப்போகின்றோம்.

• • • • •

புத்தக வெளியீட்டுவிழா பெருந்திரளான பார்வையாளர்கள் மத்தியில் இனிதாக நடந்து முடிந்தது. மூத்த பிரசைகள் அமைப்பிலிருந்து, வாகனம் ஒன்றை ஒழுங்கு செய்து முப்பது பேர்கள்மட்டில் வந்திருந்தார்கள். அவர்களது அமைப்பில் சில தடவைகள் நான் பேசி இருக்கின்றேன். அவர்கள் மிகவும் மகிழ்ச்சியாகவும் கலகலப்பாகவும் காணப் பட்டார்கள். ஒவ்வொருத்தருக்கும் புத்தகத்தில் கையொப்பமிட்டுக் குடுத்தேன். புகைப்படமும் எடுத்துக் கொண்டார்கள்.

“எப்படி இருக்கின்றீர்கள்?”

“நாங்கள் நல்ல சுகமாக இருக்கின்றோம்.” தள்ளாத வயதிலும் நேர்மறையாகப் பதில் சொன்னார்கள்.

“உங்கள் வாட்ஸ் அப் நண்பர் வர வில்லையே!” என விழா முடிந்த நேரத்திலிருந்து மனைவி சீண்டியபடி இருந்தார்.

“நேற்றுக்கூட உங்கள் நண்பர் வாட்ஸ் அப் செய்யவில்லையே!”

“ஏதாவது சுகமில்லாமல் இருக்கலாம்.” சமாதானம் சொன்னேன்.

“விட்டுக் குடுக்க மாட்டீர்களே!”

• • • • •

மூன்றாம் நாள் - விழாவிற்கு வந்தவர் களிடமும் வராதவர்களிடமும் தொலைபேசி மூலம் உரையாட நினைத்தேன். ‘வாட்சப் நண்பருடன் ஆரம்பிக்கலாம்’ என நினைத்து கதிர்காமநாதனுடன் தொடர்பு கொண்டேன்.


“எப்படி இருக்கின்றீர்கள் கதிர்காமநாதன்?”

“நன்றாக இருக்கின்றேன். நேற்றே உங்களுடன் பேசலாம் என்றிருந்தேன். ஆனால் நீங்கள் மிகவும் களைத்துப் போய் இருப்பீர்கள் என நினைத்து இரண்டு நாட்கள் கழித்து எடுக்கலாம் என்று இருந்தேன்.”

“ஏன் புத்தக வெளியீட்டுவிழாவிற்கு வரவில்லை? உங்களை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்தேன்.”

மறுமுனையில் சிறிது நேரம் சத்தமில்லை. பேசுவதற்கு தயங்குவது போல் இருந்தது.

“வந்திருந்தேனே! புத்தகத்தில் கையொப் பமும் வாங்கி, உங்களுடன் புகைப்படமும் எடுத்தேனே!”



இந்தத் தடவை எனது பக்கத்தில் மௌனம். நிலைமையைச் சுமுகமாக்கி உண்மையை அறிய உரையாடலைத் திசை திருப்பினேன்.

“உங்கள் அலு மாரியில் நிறையப்

**கே.எஸ்.சுதாகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்கள் வைத்திருப்பதாக முன்பொருநாள் சொன்னீர்கள் அல்லவா? அதை ஒருதடவை பார்க்கலாமா?"

"பொறுங்கள் ரெலிபோனில் உள்ள கமராவை ஆன் செய்து கொண்டு வீடியோக் கோலில் வருகின்றேன்."

நண்பர் எனது மனநிலையைக் கச்சிதமாகப் புரிந்து கொண்டார். இருவரும் ரெலிபோனில் உள்ள கமராக்களை முடுக்கிவிட்டோம்.

கன்னக்கிராதி குறுந்தாடி இருந்த இடங்களி லெல்லாம் சுருக்கங்கள் கூடுகட்டி, உட்குழிந்த கண்களுடன் நரை கூடிக் கிழப்பருவமெய்தும் தோற்றத்தில் கதிர்காமநாதன் இருந்தார். சிரித்தபோது பல பற்கள் ஓடி ஒளித்துக்கொண்டன. ஆச்சரியம் என் உச்சந்தலையில் அடிக்க, அடித்த இடத்தில் ஒரு சுற்றுச் சுற்றியது.

"தயவு செய்து குறை நினைக்காதீர்கள். உங்கள் வாட்சப் ப்ரொபைலில் இருப்பது யார்?"

"அதுவும் நான் தான். ஆனா இருபத் தைஞ்சு வருஷங்களுக்கு முன்னால் எடுத்த புகைப்படங்கள் அவை."

"அப்படியென்றால் முதுமை எய்துவது குற்றமா?"

மறுமுனையில் பலத்த சிரிப்பொலி விட்டு விட்டுக் கேட்டது. சிரிப்பு அடங்க சில நிமிடங் கள் ஆயிற்று.

"உடல் முதுமையாக இருந்தாலும், மனம் இளமையாக இருக்க வேண்டுமல்லவா! அதுதான்."

அவரது கருத்தை நான் ஆமோதித்தேன். கதிர்காமநாதன் முதியவர்களுடன் ஒருவராக புத்தக வெளியீட்டுவிழாவிற்கு வந்து போயிருக் கின்றார்.

அன்று இரவு முழுவதும் என்னால் உறங்க முடியவில்லை. விழாவில் நான் எல்லோரிடமும் கேட்ட, 'எப்படி இருக்கின்றீர்கள்?' என்ற அந்த ஒற்றைக்கேள்வி எனது வாட்சப் நண்பரின் மனத்தை என்ன பாடுபடுத்தியிருக்கும். அவர் எப்படிச் சங்கடப்பட்டிருப்பார். ஒவ்வொரு நாளும் நெடுநேரம் உரையாடும் அவர், அன்று என்னைப்பற்றி என்ன நினைத்திருப்பார்.

"ஏன் அவர் கூட தன்னை அறிமுகப் படுத்தியிருக்கலாம் அல்லவா?" என்னுடைய மனவாட்டத்தைப் போக்க, மனைவி எனக்கு ஆறுதல் சொன்னார்.

OOO

---

**(பக்கம் 52இன் தொடர்ச்சி...)**

எனினும் வெளித் தோற்றத்திலும் செயற் பாடுகளிலும் மனிதனுக்கும் குரங்குக்குமிடையே உள்ள "ஒருமைப்பாடு" தொடர்ந்து ஆராயப்பட வேண்டியது என்பதற்கு அனுமான் (குரங்கின் வடிவம்) "கடவுளாக" வழிபடப்படுதல் ஒரு தக்க காரணமாகும்.

நூற்றி நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் தமது ஆழமான கவித்துவத்தால் தலை நிமிர்ந்து நின்ற மகாகவி பாரதிக்கு இயற்கை மீது பெரும் பற்று இருந்தமையை "சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவோம்" "வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம்" 'பாஞ்சாலி சபதம்' என்னும் காவியத்தில் இடம்பெற்றுள்ள "மாலைவருணனை", "குயில்பாட்டு" என்பன அழகுற எடுத்துக் காட்டும். பாரதிக்கு விண்ணுலகில் (மோட்சம் அல்ல) இருந்த ஈடுபாட்டிற்கு இத்தாலி நாட்டின் கலிலியோ (GALILEO : 1564 – 1642, AN ASTRONMER) அதே விண்ணுலகில் மேற்கொண்ட CELESTIAL ஆய்வும் ஒரு வழிகாட்டியாக இருந்திருக்கலாம்.

மகாகவி பாரதியின் வழியில் கவிதை புனைந்து மக்களிடம் இருந்து பெரும் பாராட்டைப் பெற்றவர் கவியரசு கண்ணதாசன் அவர்கள். "பாவ மன்னிப்பு" என்னும் திரைப்படத்திற்கு அவர் எழுதிய பாடல் ஒன்றில் இடம்பெற்றுள்ள 'அந்த நாள் முதல் இந்த நாள் வரை வானம் மாறவில்லை' என்னும் ஆழ்ந்த கருத்து இயற்கையில் அவருக்கிருந்த ஈடுபாட்டை எடுத்துக் காட்டும். அதேநேரம் இயற்கை என்றும் மாறாமல் நீல வானமாக நிகரின்றி இயங்கும் போது "மனிதன் மாறிவிட்டான்" என்னும் கவிஞரின் யதார்த்தத்தையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

இயற்கையில் ஆய்வாளர்களுக்கு மட்டுமன்றி எல்லோருக்கும் ஒருவித "நயத்தல்" அல்லது 'பிடிப்பு' இருக்கவே செய்யும். அந்த "நயத்தல" அல்லது 'பிடிப்பு' தான் தாலஸ், கலிலியோ, டார்வின், மகாகவி பாரதி, கவிஞர் கண்ணதாசன் முதலியோரை இயக்கியது போன்று நம்மையும் "காந்தம்" போல் இழுத்து இயக்கிக் கொண்டிருக்கிறது. அதனை நாம் மனமாரப் போற்றுவோம், வாழ்த்துவோம், 'கடவுள்' என்றும் கைகுவிப்போம்.

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'மெஜிக்கல் ரியலிச' சிறுகதை

# காலப் பயணம்...

எனது சிறுவயது முதலே அம்புலிமாமாவை பார்த்துப்பார்த்து நான் வியந்துள்ளேன். அது எப்படி அந்தரத்தில் நிற்கின்றது... எப்படி வானில் உலாவருகின்றது... அதன் தோற்றம் ....இருப்பு, ஒளி என்பன பற்றியெல்லாம் சிந்திப்பேன்... பூமியை ஒத்த கோள்கள் சூரியனை சுற்றி வருவது... நிலவை ஒத்த உபகோள்கள் தத்தம் கோள்களுக்கு கட்டுப்பட்டு அவற்றை சுற்றிவருவது. அவை எடுக்கும் காலங்கள் பற்றியெல்லாம் சிந்திக்கும்போது ஆச்சரியமாக இருந்தது....!

நாளா வட்டத்தில் சூரியனை ஒத்த பலகோடி நட்சத்திரங்கள்... கோள்கள்... உபகோள்கள்... பால்வெளிகள் என பலதும் நிறைந்த எல்லையற்ற பிரபஞ்சம் எனக்கு மலைப்பை உண்டு பண்ணியது!

எனது அப்பா பெரிதாக வெண்முடி வளர்த்திருப்பார்.... வெண்தாடி... நெற்றியில் அப்பிய திருநீற்றுப் பூச்சு...!

பிரித்தானியர்களின் ஆட்சிக்காலத்தில் அவர் கிராம விதானையாராக செல்வாக்குடன் வாழ்ந்துகொண்டிருந்தார். மாலையானதும் அவரது நண்பர்கள் பலர் வந்து கூடுவர். எங்கள் நாற்சாரம் வீட்டிற்கு முன்னால் ஓலையினாலான ஒரு தலைவாசல்தான் அவருக்கும் நண்பர்களுக்கும் உரித்தானதாக இருந்தது. அம்மா அப்பாவிற்கு பயந்து ஒதுங்கி வாழ்வார்... எனது அழகான நிறமான அக்கா, தம்பிமார் இருவர்... தங்கை ஒருத்தி நாற்சார வீட்டை விட்டு வெளியே வரமாட்டார்கள். நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக ஓடி விளையாடுவோம்.



கலாபூசணம்
வீ.என்.சந்திரகாந்தி

மாலையானதும் தலைவாசல் சூடு பிடிக்கும். நண்பர்கள் கூடினால் தென்னோலையில் ஒரு சுருளை சுற்றி அதற்குள் சில கஞ்சா சருகுகளை திணித்து அக்கினி மூலம் புகைமூட்டுவர். அச்சுருளை ஒருவர் மாறி ஒருவர் இழுத்து கண்களை இறுக மூடி தியானம் செய்வது போல பாவனை செய்வார்கள். மீண்டும் சுருள் கைமாறும்..

இராமகிருஷ்ண பரமஹம்சரின் வரலாற்றை படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தபோது அவர் நிஷ்டையிலிருந்து சிறிது நேரம் விழிப்பு நிலைக்கு வருவதற்கு கஞ்சா சுருட்டை புகைப்பதை தெரிந்துகொண்டேன்! அக்காலத்தில் அபின் என்று ஒரு போதைவஸ்து இருந்தது. அதை ஓப்பியம் என்றும் சொல்வார்கள். அது ஒரு கறுப்பு நிற களி. அக்காலத்திலேயே ஒரு தடித்த பித்தளை ஒரு சத குத்தியின் அபின் நிறை 22ரூபாவாகும். அபின் சீனாவில் உற்பத்தி செய்யப்படுவது. அங்கிருந்து இந்தியாவிற்கு கொண்டுவரப்பட்டு பின்னர் வல்வெட்டித்துறைக்கு கடத்தப்படும். ஒரு புளியங்கொட்டையளவு உருண்டையை வாயில் போட்டு உமிந்தால் சொர்க்கலோகம் தெரியும். எவருக்கும் கெடுதல் செய்யமாட்டார்கள்.

இக்காலத்தில் போல் அல்லாது அக்கால போதைப்பொருள்கள் பிறருக்கு தீங்கை உண்டு பண்ணாதவை!

அப்பாவுடன் நண்பர்கள் இல்லாத நேரம், நான் அவரை அணுகி பிரபஞ்சத்தைப் பற்றி வினாக்கள் தொடுப்பேன். எங்கள் சூரிய குடும்பத்தைப்பற்றியும் நவகோள்கள் பற்றியும் கூறி, அவ்விதம் பல கோடி சூரியன்களும் கோள்களும் நிறைந்தது தான் இப் பிரபஞ்சம் என்றும் அது எல்லை அற்றது என்றும் விளக்குவார்.

வெள்ளைக்காரர்களுக்கு அப்பாவுடன் தொடர்பு உண்டு. அவர்களுக்கு புரியாத புதிர்களுக்கு அப்பா விளக்கம் கூறி ஆச்சரியத்தில் மூழ்கடிப்பார். அக்காலத்தில் தமிழர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சாங்கத்தை கணித்த மதிநுட்பம் ஆச்சரிய மளிப்பது!

எங்களது இரத்த உறவினர்கள் பலரும் அப்பாவின் பலத்தில் எங்களை சுற்றி வாழ்ந்து வந்தார்கள்....

அனைவர்க்கும் பொதுவில் எமது குல தெய்வமான வைரவர் பாரிய வேப்பமரம் ஒன்றின் கீழ் ஒரு ஓலைகுடிசையில் அமர்ந் திருப்பதாக ஒரு ஐதீகம்! அதற்கு அடையாளமாக சிறிய இரும்பினாலான சூலம் ஒரு மேடையில் வைக்கப்பட்டிருந்தது. வருடந்தோறும் முதலாம் மடை எட்டாம் மடை என்று பொங்கல் எடுத்தோம். மற்றும் நாட்களில் சூலத்திற்கு முன்னால் குத்துவிளக்கு வைப்போம்.

மடைவைக்கும் சமயங்களில் அப்பாவுக்கு கலை வரும்! அருள் வாக்கு சொல்வார். மெத்தச் சரியாக இருக்கும்!

அப்படி ஒருநாள் மடைவைக்கும் போது புதிதாக பெரிய சூலம் ஒன்றை பிரதிஷ்டை செய்தார்கள். . சிறுவனான நான் ஒரு மூலையில் கைகட்டி நின்றபடி பார்த்துக்கொண்டிருந்தேன். நான் என்ன நினைக்கின்றேன் என்று மான சீகமாக புரிந்து கொண்ட அப்பா என்னை கைகாட்டி அழைத்தார் அம்மா ஒரு அப்பிராணி. எனது மேல் சட்டையை கழட்டிவிட்டு 'தேவாரம்' பாடு என்று சொன்னார். . நானும் எனக்கு தெரிந்த ஓரிரு தேவாரங்களை பக்தி சிரத்தையுடன் பாடினேன்.

அப்போது அப்பா எனது முதுகில் தட்டி கொடுத்து.... '' அது எனக்கு காவல் '' என்று சொன்னார் 'சின்ன சூலம் இருக்க ஏன் பெரிய சூலம்' என்ற எனது சந்தேகத்திற்கு அது பதிலாக இருந்தது எனக்கு பெரும் ஆச்சரிய மூட்டியது!

எனது மூதாதையர் இறப்பின் பின் வைரவ ருடன் ஐக்கியமாகி அனைத்து உறவினர்களுக்கும் அருள் பாலிப்பதாக நம்பிக்கை! அப்பாவும் காலமாகிவிட்டார்!

நான் சாதாரண தரம் படிக்கும்போது வைரவரின் கொட்டிலுக்குள் இருந்தே வீட்டு பாடங்களை செய்வேன்.

அரிராஜசிங்கத்தின் எண்கணிதத்தை படிக்க கஷ்டப்பட்டேன். ஒருநாள் கனவில் வெறும் மேலுடன் வேட்டியை மடித்துக்கட்டியபடி வந்த கரிய உருவமொன்று... 'கணக்கில் கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் மட்டும்தான் இருக்கும்.... புரிந்துகொள் என்று சொன்னது!

சாதாரண பின்னம் முதல் சரக்கு முதலும் பங்கும் வரை அனைத்திலும் அந்த உண்மையை உணர்ந்தேன்! சாதாரண தரபரீட்சையில் கணக்கு பாடத்தில் விசேட சித்தி கிட்டியது!

அக்காலத்தில் அமானுஷ்ய சக்தி ஒன்று கனவில் வந்து எனக்கு வழி காட்டியமையை நான் தெளிவாக உணர்ந்தேன்!

இப்பிரபஞ்சத்தின் அனைத்துமே முப்பரி மாணத்தில் இருந்தன. நாற்பரிமாணத்தை கற்பனை செய்து பார்க்க முடியதபடி மனித மனம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

எந்த ஒரு படைப்புக்கும் சிருஷ்டி கர்த்தா இருக்கும் போது பிரபஞ்சத்தின் சிருஷ்டிகர்த்தா யாராக இருக்கலாம் என்ற வினாவுக்கு விடையே கிட்டவில்லை!

எந்த பொருளுக்கும் அமைவிடம் இருக்கும் போது பிரபஞ்சத்திற்கு மட்டும் அது வெற்றிட மாக இருந்தது...

வெற்றிடத்திற்கு அமைவிடம் எது ? அதன் எல்லை எது? அதனை மனித மனதால் ஊகிக்க முடியவில்லை... ஒரு எல்லையை வரையறுத்தால் கூட அதற்கு அப்பால்... அப்பால் .... என்று வியாபித்துக் கொண்டே போனது!

பிரபஞ்சத்தின் தோற்றம் தன்மை காலம் பற்றி விஞ்ஞானிகள் ஆராய்ந்து கொண்டே இருந்தார்கள். பிரபஞ்ச இரகசியங்களை எவரிடமும் கேட்டு தெரிந்துகொள்ளவோ புரிந்து கொள்ளவோ முடியாது. அதேபோல் மனிதனின் குறுகிய வயதெல்லையில் நெருங்கிப் போய் பார்க்கவும் முடியாது.

அப்பா 1969ம் ஆண்டு அறுபது வயதில் இறைவனடி சேர்ந்துவிட்டார். அவருக்கு முட்டு வருத்தம் இருந்தது. இரவில் குளிர்காலங்களில் தான் அது அதிகம் தாக்கும். அந்நேரங்களில் அவரது உடல் வியர்க்கும்... மூச்சுவிட அவதிப்படுவார். தனது சால்வையால் காற்றுப்பட வீசுவார். நான் விறாந்தையில் எனது மேசையில் கண்விழித்துப் படித்துக் கொண்டிருப்பேன். அப்பா கஷ்டப்படுவதை பார்க்க முடியாமலிருக்கும்.

ஒரு நாள் அப்படி ஒரு சமயம் நான் சாமமாகியும் படித்துக்கொண்டிருந்தேன். அப்பா என்னை படுக்கும்படி வேண்டினார். நான் அப்படி செய்யவில்லை.

அப்பாவுக்கு தெரியும் படிப்பை காட்டிலும் அவர் படும் வேதனையை பார்த்தே நான் அவருக்கு துணையாக விழித்துக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றேன் என்று. முட்டுக்கான குளிசையை எடுத்ததால் சில மணி நேரத்தில் அப்பாவுக்கு சுகம் வந்தது.

அவருக்கென்று ஒரு கயிற்றுக்கட்டில்தான் இருந்தது. அதில் அமர்ந்தார். நான் எழுந்து சென்று அவரது பாதங்களை வணங்கி ... அப்பா என்னை ஆசீர்வதியுங்கள்' என்று இறைஞ்சினேன். அவர் எனது தோளை தட்டி, ' உனது உயர்தர பரீட்சையில் நீ இரண்டாவது தடவை சித்தி பெறுவாய்... ' என்று வாழ்த்தினார்.

ஆச்சரியம்...! முதல் தடவை நான் இரண்டு பாடங்களில் மட்டுமே சித்திபெற முடிந்தது. இரண்டம் தடவை நல்ல விதமாக நான்கு பாடங்களிலும் சித்தி பெற்று பல்கலைகழக அனுமதியும் பெற்றேன்!

அப்பா இறந்தது எனக்கு பெரும் இழப்புக் களை உண்டு பண்ணியது. ஆனால் ஆச்சரியப் படும் வகையில் அவர் எனது கனவில் வந்து வழிகாட்டினார். அவருக்கும் வைரவருக்கும் இருந்த தொடர்பா அல்லது பிரபஞ்சத்துடன் இருந்த ஏதாவது இணைப்பா அவருக்கு அந்த சக்தியை கொடுத்தது என்ற கேள்வி என்னில் நீடித்துக்கொண்டே இருந்தது....

அப்பா மரணிக்கும் வரை கணினி யுகம் ஆரம்பிக்கவில்லை, ஆனால் அப்பா கனவில் அதன் தோற்றம் உபயோகம் பற்றியெல்லாம் விளக்கினார். அப்பாவுடன் நான் திரை அரங்குகளுக்கு சென்று பார்த்த 'கணவனே கண்கண்ட தெய்வம்' போன்ற படங்களில் வரும் மாயக்கண்ணாடி பற்றி விளக்கி 'புரிந்து கொள்' என்று தெளிவு படுத்தினார்.

விழித்தெழுந்து சிந்திக்கையில் இன்று அதையொத்த சாதனமாக கணினி அறிமுகமாகியிருந்தது. அதனால் நான் மடிக்கணினி ஒன்றை வாங்கி எனது படிப்பிற்காகவும் முன்னேற்றத் திற்காகவும் பயன்படுத்த தொடங்கினேன்

பிரபஞ்சம் பற்றிய எனது பிரச்சனை களையும் சந்தேகங்களையும் தெளிவு படுத்துவதற்காக அப்பா காட்டிய வழி மடிக்கணினியில் விரிந்தது!

1990இல் நாசா உருவாக்கிய 'ஹபிள் வெப் ரெலஸ்கோப்' பற்றி முழுவிபரங் களையும் கணினி மூலம் அறிய முடிந்தது. அந்த சாதனம் பல லட்சம் கிலோ மீற்றர் தொலைவில் விண்ணில் ஒரு சுற்றுவட்ட பாதையில் நிலை நிறுத்தப்பட்டதால் அது 360 பாகையில் பிரபஞ்சத்தை படம் பிடித்து பூமிக்கு இன்றுவரை அனுப்பிக் கொண்டிருக்கின்றது.

நாங்கள் கடந்த காலத்தை பார்ப்பதற்கு ஓரே வழி பலகோடி ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள நட்சத்திரங்களை பார்ப்பதுதான்! அதுவே காலப் பயணம்!

பிரபஞ்சத்தின் கோடிக்கணக்கான ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள நட்சத்திரம் ஒன்றின் ஒளி எம்மை வந்து சேர பல ஒளி ஆண்டுகள் எடுப்பதால் அந்த காலதாமதம் நட்சத்திரத்தின் மிகவும் கடந்த காலத்தை எம்முன் நிறுத்துகின்றது! அந்த நட்சத்திரம் இன்று பல மாற்றங்களிற்கு உட்பட்டிருக்கலாம். சில சமயம் அழிந்து போயிருக்கவும் சந்தர்ப்பமுண்டு!

காலப் பயணத்துக்கு சிறிய உதாரணமாக எமது சூரியனிலிருந்து ஒளி வந்து பூமியை அடைய எட்டு செக்கன்ட் எடுக்கின்றது. அதனால் நாம் அதே அளவு நேரம் சூரியன் முன்னிருந்த நிலையிலேயே அதை காண்கின்றோம்!

பூமியிலிருந்து கோடிக்கணக்கான ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள நட்சத்திரங்கள், கோள்கள், பால்வெளி முதலியவற்றை படம் பிடித்தால் அதில் தெளிவு இருக்காது. அதனால் தான் 'ஹபிள் வெப் ரெலெஸ்கோப்' பல இலட்சம் கிலோ மீற்றர் தொலைவில் ஒரு சுற்றுவட்ட பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.

எனது அப்பா மரணிக்கும் போது எனக்கு வெறுமனே இருபத்திமூன்று வயதுதான். இப்போது 76 வயதாகின்றது. இந்த இடை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் நான் ஒரு நாவலசிரியனாக, சிறுகதை படைப்பாளியாக, வாழ்வியல் அனுபவ கட்டுரை ஆசானாக வளர்ந்து விட்டேன். ஆனாலும் நான் உலகத்தைப் பற்றியும் சமூகத் தைப் பற்றியும் மட்டும் சிந்தித்துக் கொண்டிருக்க வில்லை. பிரபஞ்சம் பற்றி ஆராய்வதே எனது சிந்தனையாக இருந்தது!

ஒரு தனி மனிதனான நானே பிரபஞ்சத்தை பற்றிய ஆய்வில் அக்கறை கொண்டிருந்தால்... உலக விஞ்ஞானிகள் சும்மாவா இருந்திருப் பார்கள்?

பல்லாயிரக்கணக்கான விஞ்ஞானிகளும் பொறியியலாளர்களும் இணைந்து இரவு பகலாக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்கள். நாசாவுக்கு துணையாக மற்றிரு நாடுகளும் கை கொடுத்தன. பல்லாயிரம் கோடி டொலர்கள் செலவு செய்யப் பட்டது. ஹபிளை விட ஆறுமடங்கு பெரிதாக ‘ஜேம்ஸ் வெப் ரெலெஸ்கோப்’ உருவாகியது. ஹபிளில் இருந்த குறைபாடுகள் சீர் செய்யப் பட்டன. 25.12.2021இல் பூமியிலிருந்து 15லட்சம் கி.மீற்றர் தொலைவில் ஒரு சுற்றுவட்ட பாதையில் அது நிலைநிறுத்தப்பட்டது. அதுவும் 360 பாகையை கணிக்ககூடியதாக இருந்தது!

ஜேம்ஸ் வெப் ரெலஸ்கோப் 12 மணி நேரம் செலவு செய்து அனுப்பிய முதல் படமே மிக தெளிவாக பேரண்டத்தின் குழந்தைபருவத்தை படம் பிடித்தது!

பிரபஞ்சம் உருவாகி 1300ஒளி வருடங்கள் ஆகின்றது. ஒளி அங்கிருந்து வந்து சேர எடுக்கும் நேரத்தை சரியாக கணக்கிட்டால் நாம் காலப்பயணம் செய்து பல நட்சத்திரங்களின் பால்ய பருவத்தை ‘ஜேம்ஸ் வெப் ரெலஸ்கோப்’ மூலம் காணலாம்.

ஒளியை விட இப்பிரபஞ்சத்தில் வேகமானது எதுவும் உண்டா என்று கேட்டால் ஆம் என்ற பதில்தான் வருகின்றது. பெரு வெடிப்புக்கு பின்னர் பிரபஞ்சம் வேகமாக விரிவடைந்து கொண்டிருக்கின்து. பிரபஞ்சத்தின் விரிவுதான் ஒளியை விட வேகமானது. இது எமக்கு ஒரு ஆச்சரியம்தான்!

அப்பா கனவுகள் மூலம் ‘காலப்பயணம்’ பற்றி முன்னரே தெளிவுபடுத்தியிருந்தும் அதனை என்னால் சரிவர புரிந்துகொள்ள முடியவில்லை.

என்னுடைய மனம் எதற்காகவேனும் குழப்பம் அடைந்திருந்தால் அப்பா எவ்வகையிலேனும் அதனை தெளிவுபடுத்துவார்.

அன்றும் நான் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தேன். எனது 22 வயதில் அப்பா வாங்கித்தந்த ‘றலி’ துவிச்சக்கரவண்டியையே நான் பாவித்துக்கொண்டிருந்தேன். ஆச்சரியமாக நான் ஒரு இரவுப் பொழுது எனது துவிச்சக்கர வண்டியில் வேகமாக வந்து வீட்டு முற்றத்திற்கு திரும்பவும்.... அப்பா காந்தி என்று எனது பெயரை கூறி அழைப்பது கேட்டது. அப்படித்தான் வழக்கமாக அவர் என்னை அழைப்பார். நான் திரும்பி பார்த்தபோது அப்பாவின் உடல் வியர்த்திருந்தது. அப்பா தனது சால்வையை வீசிக்கொண்டிருந்தார். மூச்சு விடவும் அவதிப் பட்டார். அது எனது பால்ய பருவத்தை நினை வூட்டியது.

அப்பா கனவில் வரும்போது எவ்வகை யிலேனும் தன்னை அடையாளப்படுத்துவார். அப்போது என்னுடன் தெளிவாகவும் பேசுவார்.

அப்பா விளக்கினார்....


**அமரர் செம்பியன் செல்வன் (ஆ. இராஜகோபால்) ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி - 2023**



(அனுசரணை : செம்பியன் செல்வன் குடும்பத்தினர்)

**முதற் பரிசு : ரூபா 10,000/= இரண்டாம் பரிசு: ரூபா 5,000/= மூன்றாம் பரிசு: ரூபா 3,000/=**

ஏனைய ஏழு சிறுகதைகளுக்கு பரிசுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**போட்டிக்கான விதிகள்:** சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருத்தல்வேண்டும். போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர், முகவரி போன்ற விடயங்களை வேறாக இணைத்தல்வேண்டும். தபால் உறையின் இடது பக்க மூலையில் "அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி" எனக் குறிப்பிடப்படல்வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:** ஞானம் அலுவலகம் - 3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 06.

**போட்டி முடிவுத் திகதி: 30.07.2023**

முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கதைகள் போட்டியில் சேர்க்கப்படமாட்டாது. - **ஆசிரியர்**





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'பூமியிலிருந்து பல கோடி ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள ஒரு நட்சத்திரத்தினை நாம் பார்க்கும் போது அதன் பால்ய பருவம் தெரிவது போல... பிரபஞ்சத்தின் பல ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள கோள் ஒன்றில் வசித்துக்கொண்டிருக்கும் உயிரினம் எமது பூமியை பார்த்தால் அதுவும் ' காலப்பயணம்' செய்து எமது பூமியில் 'டைனோசர்கள்' வாழ்ந்த காலத்தை காணமுடியும்...

அப்பா தந்த இந்த விளக்கம் எனக்கு நல்ல தெளிவைத் தந்தது! எனினும் 'டைனோசர்கள்' இப்போ வாழ்ந்து கொண்டிருந்தால் மனித குலம் நீடித்திருக்க முடியாதல்லவா என்ற வருத்தமும் என்னை தொட்டது.

கனவில் அப்பா தனது சால்வையால் வியர்வையை அழுத்தி துடைத்தபடி...

'இப்போதும் ஐஸில் டைனோசர்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன' என்று கூறி மறையவும் நானும் விழிப்பு நிலைக்கு வந்தேன்.

பிரபஞ்சத்திற்கும் ஒளிக்கும் உள்ள தொடர்பு என்ன? அப்பாவுக்கும் வைரவருக்கும் உள்ள தொடர்பு என்ன? எனது உறவினர்கள் அனைவருமே நல்ல நிலையில் இருக்கின்றார்கள். பலர் வெளி நாடுகளுக்கு சென்றுவிட்டார்கள். இங்கு தங்கிவிட்டவர்களுக்கு பண உதவியும் பொருளுதவியும் செய்கிறார்கள். வெகு சிலர் என்போன்று அரச உத்தியோகத்தில் நிதானமாக வாழ்கின்றார்கள். இதில் எல்லாம் அப்பாவின் பங்களிப்பும் வைரவரின் பங்களிப்பும் நிச்சயமாக இருக்கின்றதென்பதில் நான் நூறு வீதம் உறுதியாக இருக்கின்றேன்!

'ஐஸில்' ' டைனேசர்கள்' வாழ்ந்து கொண்டு இருக்கின்றன என அப்பா கூறியது பூமியில் உள்ள மக்கள் இன்னமும் ஆபத்தில்தான் இருக்கி றார்கள் என்பதையே உணர்த்தி நிற்கிறது!

இந்நாட்களில் 'ஐஸ்' பற்றி அதிகம் பேசப் படுகின்றது. அது ஒரு போதை பொருள். அப்பாவின் காலத்தில் இருந்ததை போல கஞ்சா, அபின் போன்ற இயற்கை தயாரிப்புக் களல்ல அவை. எப்படி இருப்பினும் எமது நாட்டில் பற்றுக்கொண்ட எவரும் கஞ்சா, அபின் போன்ற போதை பொருட்களை கூட ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

ஐஸ் போதைபொருள் இரசாயனத்தில் இருந்து உற்பத்தி செய்யப்படுவது. இன்று இளைஞர்கள் பலரும் யுவதிகள் பலரும் இரசாயன பாலுறவிற்கு அடிமைகளாகி விட்டார்கள்!

எமது இளம் சமுதாயத்தின் ("எதிர்") காலப் பயணம்தான் என்ன?

ooo

---

# உலக நிலை!

நேர் நேர் சந்திப்பு
ஆரத்தழுவி
அன்பு பொழிதல்.
சுகம் விசாரிப்பு

நோய் நொடிகள் வந்தால்
முகங்கள் சோகமாகி
முதலுதவி செய்வதாய்
முன்னின்று அழைக்கும்

பேச்சுச் சுதந்திரம்
பலதையும் பேசி
அன்பு பொழியும்.
நாட்கள் சென்றால்
எல்லாம் மறந்திருப்பார்.

உதவி கேட்டு
உரிமையாய் செய்திட
எல்லாம் மறந்து
உலகு இயங்கும்

உறவு என்று
உள்ளம் குளிர்வோர்
ஏது சுகம் என்றும் கேளார்.
எதுவும் நடந்தால்
எட்டிப் பார்க்கார்.

இன்றைய உலகம்
எடுத்து அடி வைப்பதே
தங்களின் நலத்தில்
நாளும் சேரும்.

தனக்கென வாழாப்
பிறர்க்குரியாளராய்
இன்றும் சிலர்
இந்த மண்ணில்
வாழுகின்றார்!

– வதிரி.சி.ரவீந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோழக் குந்தவையர் நால்வர்! பெயரும் தமிழன்று!!

சோழர் வரலாற்றை ஒவ்வொரு கோணத்தில் பார்க்கச் செய்து பேச வைத்த படம் 'பொன்னியின் செல்வன்!'

"படம் நெடுகிலும் இயக்குனர் தெரிகிறார். கல்கியும் கதையும்தான் காணாமல் போய் விட்டார்கள்" – என்றொரு கருத்தை 'முனைவர் (கலாநிதி) **இரா.கற்பகம்** என்பார் முன்வைத் துள்ளார் 'தினமணி' மூத்த நாளேட்டில்.

மறுபடியும் பேசும் சந்தர்ப்பம் இந்த ஏப்ரல் 28இல் ஏற்படப்போகிறது. அதன் 02ஆம் பாகத்திரையிடலில்,

அருள்மொழி வர்மன் என்ற இராஜ ராஜ சோழனை 'பொன்னியின் செல்வன்' என்றழைப்பது போல் திரிஷாவையும் (ஓ! தடுமாறுகிறது மூத்த பேனை!) குந்தவையையும் 'பொன்னியின் செல்வி' என அழைக்கலாம்.

இருவரும் அக்காவும் தம்பியும் என்பதுடன், இரட்டையர்களும் கூட! இதைப் பெரிதாகப் பதிந்து விடவில்லை வரலாற்றாசிரியர்கள். போகட்டும்.

இவர்களது தந்தை சுந்தரச்சோழன் (கி.பி. 956-973) இவனது தகப்பன் அரிகுல கேசரி அரிஞ்சயன். அவனுக்கு அப்பா முதலாம் பராந்தீகச் சோழன் (கி.பி. 907-955) அனைவருமே சோழவளநாட்டை ஆண்டவர்கள். 1,100 ஆண்டுகளை எட்டும்.

மேற்குறித்த முதலாம் பராந்தகனின் 03ஆம் புத்திரனே அரிலகேசரி அரிஞ்சயன். இவனாலேயே முதன் முதலாக சோழ வரலாற்றில் **'குந்தவை'** என்ற பெயர் அறிமுகமாகிறது. (10ஆம் நூற்றாண்டு)

அதாவது, நாமறிந்த புகழுக்குரிய குந்தவை பிராட்டியார் அல்லது குந்தவை நாச்சியாருக்கு அப்பெயர் ஏற்பட்டது.

தாத்தா அரிஞ்சயன் வழியில் அவன் கைப்பிடித்தவள் மூலமாக!

ஓர் இளவரசனாக அவன், பக்கத்து ஆந்திரப் (தெலுங்கு) பிரதேசத்தில் கால் பதித்து (கி.பி. 956-957), அங்கே சாளுக்கிய அரச வம்சத்தின் **'லட்சுமி'**யைக் கரம் பிடித்துத் தமிழ் நாட்டுக்குக் கூட்டி வந்தபோது குந்தவை என்றே அறிமுகப்படுத்தினான். அத்தோடு 'வீமன்' என்றொரு பெயரையும் இணைத்து **'வீமன் குந்தவை'** என்றான். (இந்த வீமன் பெயர் ஒரு சாளுக்கிய அரசனுக்குரியது). எவ்வாறாயினும் லட்சுமி வெளிச்சத்திற்கு வரவில்லை.

ஆந்திர தெலுங்குப் பெண்ணின் லட்சுமி என்ற பிறப்புப் பெயர் அங்கேயே மறக்கப்பட்டு குந்தவையாகி விட்டதற்கு அதிசயமான காரணம் உள்ளது.

தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள ஆந்திராத (இப்பொழுது தெலுங்கானா) பிரதேசத்தவர். திருமாலை **'முகுந்தன்'** என்றும் **'குந்தன்'** என்றும் அழைப்பர்.

ஒருவர் மனைவி பெயர் 'லட்சுமி' என்றிருந்தால் **'குந்தவை'** என அழைப்பதை வழக்கத்தில் வைத்திருந்தனர்.


ஆக, சோழர் ஆட்சியில் முதலாவது குந்தவை அந்தச் சாளுக்கிய இளவரசி லட்சுமியே! வரலாற்றில் அவள் முக்கியத்துவம் பெறவில்லை. அரண்மனை அந்தப்புர வாழ்க்கை. அவ்வளவே.

அதற்குக் காரணம் ஒன்று இருந்தது. அரிஞ்சயன் சேரநாட்டுப் (கேரளம்) பெண் குட்டி ஒருத்தியின் மையலில் மாட்டிக் கொண்டான்.

கல்யாணி என்ற அந்த மலையாளப் பெண்ணுக்குப் பிறந்தான் ஓர் ஆண் சிங்கம்.

அவனே சுந்தரச்சோழன் எனப் பெயர் கொண்டு 'இரண்டாம் பராந்தகச் சோழன்' எனப் பிற்காலத்தில் புகழ்கொண்டான். (கி.பி. 956 – 973). **வானவன் மாதேவி** துணைவியானாள்.

ஆட்சிப் பீடத் திலிருந்த அந்தச் சுந்தரச் சோழனி டம் பெருங் குணங்கள் பல மண்டிக் கிடந்தன. அதிலொன்று – தந்தையின் முதல்தாரமும்,



**தமிழ்மணி மானா மக்கீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குப் பெரியம்மா முறையுமான, லட்சுமி யானவளது 'குந்தவை' வழக்குப் பெயரை தன் அருமை பெருமையான ஒரே மகளுக்கும் சூட்டி அழகு பார்த்தான். அதை அவன் அன்னை கல்யாணிக்குட்டி கூட ஆட்சேபித்தாளில்லை.

எவ்வாறாயினும், அவளுக்கு 'மந்தாகினி' என்றும் மற்றொரு பெயர் இருக்கவே செய்தது. இன்னும் ஓரிருவருக்கும் இருந்தது.

ஆக - இந்த இரண்டாம் குந்தவை தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, கேரளம், ஆந்திரம், இலங்கையிலும் கடாரத்திலும் தன் தம்பியின் (இராஜராஜ சோழன்) ஆட்சி மகிமையால் பிரபலமானாள்.

இவள் குறித்த இன்னும் பல அதிசயத் தகவல்களும் அபூர்வச் செய்திகளும் ஏராளம்! தாராளம்!!.

இங்கே, 'குந்தவை' என்ற பெயரின் பாரம்பரித்தை மட்டுமே பதித்திருக்கிறேன்.

அவளைச் சுற்றிச் சூழ்ந்திருக்கிற பல அதிரடி அதிசயத் தகவல்களை ஒரு தனித் தொகுப்பாக வழங்கிவைக்க இந்த மூத்த பேனையிடம் திட்டம் இருப்பதால் இத்தோடு நிறுத்தி **மூன்றாவது குந்தவை'**யை அறிமுகப்படுத்த விழைகின்றேன்.

இவள், நமது 'பொன்னியின் செல்வன்' (அருள்மொழி வர்மன்) இராஜராஜ சோழனின் மகள்!.

தன் தாத்தா (அரிஞ்சயன்) – தந்தை (சுந்தரச்சோழன்) போலவே நடந்து கொண்டான் இராஜராஜன்.

எப்படி தந்தை, தனது பெரிய தாயாரை, நினைவு கூர்ந்து தனது மகளுக்கு பெயர் வைத்தாரோ. அதேபோன்று பாசத்திற்கும் நேசத்திற்கும் உரியவளும் வழிகாட்டியு மானவளுமான அக்கா குந்தவை பெயரை தன் மகளுக்கு சூட்டி மகிழ்ந்தான்.

இந்த மூன்றாம் குந்தவையை மணம் செய்தவன், கீழைச்சாளுக்கிய வேங்கி நாட்டு இளவரசனாக இருந்து பின்னர் அரசனான (கி.பி. 1011) விமலாதித்தன், அவனது பட்டத்து ராணியானதோடு சரி. பிரபலமாகிவிட்ட பெயரை வைத்து அவள் வெளிச்சத்துக்கு வரவில்லை.

இனி, இறுதியான நான்காம் குந்தவை யாரென்பதைத் தெரிந்து கொள்வோம்.

அதற்கு முன் அபிமானிகள் ஒன்றில் தெளிவாக இருக்கவேண்டும்.

பொன்னியின் செல்வனாகிய அருள்மொழி வர்மன் இராஜராஜனின் சோழ ஆட்சி, அவனுக்கு முன், தாத்தா (அரிஞ்சயன்) தந்தையார் (சுந்தரச்சோழன்) காலத்திலும் கோலோச்சி நின்றது. அவன் மறைவுக்குப்பின்னும் (கி.பி. 1014) அதே!

அந்த வகையில், பொன்னியின் செல்வன் இராஜராஜனின் மைந்தன் முதலாம் இராஜேந்திரன் (ஆட்சிக் காலம் கி.பி. 1012 – 1044), அவனைத் தொடர்ந்து முதலாம் குலோத்துங்கன், (கி.பி. 1070 – 1120), மற்றும் இவனுக்குப் பிற்பட்ட அரசர் கள் என 1279வரை நீள்கிறது.

"முந்நூறு ஆண்டுகளைக் கடந்தது அரசு" என்று பதித்துள்ளார் பேராசிரியர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார் தனது ஆய்வு நூலில். நாம் நாலாவது குந்தவையை இந்த முதலாம் குலோத்துங்கன் அரண்மனையில் காண முடிகிறது.

அங்கே அவள் அவனது சகோதரியாக வலம் வருகிறாள்.

குறிப்பிடும்படியாக வேறு தகவல்கள் என் மூத்த பேனைக்கு அகப்படவில்லை.

இவ்வெழுத்துக்களின் இறுதிப் பகுதிக்குள் நுழைகிற பொழுது ஓர் அதிசயத்தைச் சொல்லி நிறுத்த வேண்டும்.

அந்தப் பத்து, பதினோராம் நூற்றாண்டு களில், சோழர் ஆட்சியில் - குறிப்பாக புதுக் கோட்டை, திருச்சி, தஞ்சாவூர்ப் பகுதிகளில் குந்தவை எனப் பெண் குழந்தைகளுக்குப் பெயர் வைப்பதை ஒரு வழக்கமாகக் கொண்டிருந் தார்கள்.

அந்த அளவுக்கு, பொன்னியின் செல்வன் இராஜராஜ சோழனின் தமக்கை குந்தவை மக்களின் மனங்களில் மனைகளில் இடம் பிடித்திருந்தாள். ஏனைய மூவருக்கும் அது வாய்க்கவில்லை.

இவளது வாழ்க்கையின் இன்னொரு பாகமும் - உள்ளது. இப்பொழுது 'பொ.செ.' 02ஆம் பாகம் வந்திருப்பது போலல்ல நூல்களில் உள்ளன.

இறைசித்தம் இருப்பின் இதே 'ஞானம்' இலக்கிய இதழில் இன்னொரு சமயம் இடம்பெறும்.

## உசாத்துணை நூல்கள்


- "சோழர் கண்ட புத்தகம் 01 (1953-1937)
- பேராசிரியர் சி. ஏ. நீலகண்ட சாஸ்திரி
- "தென்னிந்திய வரலாறு" - பேராசிரியர் சி.ஏ. நீலகண்ட சாஸ்திரி - தமிழாக்கம் : 'சிற்பி' சரவணபவன், 'கலைச்செல்வி' ஆசிரியர். பதிப்பு: 1966.
- "பிற்காலச் சோழர் வரலாறு" – தி. வை. சதாசிவ பண்டாரத்தார்.


ooo




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



பேராசிரியர் துரை மனோகரன்

### பேசப்படவேண்டியவர்கள்

கண்டியை மையமாகக் கொண்டு செயல் பட்டுவரும் மலையகக் கலை கலாசாரச் சங்கம், ஆண்டுதோறும் பல்வேறு துறை சார்ந்தவர்களுக்கு "இரத்தின தீபம்" என்ற நல்விருதை வழங்கிக் கௌரவித்து வருவதோடு, மறைந்த கலைஇலக்கியவாதிகளையும் அவ்வப்போது நினைவுகூர்ந்து வருகிறது இவ்வகையில், அண்மையில் பிரபல சிங்கள நடிகர் காமினி பொன்சேகா, பிரபல இயக்குநரும், ஒளிப்பதிவாளருமான லெனின் மொறாயஸ், ஊடகவியலாளர் எம். எஸ். குவால்தீன் ஆகியோருக்கான நினைவேந்தல் நிகழ்ச்சியும், பிரபல சமூக சேவையாளர் சிதம்பரநாதனது 80ஆவது வயதுப் பாராட்டுவிழாவும் கண்டியில் நடைபெற்றன. வழமைபோலச் சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரமுகர்கள் பலரும் விழாவில் கலந்துகொண்டனர். இன்றைய பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மத்தியில், இத்தகைய நிகழ்ச்சிகளை அவ்வப்போது நடத்திவரும் அவ்வமைப்பின் ஸ்தாபகத் தலைவர் ராஜா ஜென்ஸ்கின்னையும், அவரோடு ஒத்துழைப்பவர்களையும் மனமாரப் பாராட்ட வேண்டும்.

காமினி பொன்சேகா நாடறிந்த நல்ல திரைப்பட நடிகர். 1979இல் அவர் நடித்து வெளிவந்த சருங்கலே என்ற திரைப்படத்தைக் கண்டி வெம்பிளி தியேட்டரில் பார்த்தேன் (தற்போது அத்தியேட்டர் இல்லை. கட்டிடம் மாத்திரமே இருக்கிறது). அத்திரைப்படத்தில் நடராஜா என்ற தமிழ்ப் பாத்திரம் ஏற்றுக் தமிழிலும் பேசிக் காமினி பொன்சேகா நடித்திருந்தார். பேராசிரியர் சுனில் ஆரியரத்ன அதனை இயக்கியிருந்தார் (அப்போது அவர் விரிவுரையாளர்). நன்றாகத் தமிழ் பேசக்கூடிய சிங்கள நடிகராகக் காமினி பொன்சேகா திகழ்ந்தார். பல சிங்களப் படங்களில் நடித்துப் புகழ் பெற்ற கதாநாயக நடிகராக விளங்கியதோடு, தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட நீலத் திரைக்கடல் ஓரத்திலே என்ற தமிழ்ப்படத்திலும் நடித்திருந்தார். அப்போதைய சிங்களத் திரைப்பட உலகில், துணை நடிகர்களை மதித்து உபசரிக்காத நிலையில், அவர்களுக்குத் திரைப்படத் தயாரிப்புகளின்போது மரியாதை அளிக்கும் நல்ல பாரம்பரியத்தை ஏற்படுத்திக்கொடுத்தவர் காமினி பொன்சேகாவே என்பதைத் தம்பிஐயா தேவதாஸ் தமது நூல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். காமினி பொன்சேகாவைக் கௌரவிக்கும் முகமாக, அண்மையில் கொழும்பில் திறந்து வைக்கப்பட்ட திரைப்பட ஸ்ரூடியோ ஒன்றுக்கு, அவரது பெயரைச் சூட்டியுள்ளனர்.

தமிழரான லெனின் மொறாயஸ், இந்தியாவில் திரைப்பட ஒப்பனைக்கலையில் பயிற்சி பெற்றுவிட்டு, நாடு திரும்பி, சிங்களத் திரைப்படத்துறையில் உதவி ஒளிப்பதிவாளராகப் பணி புரியத் தொடங்கினார். காலப்போக்கில் பிரதான ஒளிப்பதிவாளராக வளர்ச்சி பெற்றுப் புகழ்பெறத் தொடங்கினார். காலப்போக்கில், சிங்களத் திரையுலகில் பேசப்படக்கூடிய ஓர் இயக்குநராகவும் வளர்ச்சி பெற்றார். இவரது பெரும்பாலான திரைப்படங்களில் காமினி பொன்சேகாவே கதாநாயகனாக நடித்தார். கீதா குமாரசிங்கவைத் திரையுலகில் அறிமுகப்படுத்தியதும், விஜயகுமாரணதுங்கவைக் கதாநாயகன் ஆக்கியதும், தமிழ் நடிகையான ஹெலன்குமாரிக்குச் சிங்களத் திரைப்படங்களில் அதிக வாய்ப்புகளை வழங்கியதும் லெனின் மொறாயஸே என்பதைத் தம்பிஐயா தேவதாஸ் தெரிவித்திருக்கிறார். லெனின் மொறாயஸ், யார் அவள்? என்ற "டப்பிங்" படத்தைத் தமிழில் தயாரித்தார். அத்தோடு, நெஞ்சுக்குத் தெரியும் என்ற தனித் தமிழ்ப்படத்தையும் தயாரித்தார். 1983 கலவரத்தில் அத்திரைப்படச் சுருள் எரியுண்டுபோனது.

முஸ்லிம் விவாகப் பதிவாளராகக் கடமையாற்றிய எம். எஸ். குவால்தீன், கண்டியின் பிரபல ஊடகவியலாளருள் ஒருவராக விளங்கினார். எல்லோருடனும் பண்புடன் பழகும் இயல்பு அவருடையது. கண்டி மாவட்ட ஊடகத்துறை வளர்ச்சியில் அவரது பணிகள் போற்றப்படத்தக்கன. இதே நிகழ்ச்சியில் கௌரவிக்கப்பட்ட சிதம்பரநாதன், கண்டியின் பிரபல சமூகசேவையாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டு நல்ல நிகழ்ச்சிகள்

இலங்கையின் இரண்டு தொலைக் காட்சிகளில், திங்கள் முதல் வெள்ளி வரை காலை நேரத்தில் அடுத்தடுத்து இரண்டு நல்ல நிக்ழ்ச்சிகள் ஒளிபரப்பாகின்றன. ஒன்று, சக்தி ரீ.வியில் காலை 8 மணி முதல் 9 மணி வரை ஒளிபரப்பாகும் நெஞ்சம் மறப்பதில்லை என்ற நிகழ்ச்சி மற்றது, வசந்தம் ரீ.வியில் காலை 9 மணி முதல் 10 மணி வரை ஒளிபரப்பாகும் நினைத்தாலே இனிக்கும் என்ற நிகழ்ச்சி. இரண்டுமே பழைய தமிழ்த் திரைப்படப் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சிகள். இவை இரண்டும் என் போன்ற பழைய திரைப்படப் பாடல்களை விரும்பி ரசிக்கும் பல்லாயிரக்கணக்கான ரசிகர்களை மகிழ்விக்க வல்லன. நான் நீண்ட காலமாக இலங்கை வானொலியில் காலை நேரத்தில் ஒலிபரப்பாகும் பழைய பாடல் நிகழ்ச்சியைக் கேட்டு மகிழ்ந்து வந்திருக்கிறேன். இந்த நிகழ்ச்சிகளும் என்னை மிகவும் கவர்ந்திருக்கின்றன.

சக்தி ரீ.வியில் ஒளிபரப்பாகும் நெஞ்சம் மறப்ப தில்லை நிகழ்ச்சியை, முன்னர் ஒரு பெண்மணி நிகழ்த்திவந்திருந்தார். உண்மையில் அவருக்குத் திரைப்படம் பற்றி ஒரு மண்ணும் தெரியாது. வெறும் ஓர் அலங்காரப் பொம்மை போல நிகழ்ச்சியில் வந்துபோவார். அதனைத் தெரிந்தோ என்னவோ, தொலைக்காட்சி நிர்வாகத்தினர் கடந்த ஆண்டு முதல் புதியவரை நியமித்துள்ளனர். பிரணீத்தா என்னும் பெயரைக் கொண்ட அவர், திரையுலகு பற்றித் தெளிவான அறிவுடன், நிகழ்ச்சியைச் சிறப்பாகச் செய்துவருகின்றார். அவ்வப்போது கவனக்குறைவால் சில தகவல் தவறுகள் விடுவதுண்டு. ஆயினும், அக்கறையுடன் நிகழ்ச்சியை நன்கு செய்கிறார். இன்னொரு நல்ல விடயம், இன்றைய பெரும்பாலான தொலைக் காட்சி அறிவிப்பாளர்களைப் போல், அவர் தமிழைக் கொன்று தின்பதில்லை. இயன்றவரை தமிழை அழகாகப் பயன்படுத்த முயற்சிக்கின்றார். பிரணீத்தா பாராட்டப்படவேண்டிய ஓர் அறிவிப்பாளர்.

வசந்தம் ரீ.வியில் ஒளிபரப்பாகும் நினைத்தாலே இனிக்கும் நிகழ்ச்சியை, இலங்கை யின் சிறந்த ஒலிபரப்பாளர், ஒளிபரப்பாளர்களில் ஒருவரான நாகபூஷணி அழகாகச் செய்கிறார். அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எமது மாணவியாகக் கற்றவர் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி. திங்கள் முதல் வியாழன் வரை நேயர்கள் பிரதிகள் மூலமும், வெள்ளிக்கிழ்மைகளில் நேயர்கள் நிகழ்ச்சியில் நேரடியாகவும் கலந்து கொள்கின்றனர். தமிழை, அதன் அழகு குன்றாமல் சிறப்பாகப் பயன்படுத்தும் இலாவகத்தை நாகபூஷணி இயல்பாகவே கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது. தமிழின் அழகையும், சிறப்பையும் தங்கள் வாய்களினால் சிதைக்க முயலும் பெரும்பாலான தொலைக்காட்சி, வானொலி அறிவிப்பாளர்கள், நாகபூஷணியை முன்னோடியாகக் கொண்டாவது எதிர் காலத்தில் தங்கள் தமிழ்க்கொலையைத் திருத்திக்கொள்ளவேண்டும். அத்தகையவர் களின் தமிழ், ஆங்கிலம் கலந்து உருட்டிப் புரட்டுகின்ற அறிவிப்புகளைப் பார்க்கும்போதும், கேட்கும்போதும் எரிச்சல் எரிச்சலாக வருகிறது. அவர்களது அலங்கோலத் தமிழுக்கிடையில், நாகபூஷணியின் அழகான தமிழைப் பார்க்கும் போதும், கேட்கும்போதும் மனம் நிம்மதி அடைகிறது. நாகபூஷணி போன்ற தமிழை அழகுபடுத்துகின்ற அறிவிப்பாளர்களைப் பொதுமேடையில் வைத்துப் பாராட்டவேண்டும். அப்போதுதான், தமிழ்க்கொலை புரிகின்ற அறிவிப்பாளர்களுக்குக் கொஞ்சமாவது "புத்தி"வரும்.

## வேடிக்கை மனிதர்கள்

நமது நாட்டு மக்களில் ஒருசாரார் இருக்கி றார்களே, அவர்களைப்போல வேடிக்கை மனிதர்களைக் காண்பது அபூர்வம். அரசியல் சட்டத்தைக் கிழித்தெறிவார்கள். சமயவேடம் பூண்டுகொண்டு என்னென்னவோ செய்வார்கள். சிறுபான்மையினருக்கு எதிராக அவ்வப்போது கிளர்ந்தெழுவார்கள். பேரினவாதத்தையே நாட்டுப்பற்றாக நிலைநிறுத்திக் கொள்வார்கள். தங்கள் வடிகட்டின முட்டாள்தனத்தையே புத்திசாலித்தனமாகக் காட்டுவார்கள்.

இந்த இலட்சணத்தில், அண்மையில் புதிய வேடிக்கை நிகழ்ச்சி ஒன்றும் நாட்டில் நடைபெற்றுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடம் அரசு கடன் பெற்றமையைக் கொண்டாடுமுகமாக, ஒருசாரார் வீதிகளில் பட்டாசு வெடித்துக் குதூ கலமாக நடந்துகொண்டிருக்கிறார்கள். வீட்டுக் கஷ்டத்துக்காகக் குடும்பத் தலைவன் வெளியில் கடன் வாங்கி வீட்டுக்குக் கொண்டுவர, பிள்ளைகள் சந்தோஷமாக வெடிகொளுத்திக் கொண்டாடுவது போல இருக்கிறது, இந்த நிகழ்ச்சி. முட்டாள்தனத்துக்கும் ஓர் அளவு வேண்டாமா?

○○○


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் கே.பொன்னுத்துரை

# சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்





## அந்தனி ஜீவாவிற்கான கௌரவிப்பு



இலங்கை தமிழ்இலக்கிய நிறுவகமும் இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து, அந்தனி ஜீவாவிற்கான கௌரவிப்பு நிகழ்வினை 06-03-23 அன்று கொழும்புத் தமிழ்ச்சங்க விநோதன் மண்டபத்தில் நடத்தியது. வவுனியூர் இரா உதயணன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கௌரவிப்பு உரைகளை ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரன், கவிஞர் சு. முரளிதரன், தெ. மதுசூதனன், ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி, திரு. தே. செந்தில்வேலவர், கவிஞர் மேமன்கவி ஆகியோர் நிகழ்த்தினர் நன்றி உரையை கே. பொன்னுத்துரையும் ஏற்புரையை அந்தனி ஜீவாவும் நிகழ்த்தினர்

•••



## அற்றைத்திங்கள் நிகழ்வில் பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் 06-03-2023 அன்று இடம்பெற்ற அற்றைத்திங்கள் நிகழ்வில் பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு தமது வாழ்வியல் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். இந்நிகழ்விற்கு கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. நடராஜர் காண்டீபன் தலைமை தாங்கினார்.

•••

## இலக்கியக்களம் நிகழ்வில் ஸ்ரீதயாளன் பன்முகப்பணிகள்

கொழும்புத் தமிழ்ச்சங்கம் நிகழ்த்தும் இலக்கியக்களம் நிகழ்வில் 10-03-2023 அன்று ஸ்ரீதயாளன் பன்முகப்பணிகள் பற்றிய உரைகள் இடம்பெற்றன. கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் நடராஜர் காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரன், காரைக்கவி கந்தையா பத்மானந்தன், திரு. செல்வ திருச்செல்வன், திரு. தெ. மதுசூதனன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். ஏற்புரையை திரு. ஸ்ரீதயாளன் வழங்கினார்

•••







## கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் நிறுவுனர் தின விழா

கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் நிறுவுனர் தின விழா 22 -03-2023 அன்று சங்கத்தின் துணைத்தலைவர் மா.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. நிகழ்வு தொடர்பான படங்களை இங்கு காணலாம்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

நாயன்மார்களான திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் நாகபட்டினத்தை **நாகை** என்று குறிப்பிட்டு தேவாரங்களிலே பாடியுள்ளனர். இங்கு இராஜராஜசோழன் சூடாமணி விகாரத்தை புனருத்தாரணம் செய்தான் என்கின்ற வரலாற்றுத் தகவலும் உண்டு. தமிழ் நாட்டிலுள்ள இந்த நாகபட்டினமானது 1658ஆம் ஆண்டு போர்த்திக்கீசர்களின் ஆட்சியின்கீழ் வந்தது. புவியியல் அமைப்பிலே நாகபட்டினமானது இந்தியாவில் இருந்தாலும் 1673ஆம் ஆண்டு தொடங்கி 1680ஆம் ஆண்டுவரை போர்த்திக்கீசர்களால் ஆட்சி செய்யப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் கீழேயே இருந்துள்ளது. இக்காலப்பகுதியிலே இலங்கையிலே பயன்படுத்தப்படும் நோக்கத்துடன் நாகபட்டினத்திலே நாணயங்கள் பொறிக்கப்பட்டன.






நான்கு வகையான நாகபட்டனம் நாணயங்கள்.
1 - 56.44 கிராம்
2 - 28.08 கிராம்
3 - 3.80 கிராம்
4 - 1.57 கிராம்



நான்கு நாணயங்களின்
முன்புறமும்
பின்புறமும்



யாழ். மாநகர சபை
1 APR 2023

போர்த்திக்கீசர்களால் வெளியிடப்பட்ட நாகபட்டின நாணயத்தின் முன்புறத்திலே ஒரு மனித உருவ அமைப்பு உள்ளது. இந்த அமைப்பானது **பெண் காளி – துர்க்கை** தெய்வத்தைக் குறிக்கின்றது. காளியின் இடதுபுறத் தோளிலே செல்வத்தைக் குறிக்கும் ஷிபிகா என்கின்ற ஆயுதம் உள்ளது. ஒரு புள்ளியும், புள்ளியுடன்கூடிய கோலுமாக இந்த ஷிபிகா காட்டப்பட்டுள்ளது. மார்பகங்களுக்கு கீழே மூன்றும் இரண்டுமாக 5 புள்ளிகளும் கீழே நான்கு கால்கள் போன்ற அமைப்பும் உள்ளன. இந்த அமைப்பை தஞ்சாவூர் காளி – துர்க்கை தெய்வமாக ஆய்வாளர்கள் கருதுவர்.
இலங்கை நாட்டின் பயன்பாட்டுக்காக வெளியிடப்பட்ட இந்த நாணயங்கள் முறையே Doit மற்றும் Stiver ஆகிய போர்த்திக்கீச பண அளவுகளைக் கொண்டவையாக அமைந்துள்ளன.
இந்த நான்கு நாணயங்களிலே 3.80 கிராம் கொண்ட நாணயத்தைத் தவிர்ந்த பிற மூன்று நாணயங்களும் கிடைப்பதற்கு மிகமிக அரியனவாகும். நான்கு நாணயங்களை தற்காலத்திலே ஒருமித்துக் காண்பது என்பது முயற்கொம்பான காரியமாகும்.




(குறிப்பு : இக்கட்டுரையில் காட்டப்பட்ட நாணயங்கள் யாவும் ஆசிரியரின் தனிப்பட்ட சேகரிப்பிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/60/2023






### (09) இராஜராஜன் வெளியிட்ட பாத உருவம் கொண்ட நாணயம்

இலங்கையிலே தங்க நாணயங்களை வெளியிட்ட இராஜராஜ சோழன், ஸ்ரீராஜராஜ என்று தேவநாகரியில் பொறிக்கப்பட்ட செப்பு நாணயங்களையும் வெளியிட்டுள்ளான். பல்லாயிரக்கணக்கான எண்ணிக்கையில் இந்தியாவிலும் நூற்றுக்கணக்கில் இலங்கையிலும் இன்றும் இந்த நாணயங்கள் கிடைத்தவண்ணம் உள்ளன. இந்த நாணயங்கள், முற்பக்கத்திலே சிற்சில மாற்றங்களுடனும் இராஜராஜ சோழனின் ஆட்சியில் வெளிவந்ததாக அறியமுடிகின்றது. முக்கியமாக, நிற்கும் மனித உருவத்துக்கு அருகிலே இந்த மாற்றங்களைக் காணலாம். அந்த மாற்றங்களில் ஒன்று, பாத வடிவத்தைக் கொண்ட நாணயங்களாகும். சிலவற்றிலே பெரிய பாத வடிவமும் சிலவற்றிலே சிறிய பாத வடிவமும் காணப்பெறுகின்றன. இந்த நாணயங்கள் எண்ணிக்கையிலே மிகச் சொற்பமாகக் கிடைக்கப்பெறுகின்றன.

இந்த பாத அமைப்பை விஷ்ணுவின் பாதமாக ஒருசில ஆய்வாளர்கள் கருதினாலும் இந்த பாதமானது புத்தரின் பாதம் என்றும், இவை இலங்கையின் பயன்பாட்டுக்கான வெளியிடப்பட்டவை என்றும் பிற சில ஆய்வாளர்கள் கருதுவர். இவற்றின் உண்மைத்தன்மை துணிதலரிது. இருப்பினும் சிவனொளி பாத மலையிலே காணப்படும் பாத அமைப்பு மற்றும் மிகச் சொற்ப எண்ணிக்கையிலே கிடைக்கப்பெற்றுள்ள தன்மை ஆகியனவற்றை நோக்கும்போது இவை இலங்கைக்குரிய நாணயங்களாக அமைய வாய்ப்பு அதிகமுள்ளது என்று எண்ணத் தோன்றுகின்றது.




ஸ்ரீராஜராஜ என்று பின்புறத்திலே பொறிக்கப்பட்ட மூன்று நாணயங்கள். முதலாவது நாணயம் சாதாரணமானது. நடுவிலே இரண்டாவதாக உள்ள நாணயத்திலே மனித உருவத்தின் பாதி அளவிற்கு ஒரு பாத அமைப்பைக் காணலாம். மூன்றாவதாக உள்ள நாணயத்திலே சிறிய பாத அமைப்பு உள்ளது.

தொடரும்...

9 772478 034009
ISSN 2478-0340
PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., COLOMBO 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org